
# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

செப்ரெம்பர்.18 - செப்ரெம்பர்.24, 2013 பக்கம் - 24 30/-

# உரிமைக் குரலுக்கு மாகாணசபை பலம்

- விக்கியுடன் ஒரு நேர்காணல்

# தேர்தல் நீதிக் கதைகள்....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுத்து: உயிராபத்து!

பூமுகன்



> கண்ணிமைக்கும் நேரத்தில் விபத்துநடந்து முடிந்து விடும். அதன்பின் ஏங்குவதில் பயனில்லை. தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்ள ஒவ்வொருவரும் அக்கறை கொள்ளவேண்டும்.

அபிவிருத்தி பற்றிய விமர்சனங்களுக்கு அப்பால் இரண்டு தசாப்தங்களுக்கு பின்னர் கிளிநொச்சிக்கு ரயில் வந்திருக்கிறது. இது பொதுப்போக்குவரத்தின் திருப்புமுனைதான். அவசரக்காரர்களின் தேவைகருதி அரைகுறை பணிகளுடன் வரவழைக்கப்பட்டிருக்கும் ரயில் சேவை மக்களுக்கு ஆபத்தாக மாறியுள்ளது.

சில இடங்களில் சமிஞ்ஞைகள் இருந்தாலும் பலஇடங்களில் அவை அமைக்கப்படவில்லை. இதனால் மக்களுக்கு ஏற்படப்போகும் ஆபத்து தவிர்க்கமுடியாததாகியுள்ளது.

குற்றவாளிகள் என்று அரசுப்பக்கம் கைநீட்டினாலும் தவறுகள் பொதுசனங்கள் மீதும் இருக்கிறது.

**புதிய வரவு**

ரயில் வடக்குக்கு நீண்ட காலத்தின்பின் புதிய வரவாக உள்ளது. இதனால் ரயில் போக்குவரத்தின்போதான விதிமுறைகள் கட்டுப்பாடுகள் குறித்த அறிவு பெரும்பாலான மக்களிடத்து இருப்பதை எதிர்பார்க்கமுடியாது.

எனவே மக்களை விழிப்படைய வைக்க வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளது கடமையாகும். இல்லாதவிடத்து மக்களின் கட்டுமீறல்கள் உயிராபத்துக்களை ஏற்படுத்தும். அதன்பின் ஆர்ப்பாட்டம் நடத்துவதில் எந்த அர்த்தமும் கிடையாது.



கிளிநொச்சியில் கடந்த வாரம் இடம்பெற்ற சம்பவம் இதற்கு நல்ல உதாரணம்.

ரயில் வரவுக்காக கனகபுரம் வீதியில் இரு பக்கமும் ரயில் கடவைகள் மூடப்பட்டிருந்தன. 'என்ன குறுக்கால போவார் கம்பிய றோட் டில் போட்டிருக்கிறாங்கள்' என்பதுதான் பலபேரது நினைப்பு. நினைப்பு மட்டுமல்ல அதை தாண்டியும் சென்றுவிட்டனர். ரயில் வந்துகொண்டிருந்தது. ஐந்து நிமிடங்களில் கனகபுரம் வீதியை ரயில் கடக்கவேண்டும். நல்லவேளையாக கடமையிலிருந்த பொலிஸார் விரைந்து செயற்பட்டு பெரும் விபத்தை தவிர்த்துக்கொண்டனர்.

**குறுக்கு வீதிகள்**

ஏ-9 வீதிக்கு மேற்குப்பக்கமாக ரயில்பாதை செல்கிறது. இந்தபாதையை இடையிடையே கிராமப்புற வீதிகள் குறுக்கறுக்கின்றன. இவற்றுக்கான பாதுகாப்பு கடவைகள் முழுமைப் படுத்தப்படவில்லை.



பாதுகாப்பு கடவையையே மீறிச் செல்லும் மக்கள் பாதுகாப்பற்ற கடவையில் பொறுமை காப்பார்களா என்ன?

**மக்கள் பொறுப்பு**

விபத்துக்கள் இடம்பெறுவதற்கு காரணமாக ரயிலையோ, அதிகாரிகளையோ உடனடியாகக் குற்றம்சாட்டிவிடமுடியாது. பொதுமக்கள் தான் பொறுப்புடனும், விழிப்புடனும் நடந்து கொள்ள வேண்டும்.

பரீட்சார்த்த சேவையிலேயே கிளிநொச்சியில் ஒரு பலியெடுப்பு நிகழ்ந்திருக்கிறது. இதை மக்கள் நினைவில்கொள்ளவேண்டும்.

தற்போது கிளிநொச்சிவரை ரயில் சேவை இடம்பெறுகிறது. தினமும் மூன்று சேவைகள். நேர அட்டவணைப்படி குறிப்பிட்ட கடவைகளைத் தாண்டிச்செல்லும் நேரத்தை மக்கள் அவதானித்துக்கொள்ளவேண்டும்.

அதிகாரிகளது அறிவிப்பை முந்திக்கொண்டு, மக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த இதுவே சாத்தியம்.

ரயில்பாதைகளில் குழந்தைகளை விளையாடவிடுவது, சிறுபிள்ளைகளைகளையும் முதியவர்களையும் தனியே ரயில்பாதையை கடக்க விடுவது, ரயில் வருவதற்கான சமிஞ்ஞை விளக்குகளை அலட்சியம் செய்வது போன்ற காரியங்கள் உயிராபத்தை உண்டுபண்டும். கண்ணிமைக்கும் நேரத்தில் விபத்து நடந்து முடிந்து விடும். அதன்பின் ஏங்குவதில் பயனில்லை. தமது உயிரைப்பாதுகாத்துக்கொள்ள ஒவ்வொருவரும் அக்கறை கொள்ளவேண்டும். இது பொது விழிப்புணர்வாகிவிடும். புதிய வரவை இழப்புக்கள் இன்றி வரவேற்போம்.

# வருவாளா? ஏப்ரலில் வருவாளா .............!

ஒரு மாதிரி முக்கித்தக்கி தேர்தல் சாட்டோடு யாழ் தேவி கிளிநொச்சிவரை வந்துவிட்டது. யாழ் தேவியின் முதல் பயணியாக கால்பதித்து "சாதனைபடைத்த" ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ, "அடுத்த ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணத்துக்கும் யாழ்தேவி போகும்" என்று வாக்குக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்.

போர் முடிந்த கையோடு ஆரம்பித்த வீதி அகலிப்புப் பணிகள்கூட இப்போதுதான் நிறைவுக்கு வந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலையில் கிளிநொச்சியிலிருந்து காங்கேசன்துறை வரையிலான தண்டவாளத்தை மீளமைத்து, ஆங்காங்கே இருக்கின்ற புகையிரத நிலையங்களைப் புதிதாகக் கட்டி மீண்டும் தன் பிறந்த வீட்டுக்கு யாழ்தேவி ஏப்ரலில் வருவாள் என்பது சாத்தியமற்ற வாக்குறுதி என்கின்றனர் பொதுமக்கள். ஏனெனில் தண்டவாளப் பாதை அமைப்பதற்கே பெரும் சிரமங்களையும் கால விரயத்தையும் எதிர்கொள்ளவேண்டியிருக்கும். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக ரயில் சேவை நடைபெறாததால் தண்டவாளம் இருந்த இடங்களில் குடியிருப்புகளும், கோயில்களும் முளைத்து விட்டன. குடியிருப்பாளருக்கு மாற்று இடம் கொடுத்து அங்கிருந்து அகற்றும் பணிகள் ஆரம்பித்து விட்டன. ஆனால் கோயிலில் குந்தியிருக்கும் கடவுளர்களை எப்படி அப்புறப்படுத்துவது என்ற சிக்கல் தோன்றியுள்ளது. அப்படி அகற்றினால் தெய்வக்குற்றமாகிவிடும் என்ற பயமும் பணியாளர்களிடம் ஏற்பட்டுள்ளது. அதற்காக தண்டவாளப்பாதையையும் மாற்றமுடியாது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, சுமூகமாக தண்டவாளப் பாதையை அமைத்து முடிக்கவே இரண்டு வருடங்களுக்கு மேலாகிவிடும். இந்த நிலையில் எப்படி ஏப்ரலுக்கு யாழ் தேவி யாழ்ப்பாணம் வர முடியும்?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களத்தில் வரும் காணாமற் போனோர்!

■ அக்கினி புத்திரன்

வடக்கின் தேர்தல் களம் சூடு பிடித்து விட்டது!

பரப்புரைகள், சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், மிரட்டல்கள், அடிதடிகள், துப்பாக்கிச் சூடுகள் என எங்கும் ஒரே பரபரப்பு! மக்களிடம் பயப் பீதியும் கூட! அதே வேளையில் படையெடுப்புகளுக்கும் குறைவில்லை. அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிப் பிரமுகர்கள் எனப் பல்வேறு பிரமுகர்களின் சுறாவளிச் சுற்றுப் பயணங்கள்.

அடிக்கல் நாட்டல்கள், சிறப்பு விழாக்கள், உதவிப் பொருள் வழங்குதல்கள் தொடரூந்துப் பாதை திறப்பு எனப் பல விழாக்கள். தேர்தல் நடவடிக்கைகளுக்குத் தேவையான சில அடியாட்களும் இறக்குமதி செய்யப்பட்டு விட்டனர் என்றும் சில தகவல்கள்.

இப்படியாகத் தேர்தல் களம் நிறைந்து வழிந்து வடக்கில் ஒரே அலங்கோலங்கள். இந்த நிலையில் தான் களத்தில் காணாமற் போனோரில் பிரவேசம் நிகழ்ந்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளரின் மனைவி அனந்தி சசிதரன், காணாமற் போனோரைத் தேடிக் கண்டு பிடிக்கும் பணியில் தன்னை அர்ப்பணிக்கவும், காணாமற் போனோரின் உறவுகளுக்காகக் குரல் கொடுக்கவும் தேர்தலில் போட்டியிடுவதாகக் கூறித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ஒரு வேட்பாளராகக் களமிறங்கியுள்ளாார்.

ஏற்கனவே காணாமற் போனவர்களுக்காக நடத்தப்பட்ட பல போராட்டங்களில் இவர் முன்னணியில் நின்று செயற்பட்டவர். தற்சமயம் இப் பிரச்சினையை மனித உரிமை நிறுவனங்களுக்கும் சர்வதேச ஊடகங்களுக்கும் கொண்டு செல்வதற்கான சில மனிதாபிமான பங்களிப்பை மேற்கொண்டு வருகிறார். அவரது உரத்து ஒலித்த குரல், பலரையும் காணாமற் போனோரைத் தேடி தேர்தல் களத்தில் இறங்க வைத்து விட்டது. எல்லோருமே அவர்களைப் பற்றிப் பேசுகின்றனர். ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக.

கிளிநொச்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் திருமதி கீதாஞ்சலியின் கணவரும் காணாமற்போனவர்தான். அவர் அது தொடர்பாகப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. மாறாக மரணித்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த அரசிடம் அனுமதி பெற்றுத் தரப் போகிறாராம்!

மாவீரர் துயிலும் இலங்களில் மாவீரர் கல்லறைகளை உடைத்து நொருக்கி அவற்றின் மேல் முகாங்கள் அமைத்துக் குடியிருக்கும் இராணுவத்தினரிடம் கூடிக் குலவும் அவர், மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த அனுமதி பெற்றுத் தரப் போகிறாராம். ஆச்சரியம் தான்.

போரில் மரணித்த மக்களுக்கு ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் திருமதி நவநீதம் பிள்ளையை அஞ்சலி செலுத்த அனுமதியாத அரசிடம் மாவீரர் அஞ்சலிக்கு அனுமதி பெறப் போகிறாராம்.

இதுவும் கூடப் பெரிய ஆச்சரியம்தான்.

எங்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த நாம் எவரிடமும் அனும்தி பெற வேண்டியதில்லை. நாம் வருடா வருடம் விளக்கேற்றி அஞ்சலி செய்து கொண்டுதானிருக்கிறோம். சில



கிளிநொச்சிக்கு ஜனாதிபதி வந்தபோது மகிழ்ச்சி பொங்க அருகில் கீதாஞ்சலி.

சமயம் அவர் காணாமற்போன தன் கணவருக்காகக் குரல் கொடுப்பதற்கும் அரசாங்கத்தின் அனுமதிக்காகக் காத்திருக்கிறாரோ தெரிய வில்லை.

ஆனால் அனந்தி எவரின் அனுமதியையும் எதிர்பாராமலே தொடர்ந்து காணாமற் போனோருக்காகக் குரல் கொடுத்து வருகிறார்.

இப்போது அவரின் குரல் முன்னாள் முப்படைகளின் தலைமை அதிகாரி சரத் பொன் சேனாவை வாய்திறக்க வைத்துவிட்டது.

சரணடைந்த விடுதலைப்புலிகள் எவருமே காணாமாற்போகவில்லையென அடித்துக் கூறிவிட்டார் அவர். போரின் இறுதி மூன்று நாள்களும் நாட்டிலேயே இருக்காத அவருக்குக் காணாமற்போனது, போகாதது எப்படித் தெரியும் என்பது விளங்கவில்லை! எனினும் அவர் இப்படி உறுதியாகக் கூறி விட்டார்.

ஆனால் அனந்தி ஏராளமான மக்கள் முன்னிலையில் தனது கணவன் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட போராளிகள் ஒரு கத்தோலிக்கக் குருவானவர் தலைமையில் சரணடைந்ததாக ஆதாரபூர்வமாகப் பதிலளித்துள்ளார். சரத் பொன் சேகாவின் சத்தத்தைக் காண வில்லை? பாவம்! போர்க்குற்றம் தன் தலை யிலும் பொறிந்து விடுமோ என்ற அச்சத்தில் எவருமே காணாமற்போகவில்லை என அடித் துச் சொல்லி விட்டார்.

ஏற்கனவே முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரியாவால் அமைக்கப்பட்ட இராணுவ விசாரணைக்குழு எவருமே காணாமற்போகவில்லை எனத் தனது விசாரணை அறிக்கையில் தெரிவித்து விட்டது. பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஒரு படி மேலே போய் எவரும் காணாமற்போகவில்லை எனவும் அப்படிக் காணாமற்போயிருந்தால் ஐ.நா.நிறுவனமும் மருத்துவர் குழுவுமே பொறுப் புக் கூற வேண்டும் எனத் தெரி வித்து விட்டார்.

அது மட்டுமல்ல, அவர் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் எவரும் காணாமற்போகவில்லை எனவும் அப்படி எவரும் இருந்தால் பெயர் விவரங்களைத் தரும்படியும் கேட்டுள்ளார்.

இப்படியாகச் சரத்பொன்சேகா, ஜெகத் ஜெயசூரியா, கோத்தபாய ராஜபக்ஷ ஆகிய இராணுவத் தரப்பினர் எவருமே காணாமற் போகவில்லையென ஆணித்தரமாக மறுக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவோ காணாமற்போனோர் விடயத்தை ஒப்புக் கொண்டுவிட்டார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினை ஒரு உணர்வு பூர்வமான பிரச்சினை எனவும், அதை மீண்டும் மீண்டும் கிளப்ப வேண்டாம் எனவும் தென்னிலங்கையிலும் மக்கள் இதுபற்றிக் கேள்வி எழுப்புகிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.


அதாவது வடக்குக் கிழக்கிலும், தெற்கிலும் பலர் காணாமற்போனமையை அவர் சந்தேகமற ஒப்புக்கொண்டிருக்கிறார். காணாமற்போனதாகக் கூறப்படும் இராணுவத்தினர் காணாமற்போனவர்களல்ல. அவர்கள் போரில் மரணித்தவர்கள்.

முல்லைத்தீவு முகாம் விடுதலைப்புலிகளால் தாக்கியழிக்கப்பட்டபோது 600 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். அந்தச் சடலங்களைச் செஞ்சிலுவைச் சங்கமூடாகப் புலிகள் ஒப்படைக்க முயன்றபோது இராணுவத்தினர் ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

எனவே அவற்றை விடுதலைப்புலிகள் முறிகண்டியில் வைத்து இராணுவ மரியாதையுடன் எரியூட்டினர். இவ்வாறே 'வீர விக்கிரம' நடவடிக்கையின் போது வவுனியா கொந்தப்பியா குளத்தில் கைப்பற்றப்பட்ட 18 சடலங்களைப் படையினர் ஏற்க மறுத்தனர். அவை மல்லாவியில் எரியூட்டப்பட்டன. அடிப்படையில் இராணுவத்தினர் எவரும் காணாமற்போக வில்லை. இராணுவம் தங்கள் இழப்புகளை சிங்கள மக்களிடம் மறைத்து இன்றுவரை அவர்கள் காணாமற்போய்விட்டனர் என்று கூறி வருகிறது.

எப்படி இருப்பினும் தமிழர்களிலும் சரி சிங்களவர்களிலும் சரி காணாமற்போனவர்கள் பற்றிய உண்மைகளை அரசும், அரசபடையினரிருமே மறைத்தே வருகின்றனர். இன்று காணாமற் போனோர் பிரச்சினை தேர்தல் களத்தில் மட்டுமல்ல, சர்வதேச அரங்கிலும் களமேறி விட்டது. இதற்கு இலங்கை அரசு பதில் சொல்ல வேண்டிய நாள்கள் வெகு தொலைவில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேர்காணல்
ஔரீஷ்

# தமிழர்களின் உரிமைக் குரலுக்கு மாகாணசபை வெற்றி அவசியம்

**கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்சரன் செவ்வி**

**இராணுவத் தலையீடு, ஆயுதங்களை வைத்திருப்பவர்களின் அச்சுறுத்தல்கள் என்பன இன்னும் தொடர்கின்றன. இதுபற்றி சர்வதேசத்துக்கும் நாம் தெரியப்படுத்தி யிருக்கிறோம். அங்கிருந்து கிடைக்கும் அழுத்தங்கள் இந்த நிலையை மாற்றக்கூடும்.**

**கே:-** தம்மைப்போலவே கூட்டமைப்பும் இணக்க அரசியலை நோக்கிச் செல்வதற்காகவே உங்களை முதலமைச்சர் வேட்பாளராக அறிவித்துள்ளதாக அரசோடு இணக்க அரசியல் நடத்தி வருபவர்கள் சொல்கிறார்களே...?

**ப:-** அது உண்மைதான். நாம் முதலில் எமது உரிமைகளுக்காக ஜனநாயக ரீதியில் தந்தை செல்வா போன்றோரின் தலைமையின் கீழ் செயற்பட்டு வந்தோம். அதன்பின்னர் அரசியல் இயலாமை வந்ததால் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். தற்போது அந்த ஆயுதங்களும் மௌனிக்கப்பட்ட நிலையில் எம்முடைய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டிய அவசியத்தில் நாம் உள்ளோம். போர் முடிந்துவிட்டதென்று நாங்கள் எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்காமல் இருக்கமுடியாது. இந்த நிலையில் தான் வேறுவழியின்றி மீண்டும் நாங்கள் ஜனநாயக முறைப்படி போராடவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இது வன்முறையற்ற வழி என்பதால் மென்போக்கு என்றோ இணக்க அரசியல் என்றோ சொல்கிறார்கள். அரசுடன் பேசி எங்களுடைய உரிமைகளைப் பெறுவதுதான் எமது நோக்கம். அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தும் வருகிறோம்.

**கே:-** அன்ரன் பாலசிங்கத்தின் மறு உருவம் என்று பேரினவாதக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கூறிவருகிறார்களே...?

**ப:-** ஒருவேளை அவரைப் போன்று கண்ணாடியும், தாடியும் இருப்பதால் அப்படிச் சொல்கிறார்களோ தெரியவில்லை. இல்லாவிட்டால் அவரும் ஒரு படித்தவர். நானும் படித்தவன் என்று எண்ணி அவரைப் போல தனித்துவமான வகையில் எங்களுடைய பிரச்சினைகளைக் கையாள்வேன் என்ற அச்சத்தில் கூட சொல்லலாம். எதற்கும் சொன்னவர்களையே எதற்காக அப்படிச் சொன்னார்கள் என்று கேட்பதுதான் பொருத்தம்.

**கே:-** கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக நீங்கள் களமிறக்கப்பட்டவுடனேயே பல்வேறு விமர்சனங்கள் உங்கள் மீது முன்வைக்கப்பட்டன. விக்னேஸ்வரன் தமிழீழத்தைப் பெற்றுக்கொடுக்கப் போகிறார் என்று சிங்களக் கடுந்தேசிய வாதிகள் சொன்னார்கள். அதேவேளை விக்னேஸ்வரன் இறக்குமதி வேட்பாளர். வடக்கைப் பற்றி அவருக்கு எதுவுமே தெரியாது. என்று தமிழர்களில் ஒரு தரப்பினரும் கூறினார்கள். அத்துடன் பேரினவாதத்துக்கு ஆதரவான கருத்துக்களை இந்தியாவின் 'தினமலர்' போன்ற ஊடகங்களுக்கு தெரிவித்திருந்ததாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. அவை பற்றி நீங்கள்தொடர்ந்தும் மௌனமாகவே இருக்கிறீர்களே.?

**ப:-** இதைப்பற்றி நானென்ன சொல்லமுடியும். என்னதான் நடந்தாலும் தன்பாதையில் தொடர்ந்து பயணிக்கும் வாகனம் போலவே இந்த விமர்சனங்களை நான் கடந்து செல்கிறேன். ஒவ்வொருவரும் தத்தமது நிலையில் இருந்து என்னை நோக்கும் போது, அவர்கள் சொல்வது போன்று நான் அவர்களுக்கு புலப்படக்கூடும். இதனால் தான் சிலருக்கு நான் அதிதீவிரத் தன்மை கொண்டவன் போலவும், வேறு சிலருக்கு மென்போக்கு கொண்டவன் போலவும் தெரிகின்றேன். இதற்கு நானென்ன செய்யமுடியும்? நான் நீதிபதியாக இருந்தபோது என்னை கடுமையாக விமர்சித்துக் கட்டுரை எழுதிய ஒருவர் இப்போது நான் சிறந்த நீதிபதியாகச் செயற்பட்டாதாகவும் அதேசமயம் தற்போது அரசியலில் எனது செயற்பாடுகளை விமர்சித்துள்ளார். இப்போது எப்படி அவரது முன்னைய கருத்து மாற்றம் பெற்றுள்ளதோ அதேபோன்று இப்போதுள்ள கருத்தும் மாற்றமடையக்கூடும்.

பலர் கேட்டுக்கொண்டதன்பேரில் தான் அரசியலில் நான் இறங்கியுள்ளேன். என்னால் ஏதோ செய்ய முடியும் என்று எண்ணத்தில்தான் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுகிறேன். அதைச் செய்வேன் என்றும் நம்புகிறேன். அதனால் இந்த விமர்சனங்கள் என்னை எந்தவகையிலும் பாதிக்காது.

**கே:-** மாகாணசபைத்தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் தமிழர்களின் பிரச்சினையை தீர்க்க முடியுமா?

**ப:-** ஒரு அரசியல் கட்சியாக நாங்கள் பேசுவதை விடவும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடமாகாண அரசாக எங்கள்து உரிமை குறித்து நாங்கள் பேசும் போது ஒரு பலம் இருக்கிறது. ஆயுதத்தைக் காட்டித்தான் தமிழ் மக்களின் தலைமையை நீங்கள் பெற்றுள்ளீர்களே தவிர, உண்மையில் மக்களின் ஜனநாயக ஆதரவு உங்களுக்கு இல்லை என்பதே தமிழ்த்தலைமைகள் மீது இதுவரை சர்வதேசரீதியில் சொல்லப்பட்டு வரும் மிகமுக்கியமான குற்றச்சாட்டு. அதற்கு மாறாக ஜனநாயக ரீதியான தேர்தல் மூலம் சட்டரீதியான மக்களாதரவு கிடைக்கும். இந்த மக்களாதரவை வைத்து நாம் எம்முடைய உரிமைகளைப் பெற்றெடுக்க முடியும்.

அதை விடுத்து 13 ஆவது திருத்தத்தால் மட்டும் எங்களுகு முழு உரிமையும் கிடைத்து விடும், எங்களின் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கமுடியும். 13 ஆவது திருத்தத்தில் ஏராளமான தடங்கல்கள் உண்டு. அது வலது கையால் தருவது போல் தந்துவிட்டு, இடது கையால் தந்ததையெல்லாம் தட்டிப் பறிக்கக் கூடியது. எனவே மாகான சபையைக் கைப்பற்றி அதிலுள்ள குறைகளை உலகுக்கு தெரியப் படுத்தி, சர்வதேசத்தின் ஆதரவோடு எமது பிரச்சினையைத்தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கண்டறியமுடியும்.

**கே:-** தற்போது கூட்டமைப்பு வசமுள்ள உள்ளூராட்சிசபைகளுக்கான நிதியை முடக்குதல், அபிவிருத்திப்பணிகளில் புறக்கணித்தல் என்று அவற்றின் செயற்பாடுகளுக்கு இடையூறுகள் தொடர்கின்ற நிலையில், மாகாணசபையைக் கூட்டமைப்புக் கைப்பற்றினாலும் இதேநிலைதானே நீடிக்கப்போகிறது.....?

**ப:-** வடமாகாணத்துக்குட்பட்ட உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள் மாகாணசபையின் நிர்வாகத்துக்கு கீழேயே வருகின்றன. அத்தோடு மாகாண சபையும் சில அதிகாரங்களைக் கொண்டிருக்கிறது. அதை வைத்து இனிவருங் காலங்களில் உள்ளூராட்சி சபைகள் அபிவிருத்தித்திட்டங்களில் இருந்து புறக்கணிக்கப்படும் நிலையைத் தடுக்கமுடியும் அத்தோடு எல்லா உள்ளூராட்சி சபைகளிலும் சம அளவிலான அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்படும். இந்த திட்டங்களுக்கு அரசு நிதியை வழங்காமலிருக்கும் நிலை இனி நடக்கப்போவதில்லை. அதற்கு நாங்கள் ஒருபோதும் இடம் கொடோம்.

ஏனெனில் இதுவரை மாகாண சபைக்கான நிதியை ஆளுநர் எடுத்து, அவர்தான் அதனை வழங்கி வந்தார். ஆனால் மாகாண சபை வந்தபின்னர் ஆளுநருக்கு அவ்வாறான உரித்துக்கள் எதுவும் கிடையாது. ஆனால் நாங்கள் ஒரு சட்டத்தைக் கொண்டு வரும் போது அதை அங்கீகரித்தல், அல்லது தாமதப்படுத்தல் அல்லது நிராகரித்தல் போன்ற அதிகாரங்கள் ஆளுநருக்கு இருக்கின்றன. எனினும் செயற்பாட்டு விடயங்களில் அவர் கைபோடமுடியாது. அதற்கு அவசியமுமில்லை.

**கே:-** அதையும் மீறி மாகாண சபைவிடயங்களில் அவர் தேவையற்ற தலையீடுகளை மேற்கொண்டால்....?

**ப:-** தற்போதுள்ள ஆளுநரை மாற்றவேண்டும் என்று நாம் ஆரம்பத்தில் இருந்தே கூறிவருகின்றோம். ஏனெனில் அவர் இராணுவத்தில் இருந்தவர். இது பற்றியும் நாம் அரசுடன் பேசித்தீர்க்க வேண்டும். அவ்வாறு அரசுடன் பேசித்தீர்க்க முடியாத விடயங்களை சர்வசேதத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லத்தான் வேண்டும். இப்போது தேர்தலில் போட்டியிட்டு ஜனநாயக ரீதியில் நாங்கள் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்த பின்னரும் நமக்கான தீர்வை அரசு தராவிட்டால், நாங்கள் இவ்வளவுதூர அர்ப்பணிப்போடு செயற்பட்டும் இந்த அரசு எங்கள் உரிமைகளைத்தர மறுக்கிறது என்று சர்வதேசத்திடம் முறையிடலாம். இன்று உலகம் சுருங்கிவிட்டது. உலகின் ஒரு மூலையில் நடப்பதை இன்னொரு மூலையில் இருப்பவர்கள் உடனுக்குடன் அறிய முடியும். இதனால் எமது பிரச்சினைகளும் உடனுக்குடன் உலகால் உணரப்படும். இதன் மூலம் எமக்கு நன்மை பிறக்கலாம்.

**கே:-** மாகாண சபையில் ஆளுநரின் தலையீட்டை குறைக்க அல்லது அவரது தான் தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இந்தத் தேர்தலில் கூட்டமைப்பு பெற்றுக் கொள்ளுமா?

**ப:-** அதை நீங்கள்தான் சொல்லவேண்டும். எங்களின் கருத்துக்களை ஊடங்கள் மக்களிடம் எடுத்துச் சென்று, மக்களை அதிகளவில் வாக்களிக்கத் தூண்ட வேண்டும். ஏனெனில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றால்தான் நாங்கள் பலமாக நின்று எதையும் செய்யமுடியும் எமது பிரசாரங்களிலும் இதையே வலியுறுத்தி வருகிறோம். இதேவேளை பிரசாரத்துக்குச் சென்ற போதுமக்களின் முகங்களில் பயம் தெரிவதைக் காணமுடிகிறது. இராணுவத் தலையீடு, ஆயுதங்களை வைத்திருப்பவர்களின் அச்சுறுத்தல்கள் என்பன இன்னும் தொடர்கின்றன. இதுபற்றி சர்வதேசத்துக்கும் நாம் தெரியப்படுத்தி யிருக்கிறோம். அங்கிருந்து கிடைக்கும் அழுத்தங்கள் இந்த நிலையை மாற்றக்கூடும். இந்தப்பயத்தின் நடுவிலும் மக்களும் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு நிச்சயமாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எமக்கு அளிப்பார்கள் என நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையோருக்கான புதிய பகுதி!

# காதலர் மட்டும்...

## காதலில் வெற்றிபெற பெற்றோரை சமாளிப்பது எப்படி?

(சென்றவாரத் தொடர்ச்சி)

இவை எல்லாவற்றையும் விட இருவீட்டாரின் சம்மதத்துடனும் ஆசீர் வாதத்துடனும் நடக்கும் திருமணம் நீடித்து நிலைக்க நிறைய வாய்ப்புகள் உள்ளது.

உங்கள் காதலுக்கு பெற்றோர் சம் மதம் தெரிவிக்க சில முறைகளை கையாளலாம். அவற்றில் சில,

1. பெற்றோருக்கு சிறிது நேரம் கொடுங்கள்.

2. அவர்கள் உங்கள் காதலரை வெறுக்கும் காரணத்தை கண்டறி யுங்கள்.

3. உங்கள் காதலரிடம் இதை பற்றி பேசாதீர்கள்.

4. உங்கள் குடும்பத்தினரிடம் மனம்விட்டு பேசுங்கள்.

5. அவர்களின் இடத்திலிருந்து யோசியுங்கள்.

6. உங்கள் விருப்பத்தையும், உணர்வுகளையும் பெற்றோருக்கு புரியவைக்க முயலுங்கள்.

7. பெற்றோரை வெறுத்துவிடா தீர்கள்.

8. பொறுமையாக இருந்து உங் கள் காதலை நிரூபியுங்கள்.

9. அவர்களின் விருப்பபடி உங் கள் காதலரின் நடவடிக்கைகளை மாற்றமுடியுமா என்று பாருங்கள்.

10. உங்களது பெற்றோர் உங் களுக்கு முக்கியம் என்பதை அவர் களுக்கு உணர்த்துங்கள்.

சில நேரங்களில் இவை அனைத் தும் உபயோகப்படாமல் போக லாம். பெற்றோர்கள் வறட்டு கௌர வம், அந்தஸ்து போன்ற காரணங் களுக்காக உங்கள் காதலை எதிர்க் கும்போது, உங்கள் காதலின் மீது கலைக்கமுடியாத நம்பிக்கை இருந் தால் நன்கு சிந்தித்து உங்களின் வாழ்வை தேர்தெடுங்கள்.

## காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு

உங்கள் வாழ்வில் அல்லது உங் களுக்குத் தெரிந்தவர்களின் வாழ்வில் காதல் பரிசுகள் பற்றிய சுவாரசியமான சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எமக்கு எழுதி அனுப்புங்கள். தரமானவை வாரந் தோறும் இந்தப் பகுதியில் பிரசுரமாவதோடு, உங்களுக்கு ஆச்சரியமளிக்கும் பரிசுகளும் காத்திருக்கின்றன.



✍ அனுப்ப வேண்டிய முகவரி:
காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு
சுடர் ஒளி
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பரிசு பெற்றவர்கள் வாரநாள்களில் 021 567 7609 என்ற எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு துரிதமாக பரிசினைப் பெற்றுக்கொள்ளலாம்.

## நண்பனா? காதலனா? கண்டுபிடிப்பது எப்படி?

—சுபிதி—

காதல் என்ற உணர்வு எப்போது வரும். எப்படி வரும் என்று சொல்ல முடியாது. ஆனால் வர வேண்டிய நேரத்தில் மட்டும் சரியாக வந்துவிடும். அவ்வாறு காதல் வந்து விட்டால் சிலர் கண்மூடித்தனமாகக் காதலிப்பார்கள். அதிலும் பெண்களை விட ஆண்கள் காதலில் அதிகம் மூழ்கி விடுவார்கள். பெரும்பாலான ஆண்கள் காதலை வெளிப்படையாக சொல்லிக் கொள்ளமாட்டார்கள்.

அதற்கு பதிலாக உணர வைப்பார்கள். அதில் ஆண்கள் கில்லாடிகள். அதிலும் நட்புறவில் ஆரம்பித்து, காதலானது மலர ஆரம்பிக்கும். அவ்வாறு நட்பில் இருக்கும் போது காதல் வந்தால் சில ஆண்கள் வாயில் சொல்வதை விட, உணர்ச்சியின் மூலம் வெளிப்படுத்துவார்கள்.

குறிப்பாக இந்த மாதிரியான செயலில் பெண்களை விட ஆண்கள் தான் அதிகம் காதலில் சிக்கிக் கொள்கிறார்கள். இவ்வாறு சிக்கிக் கொள்வதைவிட அதனை வெளியே சொல்லாமல் அதற்கான செய்கையை மட்டும் வெளிப்படுத்துவார்கள். இதே மாதிரி உங்கள் நண்பன் காதலை வைத்துக் கொண்டு பழகுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமா? இதே சில அறிகுறிகள்.

★ ஆண்கள், நண்பர்களாக இருக்கும் போது எடுக்கும் போனை விட, காதல் வந்த பின்னர் அடிக்கடி போன் எடுப்பார்கள்.

★ நட்பாகப் பழகும் போது வெளியே அழைத்தால் வராமல் காரணம் சொல்லும் ஆண்கள், காதல் வந்துவிட்டால் ஒரு நாள் கூட பிரிந்திருக்க முடியாத நிலையில் விடுமுறை நாட்களில் தேடி வந்து வெளியே செல்லலாம் என்று அழைப்பார்கள்.

★ பிறந்த நாள் வந்தால் எதிர்பார்க்காத வகையில் நீண்ட நாள் ஆசையாக மனதில் வைத்திருக்கும் பொருட்களை வாங்கிக் கொடுத்து மகிழ்விப்பார்கள்.


★ அடிக்கடி கோபப்படுவார்கள். உதாரணமாக, ஒருநாள் அவர்களை பார்க்க முடியாதவாறு வந்தாலோ அல்லது வெளியே எங்கேயும் செல்வதாக இருந்தாலோ அதனை அவர்களிடம் சொல்லாமல் சென்றால் கோபத்துடன் அக்கறையாக பேசுவார்கள்.

★ அடிக்கடி வீட்டிற்கு வந்து குடும்பத்தினரிடம் அக்கறையாகப் பேசி அனைவரது மனதிலும் நல்ல இடத்தைப் பிடிக்க முயற்சிப்பார்கள். அதிலும் உங்களால் செய்ய முடியாதவற்றையும் அவர்கள் கஷ்டப்பட்டு செய்து முடிப்பார்கள்.

★ எப்போதும் உன்னை மிகவும் 'மிஸ் பண்ணுகிறேன்' என்று சொல்வார்கள். அதிலும் அப்போது தான் அவர்களை விட்டு வந்திருப்பீர்கள். அந்த நேரம் இதைச் சொல்வார்கள். அதுமட்டுமல்லாமல் அடிக்கடி உன்னைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது என்று சொல்வார்கள். இதுப் போன்று பல உள்ளன.

உங்கள் நண்பன் இது போல் நடக்கிறார்களா? அப்படியெனில் அவர்களிடம் வெளிப்படையாகக் கேளுங்கள்.

நட்பிலும் இத்தகைய கோபம், அக்கறை, பரிசு போன்றவை இருக்கும். ஆனால் காதல் இருந்தால், எமக்கே நம்ப முடியாதவாறு சிறிய விடயங்களுக்கு கூட உணர்ச்சிவசப்பட்டு பேசுவார்கள். எனவே வித்தியாசத்தைப் புரிந்து கொண்டு நடப்பது நல்லது.



## புரிந்துகொண்டால்...... திருமணம்தான்....

★ ரோஜா முள்ளிலிருந்தும் எவ்வாறு வளர்கிறதோ அப்படித்தான் காதலும். எவ்வளவோ தடைகளைத் தாண்டி வருவதுதான் காதல்.

★ ஜாதி, மதம் பார்க்காமல் கண்ணும் கண்ணும் முட்டி மோதிக் கொள்வது தான் காதல்.

★ முதலில் காதலை ஆண் எவ்வாறு சொல்லுவது என்று ஏங்கித் தவிப் பான். ஒவ்வொரு நாளும் உங்களைச் சுற்றிச் சுற்றி வருவார்கள்.

★ பெண் தனக்குள்ளே மூடி வைத்துக் கொண்டு கண்ணால் பார்த்து ரசிப் பான் இவ்வாறு இருந்து இருவரின் மனமும் ஒன்றிணை வதுதான் காதல்.

★ எந்தத் தடைகள் வந்தாலும் அதைத் தாண்டி மன உறுதியுடம் காதலிக்க வேண்டும்.

★ ஆண்கள் எவ்வாறு உங்களை பேசுகிறார்களோ நீங்கள் அதையெல் லாம் பொருட்படுத்தாமல் அன்பில் பேசுகிறார்கள் என்று எண்ணி இருத்தல் வேண்டும்.

★ காதலிக்கு எப்போதும் பொறுமை வேண்டும். கோபம் கூடாது.

★ இருவரின் மனமும் புரிந்து உணர்ந்தால் கடைசியில் திருமணத்தில் முடியும்.

வேலாயுதம் கிருஷ்ணவேணி, முதலாம் வருடம், புங்குடுதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப். 18, – 24 , செப்., 2013

sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி–: 021 567 7609

## போடுங்கள் புள்ளடி; பொறுப்புணர்ந்து

தேர்தல் நெருங்கிவிட்டது. பரப்புரைகள் ஓய்ந்துவிட்டன. நாம் யாருக்கு வாக்களிக்கப் போகிறோம் என்பதைக் கைவசமுள்ள இந்தச் சில நாள்களே தீர்மானிக்கப்போகின்றன.

"வானை வெட்டி வீழ்த்துவோம், கங்கையை உங்கள் வீட்டுக்குக் கொண்டுவருவோம். பாலாறையும் தேனாறையும் நித்தமும் பெருகி ஓடச் செய்வோம்" என்பன போன்ற புளித்துப் போன வாக்குறுதிகளை இந்தமுறையும் கேட்க வேண்டிய கட்டாயம் ஒவ்வொரு தமிழருக்கும்.

தேர்தல்கள் தொடங்கப்பட்ட காலம்முதல் இதே வாக்குறுதிகள் தான். ஒவ்வொருமுறையும் புதுப்பிக்கப்பட்டு, சிற்சில மாற்றங்களுடன் பொலிவாக்கப்பட்டு, மக்கள் முன் ஒப்புவிக்கப்படுகின்றன. மக்களும் மறதிக்காரர்கள் என்பதால் இந்த வாக்குறுதிகளை புதிய உறுதிப்பாடுகள் என்பன போல நம்பிக் கொண்டு வாக்குகளை வழங்கிவருகிறார்கள். ஆனால் உண்மையில் வாக்குறுதிகளை விடவும் கொள்கையை நோக்கியே ஒவ்வொருவரினதும் வாக்குகள் செல்லவேண்டும்.

ஏனெனில் வாக்குறுதிகள் மாறலாம். அவை நிறைவேற்றப் படாமல் கானல்நீராகக் கூடப் போகலாம். ஆயினும் ஒருபோதும் கொள்கைகள் மாறப் போவதில்லை. அந்தக் கொள்கைகளை முன் வைத்த கட்சிகளே மறந்து போனாலும் கூட மக்கள் இன்னமும் கொள்கைப் பிடிப்போடே இருக்கிறார்கள் என்பதை வாக்குகள் மூலமே உணர்த்தவேண்டும்.

இந்த முறை மாகாணசபைத் தேர்தலில் உரிமைக் குரலில் ஒரு தரப்பும் அபிவிருத்திக் குரலில் இன்னொரு தரப்பும் மக்களிடம் வாக்குகளை வேண்டி நிற்கின்றன. போரால் நொந்து வெந்து மீண்டெழும் மக்களுக்கு அபிவிருத்திகள் அவசியமானவைதான். பூச்சியப் புள்ளியில் நிற்கும் அவர்களது வாழ்வியலை மீண்டும் ஏற்றப் புள்ளி நோக்கி நகர்த்துவதற்கு இந்த அபிவிருத்திகள் உதவக் கூடும்.

ஆனால் அபிவிருத்திகள் மின்மினிப் பூச்சிகள்தான். அவை கணநேரம் மட்டுமே எங்களின் வலிகளை மறக்கச் செய்பவை. ஆறாவடுவாக நீள்கின்ற தமிழர்களின் பிரச்சினைக்கு இப்போதைய தேவை நிரந்தரமருந்தே. அந்த மருந்தைப் பெற்றுக் கொள்ள ஒவ்வொரு தமிழ் மகனும் தன் பொறுப்புணர்ந்து வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும்.

# தேர்தல் நீதிக் கதைகள்

**எத்தனை நாள்களுக்குதான் கட்டுரை, பத்தி என்ற பெயர்களில் வாசகர்களை வதைக்க முடியும். ஏற்கனவே தேர்தல் திருவிழா தொடங்கி உச்சக்கட்டத்தை எட்டியிருக்கும் இந்த நாள்களில், வேட்பாளர்களின் அனல் பறக்கும் வசனங்கள், வாக்குறுதிகள், அறிக்கைகள், விளம்பரங்கள் என்று எல்லாவற்றையும் கேட்டும், பார்த்தும் சலித்துப்போயிருக்கும் வாசகர்களுக்கு சின்னதொரு ஆறுதலுக்காக சில கதைகளும் அவற்றின் மூலம் வெளிப்படும் நீதிக்கருத்துக்களும் மட்டும் இங்கே பகிரப்படுகின்றன.**

**பிரமன்**



### பயணம் - 1

முத்தப்பாவுக்கு காட்டில் எல்லாப் பாதைகளும் அத்துபடி. 70 வயதென்றாலும் ஆள் இப்போதும் கம்பீரத்தோடு தான். ஒரு கொஞ்ச நேரமும் சும்மாயிருக்க ஆளுக்குப் பிடிக்காது, ஏதாவது செய்து கொண்டேயிருப்பார். தன்னைப்பற்றிய சுயநம்பிக்கை எப்போதும் முத்தப்பா வுக்கு அதிகம்.

'இஞ்ச எனக்குத்தெரியாமல் ஒரு இடமும் இல்லை. கண்ணை மூடிக்கொண்டு எங்கையும் போய் வருவன். கண் தெரியாட்டியும் காலுக்கு எல்லாம் பழகிட்டு. தன்பாட்டில அது போய் வரும்' என்று சொல்லும் முத்தப்பா, வன்னியின் கால நிலையையும் தன் அனுபவத்தால் கரைத்துக் குடித்து வைத்திருந்தார்.

'இண்டைக்குப் பின்னேரம் மழை பெய்யும் பார்' என்று வானைப் பார்த்து, நெற்றியைச் சுருக்கியபடி சொன்னாரென்றால், கட்டாயம் மழை பொழிந்தே தீரும். அந்தளவுக்கு தன் ஊரின் சின்ன அசைவுகளும் அவருக்கு அத்துப்படி.போர் அவரை அலைக்கழித்து, அவரின் பொருள்களையும், உறவினர்களையும் தின்றிருந்தாலும், முத்தப்பா இன்னும் அசைந்து கொடுக்காத மனிதராகவே இருந்தார்.

அன்றைக்கும் வழமை போலவே முத்தப்பாவுக்கு விடிந்தது. வீதியில் அரக்கப்பரக்க வாகனங்கள் ஓடிக்கொண்டிருந்ததால், வழக்கமாகத் தான் பயன்படுத்தும் குறுக்குப்பாதையில் இறங்கி நடக்கத் தொடங்கினார்.

இன்னும் கொஞ்சத்தூரம் தான் இருந்தது.

குறுக்கே ரயில் தண்டவாளம். பாதுக்கப்புக் கடவைகள் இல்லை. சமிக்ஞை விளக்கு இல்லை. ஒரு காவல் கூட இல்லை. 'இப்ப எங்க ரெயில் வரப்போகுது?' பழக்கதோசத்தில் அதைக் கடக்க அவரது கால் தானாகவே நகர்ந்தது.

"சடீர்ர்ர்ர்ர்ர்ர்ர்.........."

ஒரு நொடி அவகாசம் கூட இல்லை. இறைச்சிக் குவியலாகத் தூக்கி எறியப்பட்டார் முத்தப்பா. அவரை அடித்து விட்டு எந்தச் சலனமும் இன்றி, எந்தக் கவலையுமின்றி தன்பாட்டுக்கு விரைந்து கொண்டிருந்தது 'யாழ்தேவி' கடுகதி ரயில். வெற்றிகரமாக தன் பரீட்சார்த்த பயணத்தை நிறைவு செய்த யாழ்தேவிக்கு, முத்தப்பாவின் குருதியால் நெற்றித்திலகமிடப்பட்டிருந்தது. கரகோஷம் வானைப் பிளந்திருந்தது. தூரத்தே கண்ணை மூடிக்கொண்டே போய்வரக் கூடியவரும், வானைப் பார்த்தே மழை வருமா இல்லையா என்பதை உய்த்துணரக் கூடியவருமான முத்தப்பா, கடுகதி ரயில் வரப் போவதை அறியமுடியாததால் தலை சிதைந்து கிடந்தார்.

**நீதி: யாழ்தேவி எப்போ, எப்பிடி வருமென்று தெரியாது. ஆனால் தேர்தல் நேரத்தில் கட்டாயம் வந்தே தீரும். கவனம் மக்களே!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பயணம் - 2**

மாட்சிமை தாங்கிய மாமன்னர் வரவிருந்தார். வழக்கமாக அவர் புஷ்பகவிமானத்திலேயே வருவது வழமை. அவற்றுக்கு தேர்தல் காலத்தில் நிறைய வேலைகள். அத்தோடு நாட்டில் உள்ள கோயில் திருவிழாக்களுக்கு பூமாரி பொழிவதுதான் அந்தப் புஷ்பக விமானங்களின் பிரதான பணியாக மாறிப் போயிருக்கும் காலத்தில், மாமன்னரும் புஷ்பகவிமானத்தில் வந்தாலும் யாரேனும் அவரும் பூமாரி பொழியத்தான் வருகிறாரோ என்று தவறாகவும் நினைத்துவிடக்கூடும். அதனால் ஏதாவது புதுவாகனத்தில் செல்ல மாமன்னர் முடிவெடுத்திருந்தார். போகாமலும் இருக்க முடியாது. அவர் நாட்டின் ஒரு பகுதியில் தேர்தல் நடக்கும் போது அவர் பரப்புரைக்கு போகத்தானே வேண்டும். இல்லாவிட்டால், நாங்கள் வென்றால் நாட்டில் அதைச் செய்வோம், இதைச் செய்வோம். அந்தளவுக்கு எங்களுக்கும் ஜனாதிபதிக்கும் அப்படி ஒரு நெருக்கம் என்று சொல்லித்திரியும் அரசதரப்பினரின் கௌரவம் என்னாவது? தேர்தல் காலத்திலேயே வராத அரசரா, அதற்குப் பின் இங்கு வந்து ஊர் முழுதும் பொன்னும் பொருளும் வாரியிறைக்கப்போகிறார் என்று மக்கள் எண்ணத் தொடங்கிவிடுவர். ஆகவே தமக்கு விழப் போகும் அற்ப சொற்ப வாக்குகளையாவது இழக்காமல் இருக்க மாமன்னரின் வருகை அவசியமானது.

எனவேதான் மாமன்னர் இந்தமுறை இயந்திரப்பாம்பில் வர ஏற்பாடாகிற்று. பாம்பு பயணிப்பதற்கான பாதைகள் ஏற்கனவே போடப்பட்டுக் கொண்டிருந்தன. மாமன்னரின் வருகையால் அந்தப்பணிகள் துரிதமடைந்தன. இதோ! மன்னரின் வருகை நிகழ்ந்தே விட்டது. போரின் வடுக்களை கம்பளப்பாதைக்குள் மறைத்து நிற்கும் நகரில், தன் உற்றம் சுற்றம் மற்றும் அல்லக்கை, நொள்ளைக்கைகள் புடைசூழ, தன் குரக்கன் வர்ணச்சால்வையை கழுத்தில் அணிந்தபடி கால் பதித்தார் மாமன்னர். இப்போதும் வான் பிளக்கும் கரகோஷம்.

"மக்களே! நாட்டில் ஓடிய இரத்த ஆற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்த எங்களுக்கே உங்கள் வாக்குகளை வழங்க வேண்டும்..."


இரத்தத்தை நினைவூட்டும் சல்வை காற்றில் படபடக்க மாமன்னர் சொன்ன ஒவ்வொரு சொல்லுக்கும் கைதட்டல் எழுந்தபடியே இருந்தது.

மாமன்னர் சொல்வதுவும் உண்மைதான்.

முதல் நாள் அடிபட்ட முத்தப்பாவின் இரத்தம், அவர் வந்திறங்கிய இரும்புப்பாம்பின் முகத்தில் முற்றுப்புள்ளி போலத் தான் தெறித்திருந்தது. இன்னும் இரத்தம் குடிக்கும் ஆசையில் இரும்புப் பாம்பு நாவைச் சப்புக் கொட்டிக் கொண்டிருந்தது.

**நீதி: ஆபத்துக்கு பாவமில்லை.**

**(அரசரின் அவசர வருகைக்காக முத்தப்பா மரணித்தது பாவமேயில்லையாம்)**



**❝மாமன்னரின் வருகையால் அந்தப் பணிகள் துரிதமடைந்தன. இதோ! மன்னரின் வருகை நிகழ்ந்தே விட்டது. போரின் வடுக்களை கம்பளப்பாதைக்குள் மறைத்து நிற்கும் நகரில் , தன் உற்றம் சுற்றம் மற்றும் அல்லக்கை, நொள்ளைக்கைகள் புடைசூழ, தன் குரக்கன் வர்ணச்சால்வையைக் கழுத்தில் அணிந்தபடி கால் பதித்தார் மாமன்னர்.❞**

# பழக்க தோஷம்

அவர் தன்னை ஒரு மெத்தப்படித்த மேதாவி என்று நினைத்துக் கொண்டிருந்தார். ஏராளமானோருக்காக காசு வாங்கிக் கொண்டு வாதாடியதால், தன்னை வென்ற வாய்ச்சொல் வீரர் எவருமில்லை என்று கர்ஜித்தார். போதாக்குறைக்கு ராசியான வீட்டில் நின்றதால், பஞ்சாயத்துப் பிரதிநிதியாகவும் மாறிப்போனார். ஆனாலும் பதவி அவரை மாற்றியது. வெற்றிலை போடும் பழக்கம் முளைத்தது. வெற்றிலை தந்த போதையில் கண்டபடி உளறத்தொடங்கினார்.தன்னை உயர்த்திய ராசியான வீட்டை எட்டி உதைத்தார். என்னால் தான் வீட்டுக்கு பெருமை. நான் தான் பஞ்சாயத்தில் வீட்டுக் காக அதிகசெங்கற்களைக் கொண்டு வந்து கட்டியவன் என்று ஜம்பமும் அடித்துக் கொண்டார். தன் வீட்டுக்கு எதிராகவே வேலையும் செய்யத் தொடங்கினார்.

வெற்றிலையே வீட்டை விட முதன் மையானது, மேன்மையானது என்று எண் ணிக் கொண்டார். இப்படிப்பட்டவர், அடுத்த தேர்தலில் கெஞ்சிக் கூத்தாடி, மாகாணசபைக்கு போக வெற்றிலையோடு வந்தார்.

வாக்குக் கேட்க ஊரெல்லாம் போனார். வாய்ச்சொல் வீரரின் பேச்சை எவருமே காது கொடுத்துக் கேட்கவேயில்லை. தன் பேச்சுக்கு தானே கைதட்டிக் கொள்ள வேண்டிய நிலை.

ஏனப்பு இப்பிடி பேசத்தெரியாமல் உளறி எங்களைக் கொல்லுறாய்.கெதியாப் பேச்சை முடியப்பு என்று எல்லோரும் அலுப்போடுதான் அவரது உரைகளை எதிர்கொண்டார்கள்.

மெல்ல மெல்ல வீட்டின் ராசியே தன்னை இத்தனை நாளும் உயர்த்தியிருந்தது என்பதை மனதில் உணர்ந்து கொண்டாலும், அவரது சுயகௌரவம் அதை ஒத்துக் கொள்ளமறுத்தது.

அன்றைக்கு ஒரு கூட்டம். வழக்கம் போல உப்புச்சப்பற்று தான் முன்னர் குடியிருந்த வீட் டைப் பற்றி ஒரு பிடி பிடிக்கத்தொடங்கினார். எல்லோரும் அவரது பேச்சைக் கவனிப்பதை விட்டு, தமக்கு அருகே இருந்தவர்களுடன் கதைக்கத் தொடங்கினர். இனியும் இழுத் தடித்தால் தான் கூட தன் பேச்சுக்கு கைதட்ட முடியாத நிலை வந்துவிடுமென்று எண்ணிய அவர், பேச்சை முடிக்க சில வார்த்தைகள் சொன்னார். அவ்வளவுதான்! என்றைக்குமில் லாத கைதட்டல் அவர் காதில் விழுந்தது.

என் பேச்சுக்கு இவ்வளவு கைதட்டலா? என்று அவர் காதையே அவரால் நம்பமுடி யாமல் இருந்தது. அப்படி என்னதான் பேசி னேன்? என்று ஞாபகப்படுத்த முனைந்தும் முடியவில்லை. மெதுவாக அருகே இருந்த சக வேட்பாளரிடம் கேட்டார்;

சனம் இவ்வளவு கைதட்டுதே. அப்பிடி திறமாயிருந்ததோ பேச்சு?

உடனே எங்கள் வாய்ச்சொல் வீரரை எரித்து விடுவது போன்று பார்த்த அந்தச் சக வேட்பாளர்,

திறமான பேச்சோ? அந்த வயித்தெரிச் சலை என்னெண்டு வேற கேக்கிறியோ? என்ன சொன்னனீ தெரியுமோ? என்று கேட்டார். இவர் இல்லை என்பது போன்று தலையாட்டி னார். உடனே அந்த வேட்பாளர் தனது போனில் பதிய செய்திருந்த வாய்ச்சொல் வீரரின் உரையைப் போட்டுக் காட்டினார்.

அதில் வெற்றிலையைக் குதப்பியபடி வாய்ச்சொல் வீரர் இப்படி முடித்திருந்தார்,

....ஆகவே மக்கள் நிம்மதியாகவும் சுபீட்சமாகவும் வாழ வேண்டுமானால் வீட்டுக்கே வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வெற்றிலைக்க்கு பதிலாக வீட்டுக்கு வாக் களிக்கச் சொல்லிக் கேட்டதால்தான் இத் தனை கைதட்டலா? என்று தலையைக் குனிந்து கொண்டார் வாய்ச் சொல்வீரர்.

**நீதி: சிலவேளைகளில் எம்மையுமறி யாமல் உண்மைகள் புறப்பட்டுவிடும்.**

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்



## மாற்று வலுவோர்

யுத்தம் கொடுத்த முத்தத்தால்
சத்தம் மெலிந்த சங்கீதங்கள்
சுரம் பிழைத்த ராகங்கள்
லயம் தம்பிய தாளங்கள்


பல்லவி தொலைந்த பாடல்கள்
மெல்லிசை மறந்த குயில்கள்
முன்னுரை கிழிந்த புத்தகங்கள்
முடிவுறாப் புதுக்கவிதைகள்

துயரங்கள் மட்டும் இவர்கள்
சொந்தம் ஆனதனால் வரும்
சோகங்கள் சுற்றி நின்று
சுகம் விசாரித்துப் போகும்

ஊனப் பார்வைப் பேச்சென சில
ஈனப்பிறவிகள் நடந்தாலும்
வைர மனம் அவர்க்குண்டு
வாழும் வகை பலவுண்டு.

– காரைக்கவி.


## எதுவும் புரியவில்லை



நீண்ட இந்த எம்
இடைவெளியில்
ஏனோ தவறுதலாக உன்
புகைப்படத்தை
பார்த்து விட்டேன் எப்படி
சொல்வதென்று
எதுவும் புரியவில்லை என்
விழிகள் செய்த
அந்தக் கண்ணீர்
யுத்தம் பற்றி

- அருவி.

## சத்தம் கேள்



உன் இதயத்தின் துடிப்பைக் கேள்
அதன் துடிப்பு நின்றுவிட்டால்
உன் துடிப்பு நின்று விடும்
உன் உயிர் உன்னிடமில்லை
அதற்குள் இத்தனை அதிகாரம் ஏன்?

மலர்கள் விரியும் சத்தம் கேள்
ஒருநாள் வாழ்விலும் தேன் சொட்டி
மணம்வீசும் மகிமை சொல்லும்
நூறாண்டு வாழும் நீ
சோகத்தில் மூழ்குவது ஏன்?

பறவை சிறகுலர்த்தும் சத்தம் கேள்
இறக்கையில் கனம் இருந்தால்
உயரப் பறப்பது கடினம்
தலைக்கனம் உனக்கிருந்தால்
நீ உயர்ந்து செல்வது எப்படி?

மழலைகள் மகிழும் சத்தம் கேள்
நாளைய கவலை அங்கில்லை
வஞ்சனை உள்ளம் அவர்க்கில்லை
நாளைக்காய் பொருள் சேர்த்து
இன்றை நீ இழப்பது ஏன்?

சருகுகள் உதிரும் சத்தம் கேள்
தேனைத் தாங்கிய மரத்தடியில்
உரமாகி வீழ்ந்து மகிழும்
சுயநலம் கொண்டு வாழ்ந்து
மரணத்துக்கு அஞ்சுவது ஏன்?


அருவிகள் விழுகின்ற சத்தம் கேள்
வீழ்ந்தாலும் விழுந்த இடத்தை
பசுமையாக்கும் பண்பு அதற்குண்டு
நீ விழுந்த இடத்திலேயே
மற்றவனை விழுத்த நினைப்பது ஏன்?

நடுநிசியின் நிசப்தம் கேள்
கண்டமூடி ஊர் உறங்க
விண்மீன்கள் காவல் காக்கும்
கருவறையும் கல்லறையும் இதே நிசப்தம்
இடையில் ஏன் வீண் இரைச்சல்?

**- அஜந்தன், கந்தர்மடம்.**

## மூவரும் சகோதரர்கள் தான்

உன் புழுக்கையாகவே
நான் இருக்க வேண்டுமெ
நீ விருப்பம் கொண்டுள்ளாய்!
சிலவேளைகளில்
காற்று சுமந்து வந்து
உன் வீட்டுக்குள்
அடையும் தூசியாய் காண்கிறாய்
என்னையும் அவனையும்



கடதாசியால் மேடை அமைத்து
விழா நடத்தி மகிழ்கிறாய்!
மேகம் இருள்கிறது
மழை வந்து விடும்
கவனத்தில் கொள்!

தாயிடம் இருக்கும் உரிமை
மூவருக்கும் சமம்
நாம் மூவரும்
ஒரு தாய்
குழந்தைகள் என்பதால்!

எனக்கு மதம் மாறும்
உரிமை உண்டு!
என் வணக்கஸ்தலம்
உடைக்கும் உரிமை
உனக்கெப்படி வந்தது?

எத்தனை வணக்கஸ்தலம்
அமைத்தாலும்
நானும் நீயும் அவனும்
சகோதரர்களே!

எனப்பிப் பிடித்த இறைவனை
நான் தொழுகிறேன்!
உனக்குப் பிடித்த கடவுளை
நீ வணங்குகிறாய்!
அவனுக்குப் பிடித்த ஆண்டவரை
அவன் துதிக்கிறான்!
எங்கள் இருவரையும்
விட்டுவிடு
நாங்களும் உன் சகோதரர்தான்!

**மிகிந்தலை A.பாரிஸ்,**
**கட்டுக்கெலியாவ.**

## மரணச்சான்றிதழ்



கேள்விக்குப் பதில் இல்லையாம்
பதில் சொல்வதற்கு....
சரித்திரத்தின் சம்பவங்கள்...
மூடி மறைக்கப்பட்டதாம்

கண்ணால் கண்ட காட்சிகள்
கற்பனைக் கதையாம்....
மனசாட்சி இல்லாதவர்களுக்கு - இது
உண்மைக் கதையாம்..

இருப்பவன் ஏக்கத்தோடு
இழந்தவனைத் தேடுகிறானாம்
பணத்தை வாங்கி
இரக்கமுள்ளவனாக நடித்தவன்
இழந்தவனை மீட்டுத் தருவானாம்

காட்டிக் கொடுத்தவர்களால்
காணாமல் போனது உண்மையாம்
காலம் கடந்தபின்....
காணாமல் போனவர்களுக்கு....
பரிசாகக் கிடைத்தது.....
மரணச் சான்றிதழ் பத்திரமாம்...!

**- வீ.அருள்ராஜர்**
**பாலிநகர், வவுனிக்குளம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணவாக்குமூலம்



## சிறுகதை

விவேகானந்தனூர்
சதீஸ்

**தோ**ட்டத்திலிருந்து வந்த கணேசபிள்ளை அவதிப்பட்டுக் கொண்டு இங்குமிங்குமாய் திரிந்தார். அந்த அவதி அவசரமெல்லாம் பாலசிங்கத்தின் ஆண்டு திவசத்திற்கான அடுக்குகள் செய்யவேண்டுமென்பதே ட்ரிங்... ட்ரிங்... தொ(ல்)லைபேசி சிணுங்கியது. அடுக்களையில் இருந்த பாக்கியம் அமளிப்பட்டுக் கொண்டு ஓடி வந்தாள். " சின்னவன் தான் எடுக்கிறானாக்கும் சரி இனி தேத்ததண்ணி சாப்பாடு எல்லாம் அதோ கதிதான்" எனமனதிற்குள் நினைத்தார் கணேசபிள்ளை. "இஞ்சேருங்கோ! சின்னவன் தானப்பா நான் சொல்லேல்லையே இந்த நேரம் தம்பி தான் எடுப்பானெண்டு..." பிள்ளையின் அழைப்பினால் பிரகாசமானது பெற்றவள் முகம். ரீசிவரை பக்குவமாய் பிடித்தபடி பக்கத்திலிருந்த மரக்கதிரையை மறுகையால் எட்டி இழுத்து வசதியாக போட்டுக்கொண்டு... " தம்பி சொல்லேல்லையா... " எனபேச்சை ஆரம்பித்தாள் மனைவி. இனி உவள் இந்த ஊர்ப்புதினமெல்லாம் அளந்து போட்டு வந்து தேத்தண்ணி தாறதுக்கிடையிலே அடுத்த ஆண்டுத் திவசமும் வந்திடும்... அப்பு கடையில ஏதும் தண்ணி வெண்ணிய குடிச்சிட்டு வேலவெட்டிய கவனிப்பம்" என புறுபுறுத்தபடி கோடிப்பக்கம் நகர்ந்தார் கணேசபிள்ளை." இஞ்சரப்பா உவன் தம்பியோட இரண்டு வசனம் கதைச்சிப் போட்டு போங்கோவன் ..." மனைவியின் நியாய கட்டளைக்கிணங்க மகனுடன் ஓரிரு வசனம் பேசிவிட்டு தனது பழைய " ரவி" சைக்கிளை உருட்டியபடி படலை திறந்து திண்ணைவேலி சந்தையை நோக்கி புறப்பட்டவருக்கு இயல்பாக நினைவிற்கு வருகிறது பாலசிங்கத்தின் கடந்து சென்ற நாட்கள்.

பாலசிங்கமும் கணேசபிள்ளையும் பெரியதாய் சிறியதாய்ப் பிள்ளைகள்.பெற்றோரின் பரம்பரைச் முதுசமான பொன் விளையும் பூமியென போற்றப்படும் வலி.வடக்கு பலாலியில் குடும்பம் குட்டிகளோடு வாழ்ந்து வந்தனர். அவ்வூர் வாசிகள் பாரம்பரியமாக இரண்டு பிரதான தொழிற்துறைகளைச் சார்ந்திருந்தவர். பரம்பரை விவசாயம் மற்றும் மயிலிட்டி போன்ற இயற்கை மீன் துறையினை அண்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். மீன்பிடியையும் வளர்க்கின்றனர். வருமானத்தின் பெருமாணத்தால் வசதி வாய்ப்பாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்ததுகள் இந்த வலி.வடக்கு சனங்கள். இவர்களின் மூதாதையர் தொடங்கி வாழையடி வாழையாக " பண்டமாற்றுபண்பாடு" என்று விவசாய குடுபங்கள் காய்கறிகளையும் மீனவக்குடும்பங்கள் கடலுணவுகளையும் பணமின்றிக் கொடுத்து பரிமாறிக் கொள்வது சிறப்பம்சம். இப்பிடியான பரஸ்பர உறவுகளால் ஊரின் வறுமையகன்று பெருமை உயர்ந்து நின்றது. வலி.வடக்கு மக்களுக்காக விழித்திருக்கும் அம்மன் ஆலயத்திலும் பிணிபோக்கி காத்தருளும் பிள்ளையாரிலும் பெருநம்பிக்கை கொண்டிருந்தனர் ஊர்க்குடிகள். வற்றாத அறிவூட்டும் வசாவிளான் மத்தியமகா வித்தியாலயம் அதையடுத்து அசிரியர் ஆசான்களை வெளிக்கொணரும் பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையை அதற்கப்பால் சின்னஞ்சிறுசுகள் கண்களுக்கு விருந்தளிக்கும் போல் பலாலி விமா னநிலையத்தில் இறங்கி ஏறும் பல்வகை விமானங்கள் எனஅழகிய பௌதிக வளம் கொண்ட புகழ்பூத்த பிரதேசமே வலிகாமம் வடக்கு.

பரம்பரைக்காணியை இரண்டாப் பிரிச்சுக் குடுத்திருந்த படியால் பாலசிங்கத்தின்ர வளவுக்கால தான் கணேசபிள்ளையின்ர வீட்டுக்காரர் ரோட்டுக்கு வரோணும். காலம் செல்லச்செல்ல சகோதரர்களுக்கிடையில் போட்டி பொறாமை பசளையிடல் பரந்து வளரத் தொடங்கியது. ஆண்களின் அவசர கோவங்களுக்கு பெண்டில்மாரும் எரிகிற விளக்கில் எண்ணெய் ஊற்றினார்களே அன்றி அணைக்க முயலவில்லை. இவற்றின் விளைவுகளால் கணேசபிள்ளை வீட்டுக்காரர் சென்றுவரம் பாதை வடலி மட்டைகளால் மூடப்பட்டது. தங்கட காணிக்கிள்ளால ஒருதரும் போகமுடியாது என்பதில் பிடிவாதமாய் இருந்து சகோதர முரண்பாட்டை வலுப்படுத்திக் கொண்டார் பாலசிங்கம். கணேசபிள்ளையின் தாய் குறுக்கிட்டு " நீங்கள் சகோதரங்கள் பக்கத்தில் ஒருத்தருக்கொருத்தர் துணையாய் இருப்பீங்க எண்டுதானே பாதையில்லாம காணியைப் பிரிச்சு கொடுத்தனாங்க .இப்பநீங்களேன்னடா என்றால் கீரியும் பாம்புமா நிக்கிறீங்கள்.... அயலட்டையில பார்க்கிற சனங்கள் என்ன நினைக்கும் ? இந்த சின்னாங் சிறுசுகளேட்டேயும் இப்ப இருந்தே பகையை வளர்க்கப் போறியளோ!' என மூத்தவள் பேசிவிட்டு... 'பாலசிங்கம் நீதான் கொஞ்சம் விட்டுக்கொடுத்துப் போவன் இந்தப் பாதையை கொஞ்சம் விட்டுக்கொடுத்துப் போவன். இந்தப் பாதையை கொஞ்சம் விட்டா நீ குறைஞ்சா போவாய்? ' என தள்ளாத வயதிலும் தர்க்கமா பேசின மூதாட்டிக்கு இறுதியில் பூச்சியப் பலனே கிட்டியது. பாலசிங்கம் எதற்கும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. 'தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறு. என்ர சொத்த நான் யாருக்கும் விட்டுத்தரன். இது நடவாது. என செருக்குடன் நிராகரித்தார். இப்படி இரு குடும்பத்திற்குமிடையில் சமரசமேற்பட்டமையால் மனமுடைந்த நிலையில் கணேசபிள்ளையின் தாய் உடல் ரீதியில் நோய்வாய்ப்பட்டு படுக்கையே பாக்கியமென சுடுகாட்டு வரவேற்பை எதிர்பார்த்திருந்தாள். காலங்கனிய காலன் தன் பணி முடித்தான். மூதாட்டியின் மூச்சும் அடங்கியது. தாயின் இறுதிப் பயணத்தையாவது இந்தப் பாதையால் கொண்டு போகவென்று சாவீட்டுத் துயரத்துடன் சகோதரனிடம் சமாதானமாய் கதைத்தார் கணேசபிள்ளை. அதுவும் உப்பில்லா பேச்சாய்ப் போனது. சொந்தபந்தங்கள் தொட்டுச் சொல்லியும் செவிடன் காதில் ஊதிய சங்காய் ஆனது. இப்படி இருக்க மூன்றாவது வீட்டுக்காரனான சோமசுந்தரம் குடும்பத்துடன் இருசகோதர குடும்பங்களும் எந்தவித கொடுக்கல் வாங்கலோ அல்லது நல்லது கெட்டதுகளையோ பரிமாறிக்கொள்வதில்லை. காரணம்! சதத்திற்கும் பிரியோசனம் இல்லாத சாதி சம்பிரதாயமும் ஏற்றத்தாழ்வும் தான். கணேசபிள்ளை இருதலைக் கொள்ளி எறும்பாக ஊருவதைக் கண்ட சோமசுந்தரம் பால்நினைந்தூட்டும் தாயாக தனது காணிவேலியில் கடப்பு வெட்டி தாயவள் இறுதிப்பயணத்திற்கு பாதை கொடுத்தான். இறுதிச் சடங்கினையும் தன் வீட்டு காரியமெனக் கருதி முன்னின்று முடித்தான். .... ஊரார் பேச்சுக்கு இடமளிக்கக்கூடாது எனஉருத்திராக்கப் பூனை போல் தாம் தாழ்த்தப்பட்டவனாகக் கருதினாலும் இன்று அவன் அனைவராலும் உயர்த்தப்பட்டவனாக நடந்து கொண்டான் என்பதை மரணவீட்டில் மட்டுமல்லாது ஊரிலும் மௌனமாய் பேசிக்கொண்டனர்.

தொண்ணூறுகளில் இராணுவ ஆக்கிரமிப்பின் காரணமாக வலிகாமம் வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து வலிகாமம் கிழக்கு பிரதேசங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. கணேசபிள்ளையின் தொழில் உறவுக்காரர் ஒருவரின் வீடு அச்சுவேலியில் இருந்தபடியால் சுலபமாக சென்று தங்கக் கூடியதாக இருந்தது. சனத்தோடு சனமாக பாலசிங்கம் குடும்பம் வீடுதேடி களைத்து ஓய்ந்த நிலையில் பாடசாலையொன்றில் தஞ்சமடைந்திருந்தது. இதனையறிந்த கணேசபிள்ளை பகை பாராட்டாது பாடசாலை சென்று பாலசிங்கம் குடும்பத்தை தானிருக்கும் வீட்டிற்கு கூட்டிவந்து இடம்கொடுத்தார். இடம்பெயர்ந்திருந்தாலும் சில மாதங்களில் ஊருக்கு சென்று தோட்டம் துரவுகளை பராமரித்து வரக்கூடியதாக இருந்தது. அதன்பின் இந்திய இராணுவத்தின் வருகையினைஅடுத்து அடியோடு ஊர்ப்பக்கம் தலைவைத்து படுக்க முடியாத அளவிற்கு நிலமை முற்றிவிட்டது. உயர்பாதுகாப்பு வலயம், பலாலி படைத்தள விஸ்தீரணம்என அதிகார வர்க்கத்தினரால் காரணங்கள் கூறப்பட்டது. கணேசபிள்ளை தன் இரு மகன்மாரையும் ஒருமாதிரி வெளியில அனுப்பிப் போட்டார். மூத்தவன் லண்டனுக்கும், இளையவன் பிரான்சுக்கும் போய்ச்சேர்ந்திட்டாங்கள். அவங்கள் பனியுக்கையும் பகலிரவு பணிசெய்தும் அனுப்பிய யூரோவிலும், பவுன்சிலும் மிச்சம்பிடித்து இருந்த வீடுவளவை விலைக்கு வாங்கிப் போட்டார். இப்போ கணேசபிள்ளையின்ர வளவில் தான் பாலசிங்கம் குடும்பம் ஒரு தற்காலிக வீடுபோட்டு இருக்குதுகள். இப்படி ஏழெட்டு கிராமசேவகர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் நானூறு குடும்பங்கள் வீதம் வலி.கிழக்கு எல்லைப் பிரதேசங்களான பலாலி கிழக்கு, மயிலிட்டி, வசாவிளான், தையிட்டி, ஒட்டுப்புலம் போன்ற இடங்களில் உள்ளவர்கள் வலிகாமம் கிழக்கு பிரதசங்களிலும் வீடுகளிலும் பலர் முகாம்களாக அகதி வாழ்க்கையை வாழத் தொடங்கினர். கொஞ்ச காலத்தில எப்படியும் ஊர்போகலாம் என எல்லோரும் எண்ணினார்கள். காலங்கள் கடந்ததேயொழிய காரியங்கள் எவையும் கைகூடவில்லை. எவரும் அரசையோ படைதரப்பையோ எதிர்த்து நிற்க விரும்பவில்லை அதற்குக் காரணம் [illegible]ந்து போன எண்பதுகளின் படையினருக்கு பணிய மறுத்து நியாயம் கோரி நின்ற பதில் நீதவான் மற்றும் மனைவி, வேலைக்காரபெண் ஆகிய மூவரும் அச்சுவேலியில் தமது சொந்தவீட்டில் சுடப்பட்டு வீட்டோடு எரியூட்டப்பட்டனர். அதனை அவ்வூரர் மக்கள் இன்றும் மறக்கவில்லை என்பதே! வருடங்களும் வரிந்துகட்டிக்கொண்டு ஓடி மறைய இழவு காத்த கிளிகளாக மக்கள் இன்னும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வலி.கிழக்கு மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி உச்சநீதிமன்றில் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தார். அதன் காலங்கடந்த தீர்ப்பாக 'மக்கள் மீள்குடியேற அனுமதிக்க வேண்டும்' எனதெரிவிக்கப்பட்டாலும் ' அவனின்றி அணுவும் அசையாது' என்பதைப் போல் யாழ். குடாநாட்டில் படையினரின் அனுமதியின்றி எதுவும் நடக்காது. வலி.வடக்கு மீள்குடியேற்றத்திலும், நீதிமன்றத்திலும் நீதிமன்ற தீர்பையும் மீறி படையினர் இதனை மீண்டும் நிரூபித்தனர்.

> "நான் எனது குடும்பம், சொத்து என எவ்வளவோ குறுகிய நோக்கத்துடன் இருந்தது மட்டுமில்லாம என்ர தாய்.. இல்லையில்லை எங்கட தாயின்ர சவத்தக் சுட வளவுக்கால கொண்டுபோகவிடாம மோசமா நடந்திட்டன்"

பாலசிங்கத்தின் பிள்ளைகளும் வளர்ந்து ஆளாகி தொழிற்துறைகளுடன் இணைந்திட்டுதுகள்.தள்ளாடும் வயதில் இருந்த பாலசிங்கம் படுத்த படுக்கையாக நோய்வாய்ப்பட்டார். தனது இறுதிக்காலம் கணேசபிள்ளையின் வளவில் கழிகிறது என்பதை நினைக்க கண்களில் ஈரம் கசிந்தது. தான் கண்கெடச் செய்தவற்றை நினைந்தவர் பணமும் பகட்டும் இருந்தால் எப்பவும் ஒரே மாதிரி இருக்கலாம் என எண்ணியது. வெறும் மடமை என்பதை உணரத்தொடங்கினார். தனது மனசாட்சியின் கேள்விகளுக்கு பதில் தேடமுடியாது வெட்கினார். ' சகோதரர்களாக இருந்தும் மரண வீட்டின் போது எவ்வளவு சுயநலமாக நடந்துகொண்டேன்... அதற்குக் காரணமாகவிருந்த காணிநிலம் இப்போ எங்கே? எப்படி? தனது கெட்டுப்போன கண்களுக்கு சூரிய நமஸ்காரம் தேட ஆரம்பித்தார். இறுதியில் கணேசபிள்ளையின் சகோதரனாக சாகவேண்டுமென முடிவெடுத்தார். திடீரென ஒரு நாள் தனது பிள்ளைகள் மருமக்களை அழைக்கும்படி மனைவிக்கு கூறிய பாலசிங்கம் கணேசபிள்ளையும் தன் அருகில் வரச்சொல்லி அவரது கைகளைப் பற்றிப்பிடித்தபடி ' கணேசபிள்ளை என்னை மன்னித்து விடு ..." நான் எனதுகுடும்பம் சொத்து என எவ்வளவோ குறுகிய நோக்கத்துடன் இருந்தது மட்டுமில்லாம என்ர தாய்.. இல்லையில்லை எங்கட தாயின்ர சவத்தக் சுட வளவுக்கால கொண்டுபோக விடாம மோசமா நடந்திட்டன். கடைசியில தீண்டத்தகாதவன் என ஒதுக்கி வச்ச சோமசுந்தரம் எப்படி நடந்துகொண்டான். அவன் உண்மையிலே பெரிய மனுசனாடா... உயர்ந்த மனுசனடா. அவனோட ஒப்பிடேக்க நான்... நான்... ச்ச்சீ.. நினைச்சுப் பார்க்கவே முடியேல்ல.... கணேசபிள்ளை! என நா தளுதளுக்க விம்மி வெடித்தார் பாலசிங்கம். இருகண்களிலும் கண்ணீர் ஆறாய் ஓடியது. பாலசிங்கத்தின் கைபிடிமேலும் மேலும் இறுகியது. இதனை உணர்ந்த கணேசபிள்ளைக்கு மனம் சஞ்சலப்பட்டதுடன் ஏதோ ஓர் துக்க சேதியை சொல்வதைப் போல் கலக்கமடைந்தார். " கணேசபிள்ளை! என்ர இரத்த உறவுக்கு விட்டுக்கொடுக்காத என்ர பரம்பரை முதுசங்களை இன்று எங்கிருந்தோ வந்த யாரோ ஒருவன் கையகப்படுத்தி ஆக்கிரமிக்கிறான். நம்மால் எதனையும் செய்யமுடியவில்லை! உன்னிடம் ஒன்றைக் கேட்கிறேன்.நம்மால் எதனையும் செய்யமுடியவில்லை! உன்னிடம் ஒன்றை கேட்கிறேன் எனது ஆத்ம சாந்தி அடைய வேணுமெண்டால் எங்களின்ர மூதாதையின்ர பாரம்பரிய நிலம் மீட்கப்பட்டு எமது சந்ததிகள் நிம்மதியா வாழ வழிசமைக்க வேணும். இதற்காக இறுதி மூச்சு வரை போராடுவேன் என நீ எனக்கு சத்தியம் செய்துதா...! இது என் இறுதி வேண்டுகோள்' என மரண வாக்குமூலமொன்றைக் கொடுத்து கணேசபிள்ளையின் காலடியில் காலனிடம் சரணடைந்தார். பாலசிங்கம். 'பாலசிங்கம்போய்ச்சேர்ந்ததும் ஒருவருசமாய்ச்சுது. இந்த பொன்னான மண் இன்னும் எங்களுக்கு கிடைக்கேல்ல! எத்தனைப் போராட்டங்கள் எத்தனை சத்தியாக்கிரகங் கள் ஒன்றும் பயனழிக்கிறதா தெரியேல்ல இருபத்திமூண்டு வருஷம் இப்பிடியே கடந்திட்டுது. கடவுள் தான் பாலசிங்கத்தின்ர கனவை நிறைவேற்றோனும். அந்தக் காலத்து 'ரலியை' உழக்கிக் கொண்டு ஒரு மாதிரி திண்ணைவேலிச் சந்தையடிக்கு வந்து சேர்ந்தார் கணேசபிள்ளை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போனவர்களின் வருகை


ஓவியம்: பிரதீஸ்

தொடர் கதை

09

● தொல்புரம் சி. கதிர்காமநாதன்

“ஏன் இப்படி புலம்பித் தள்ளுறீர்? ச்சா இனிப்புலம்பி ஒரு பிரயோசனமுமில்லை. அவையள் தங்கட சூழலுக்கு ஏற்ப வாழப்பழகிட்டினம். இனி ஒண்டும் செய்ய ஏலாது. வெளிநாடு போன பெரியாக்களே இங்க வந்து நிக்கிறதுக்கு கஸ்ரப்படுகினம். அவன் துரைசச்சாமியின்ரை மகன் சுவீசால வந்து நிண்டவன். இங்க ஒத்துவரேல்லை திரும்பிப் போயிட்டான். கொழும்பில் இரந்து வாறதுகளே இங்க நிக்கிறதுக்கு கஸ்ரப்படுதுகள்.....”

“எங்கட பிள்ளை வந்து இஞ்ச என்ன செய்யப்போறேனோ தெரியாது”

இரவு படுக்கைக்கு போன பின் -திடீரென விழிப்பு வந்துவிட்டது- வெளியே கூப்பிடும் குரலில் அவசரம் பதட்டம்.....

“சிவாண்ணை..... சிவாண்ணை.....”

சண்முக மாமா வீட்டில வசிக்கும் அவர் ொகண்டு வந்து இருத்திய துரைச்சாமியின் குரல் மனுசியும் எழும்பி விட்டாள்.

“கெதியாய் போங்கோப்பா....”

நேரமோ நடு இரவு பன்னிரண்டைத் தாண்டியிருந்தது. சற்றுக் குளிராக இருந்தது வெளியே விரைந்தோம்.

‘என்னவாக இருக்கும்?’

கதவினைத் திறந்து வெளியே வந்தால் நின்றது துரைச்சாமியே தான்.

“அண்ணைய். சண்முக மாமா படுத்துக் கிடந்தவர். இருந்தாப் போல எழும்பி கத்திக் கொண்டு நிற்கிறார். தனக்குப் பயமாய் கிடக்காம் ஒருத்தரையும் நித்திரை கொள்ள வேண்டாமாம். தனக்குப் பக்கத்திலை நிக்கட்டாம். எங்களுக்கும் என்ன செய்யிற தெண்டு தெரியாமல் கிடக்கு”

“சரிசரி வாங்கோ”

மாமாவுக்கெனத் தனி அறை இருந்தது. கதிரை கட்டில் எனப் பழைய சாமான்களோடு நெருக்கமாக இருந்தது. துரைச்சாமியின் மூத்த மகன் அரிக்கன் லாம்பைத், தூக்கிக் கொண்டு வந்தான்.

மாமா கட்டில் மேல் குந்தியிருந்தபடி புலம்பிக் கொண்டிருந்தார்.

“எனக்குப் பயமாய் கிடக்கு”

உடல் வியர்வையோடு நடுங்கிக் கொண்டிருந்தது.

மூச்சு பலமாக இரைத்தது.

கண்களில் பயப்பீதி.

அவர் என்னைக் கண்டதும், எழுந்து ஓடி வந்து என்னைக் கட்டிப்பிடித் துக் கொண்டார்.

“எனக்குப் பயமாய் கிடக்கு. தனிய விட்டிட்டுப் போயிடாதையுங்கோ. என்ரை அக்காவிட்டபோக வேணும், அக்கா விட்ட போக வேணும்”

“மாமா அமைதியாய் இருங்கோ ஒண்டும் பயப்படாதையுங்கோ. ஏன் பயப்படுறியள். இஞ்ச பாருங்கோ எத்தினை பேர் நிக்கிறம்.”

நான் மாமாவை தேற்ற முயன்றேன்.

“என்ன மாமா கனவு கினவு கண்டு போட்டியளோ?”

மனுசி கேட்டாள்

மாமா எங்காவது பேச்சை கேட்கும் நிலையில் இல்லை. அவர் எங்கோ ஓர் இடத்தில் இருந்தார்.

“அக்காவிட்ட போகவேணும். ராவில கனவெல்லாம் வருகுது”

அவர் பத்து வயதுச் சிறுவன் போல் குலுங்கி, குலுங்கி அழுதார்.

எங்களுக்கும் என்ன செய்வதன்று தெரியவில்லை. தெருவில் நாய்கள் குரைத்துக் கொண்டு இருந்தன. அந்த இரவில் மாமாவின் அழுகையும் விம்மலும் வீட்டின் அமைதியைக் கெடுத்தது.

எனது தொண்டைக்குழிக்குள் ஏதோ செய்தது. உடல் முழுவதும் ரோமங்கள் சிலிர்த்து, குத்திட்டு நின்றன.

கடவுளே இந்த மனிதன் ஏன் அழுகிறான்.?

முதுமை என்றால் அழ வேணடிய கட்டாயமா?

எதனை நினைத்து அழுகிறார், எதனை நினைத்து பயந்து விட்டார்.?

தன்னை தனிமையை, எதிர்காலத்தை அவரால் என்ன செய்ய முடியும்? இந்த நிலை அவரால் ஏற்பட்டதா? அவரது இயலாமை, சுபாவம் எல்லாம் அவரை இக்குழிக்குள் தள்ளிவிட்டனவா?

கலியாண மாவது முடிந்திருக்கலாமே? இது வேண்டாமென்று இருந்து விட்டாரா? அல்லது சகோதரர்களே இது பற்றி அக்கறை இல்லாமல் இருந்து விட்டனரா? இன்று யாருமற்ற அநாதையாய், தனிமையில், வெறுமையாய் உடல் குறுகி, நடுங்கி-!

அழுகை நின்றிருந்தது. மாமா மல்லாந்து படுத்திருந்தார். கண்கள் மூடியிருக்க நெஞ்சு மேலும் கீழும் ஏறி இறங்கியது.

வீடு அமைதியானது.

(அடுத்தவாரமும் வருவார்கள்)




18.09.2013 - 24.09.2013




**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**திறமையுடன் செயல்புரிந்து, அதிக நன்மை பெறும், மேஷ ராசிக்காரர்களே!**

சமூகத்தில் உங்களின் அந்தஸ்தை அதிகரித்துக் கொள்ள, தேவையான பணிகளில் ஈடுபடுவீர்கள். அக்கம் பக்கத்தவருடன் இருந்த, மனக்கிலேசம் சரியாகும். உழைப்பின் பயன் அதிகரித்து, தாராள பணவரவை பெற்றுத்தரும். வாகனத்தில் மிதவேகம் பயணமுறையை எளிதாக்கும். இல்லறத்துணையிடம் தேவையற்ற விவாதம் பேசவேண்டாம். தொழில், உற்பத்தி விற்பனை செழித்து, உபரி பணவரவு கிடைக்கும்.




**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

**கலகலப்பாக பேசி, பிறர் மனம் கவரும், ரிஷப ராசிக்காரர்களே!**

மனதில் இனிய எண்ணங்கள் உருவாகி, கூடுதல் நம்பிக்கை தரும். நண்பர்களின் உதவி எதிர்பார்த்த அளவில் கிடைத்து, சில பணிகளை மேற்கொள்வீர்கள். வீடு, வாகனத்தில் கூடுதல் வசதி பெற மராமத்துப்பணி உதவும். புத்திரர் தம் தேவைகளை நிறைவேற்ற சொல்லி வற்புறுத்துவர். இயன்ற அளவில் உதவி, குடும்பத்தில் ஒற்றுமை வளர்ப்பீர்கள். குடும்ப பெண்கள், அத்தியா வசியத்தேவைகளை,




**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**தன்னிலும் எளியவர்களையும், மதிப்புடன் நடத்தும் குணமுள்ள, மிதுன ராசிக்காரர்களே!**

அனுபவ அறிவு பரிமளித்து, பணிகளில் கூடுதல் நன்மை பெறுவீர்கள். உடன் பிறந்தவர்களின் எதிர்பார்ப்பை, ஓரளவு நிறைவேற்றுவீர்கள். வீடு, வாகனத்தில் பயன்பாட்டு வசதி, சராசரி அளவில் இருக்கும் அறிமுகம் இல்லாத பெண்களுக்கு உதவுவதில், நிதான நடைமுறை நல்லது. இல்லறத்துணை உங்களின் கருத்துக்களை, அன்புடன் ஏற்றுக் கொள்வார். பெண்கள், கணவரின் நல் அன்பு, தாராள பணவசதி கிடைத்து, சந்தோஷ வாழ்வு நடத்துவர்.




**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**மனதில் நல்ல பண்புகளை, நாளும் வளர்த்திடும், கடக ராசிக்காரர்களே!**

முக்கிய செலவுகளுக்கான பணவசதி, திருப்திகர அளவில் இருக்கும். இளைய சகோதரரிடம் உங்கள் மீதான அன்பு, பாசம் அதிகரிக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். புத்திரரின் கவனக்குறைவு சரி செய்வதில், இதமான அணுகுமுறை பின்பற்றவும். எதிர்மனப்பாங்கு உள்ளவரிடம் விலகி, சொந்தப் பணி நிறைவேற்றுவீர்கள். இல்லறத்துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனதில் நம்பிக்கையை உருவாக்கும்.




**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

**சிரமமான பணியையும், எளிதாக நிறைவேற்றும், சிம்ம ராசிக்காரர்களே!**

புதிய பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். திட்டமிட்டதை விட பணச்செலவு அதிகரிக்கும். உங்களின் வார்த்தை நியாய, தர்மம் நிறைந்திருந்தாலும், உரிய இடங்களில் மட்டும் பேசுவது நல்லது. புதிய வாகனம் வாங்க, சிலருக்கு யோகம் உண்டு. புத்திரர் விரும்பிய பொருள், தாராள பணச்செலவில் வாங்கித்தருவீர்கள். உடல் நலம் ஆரோக்கிய பலத்துடன் இருக்கும். இல்லறத்துணை குடும்ப பொறுப்புக்களை உணர்ந்து செயல்படுவார்.




**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

**மற்றவரின் எண்ணத்திற்கு, உரிய மரியாதை தரும், கன்னி ராசிக்காரர்களே!**

உறவினர்களின் மாறுபட்ட செயல்களால், மனதில் விரக்தி அடைவீர்கள். குடும்பத்தேவைகளின் நெருக்குதல் தன்மை, உங்களின் அன்றாட பணிகளில் ஆர்வம் கொள்ள வைக்கும். பணச்செலவில் சிக்கனம் நல்லது. வாகன பாதுகாப்பில், கூடுதல் கவனம் வேண்டும். பூர்வ சொத்தில் நம்பகமானவர்களை பணியமர்த்துவது நல்லது. உடல் நலம் சீராக இருக்கும் இல்லறத்துணை உங்களின் நல்ல குணங்களை, மனமுவந்து பாராட்டுவர்.




**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**நியாய தர்மத்திற்கு முதன்மை தரும் துலாம் ராசிக்காரர்களே!**

சுய கௌரவத்தை பாதுகாத்துக் கொள்ள, தாராள அளவில் பணம் செலவு செய்வீர்கள். நண்பர்களிடம் பேசுவதில், நிதான அணுகுமுறை நல்லது. இளைய சகோதரர் உறுதுணையாக நடந்து கொள்வர். வாகனத்தில் பராமரிப்பு பணி தேவைப்படும். ஆரோக்கிய உடல்நலம் அமைந்து, திட்டமிட்ட பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழிலில் அளவான உற்பத்தி, பணவரவு இருக்கும். உத்தியோகஸ்தர், நிர்வாகத்தின் எதிர்பார்ப்பை உணர்ந்து பணிபுரிவது சிறப்பைத்




**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**நற்செயல்கள் செய்த சமூகத்தில்பெருமை பெறும் விருச்சிக ராசிக்காரர்களே!**

மனதில் புதிய ஞானம் உருவாகி, பணிகள் எளிதாக நிறைவேறும். தாராள பணவரவை, குடும்பத்தின் அத்தியாவசிய செலவுக்கு பயன்படுத்துவீர்கள். நண்பர்களிடம் இருந்த நட்புறவு பலம் பெறும். புதிய வீடு, வாகனம் வாங்க சிலருக்கு அனுகூலம் உண்டு. பு இல்லறத் துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து லாபவிகிதம் கூடும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறு, தாமதமின்றி சரி செய்வது அவசியம்.




**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**மனசாட்சிக்கு மதிப்பளித்து நடுநிலையுடன் செயல்படும் தனுசு ராசிக்காரர்களே!**

வாழ்வில் கூடுதல் வளங்களை பெற்று மகிழ்வீர்கள். சமூகத்தில், உங்கள் மீதான மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். வெளியூர் பயணம் இனிதாக அமையும். பூர்வ சொத்தில் கூடுதல் பணவரவு கிடைக்கும். விவகாரம் அணுகாத சுமுக வாழ்வியல் சூழ்நிலை உருவாகும். இல்லறத் துணை, உங்களின் நற்குணத்தைப் பற்றிப் பெருமை பேசுவார். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி, தாராள பணச்செலவில் மேற்கொள்வீர்கள்.




**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

**எளிமை குணம் பெரிதும் விரும்பி பின்பற்றும் மகர ராசிக்காரர்களே!**

எந்த செயலிலும், முன்யோசனையுடன் ஈடுபடுவது அவசியமாகும். புதிய இனங்களில் செலவு அதிகரித்து, சேமிப்பு பணம் குறையும். உங்கள் சொல்லுக்கு மரியாதை தருபவர்களிடம் மட்டும், யதார்த்தமாக பேசிக் கொள்ளலாம். வீடு, வாகனத்தில், தகுந்த பாதுகாப்பு முறை அவசியம். சீரான ஓய்வு, உடல்நலம் பாதுகாக்க உதவும். இல்லறத் துணையிடம் தேவையற்ற விவாதம் பேசுவதை தவிர்க்கவும், தாராள பணச்செலவில் பூர்த்தி செய்வர். மாணவர்கள் உற்சாகமுடன் படித்து, கூடுதல் தேர்ச்சி விகிதம் பெறுவர்.




**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

**சிறிய பணியையும், பொறுப்புணர்வுடன் நிறைவேற்றும் கும்ப ராசிக்காரர்களே!**

உங்களின் பேச்சு, மங்கலத் தன்மையுடன் அமைந்து உறவினர், நண்பர்களிடம் கூடுதல் நன்மதிப்பை பெற்றுத் தரும். குடும்பத் தேவைகளை தாராள பணச்செலவில் பூர்த்தி செய்வீர்கள். திட்டமிட்ட ஆன்மிக வழிபாடு நடத்தி, மனதில் புத்துணர்வு பெறுவீர்கள். வெளியூர் பயணம் இனிதாக அமைந்து, புதிய அனுபவம் பெற்றுத் தரும். பூர்வ புண்ணிய நற்பலன் உறுதுணையாக நின்று, முக்கியமான செயல் ஒன்று நிறைவேறும்.




**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**புதிய எண்ணங்களை செயல்படுத்துவதில் ஆர்வமுள்ள மீன ராசிக்காரர்களே!**

பகைமை குணம் உள்ளவரிடம் விலகுவதால், சிரமம் அணுகாமல் தவிர்க்கலாம். இளைய சகோதரர் உறுதுணையாக நடந்து கொள்வர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் சேர்க்கை சகவாசம் அஷீந்து, நல்வழியில் நடத்துவது அவசியம். பணக்கடன் நிர்பந்தம் தருவதால், சிறுஅளவிலான கடன்களை தாமதமின்றி செலுத்துவீர்கள். இல்லறத் துணை, குடும்ப நலன் சிறக்க தேவையான ஆலோசனை கூறுவார். அத்தியாவசியத்தேவைகளை, தாராள பணச்செலவில் பூர்த்தி செய்வர். மாணவர்கள் உற்சாகமுடன் படித்து, கூடுதல் தேர்ச்சி விகிதம் பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு

தொகுப்பு : வரு

# ஐ.பி.எல். இலங்கையிலும் நடக்குமா?



அடுத்த ஆண்டுக்கான இந்தியன் பிறீமியர் லீக் தொடர் இந்தியாவிற்கு வெளியே நடத்தப்படுமெனவும், இலங்கை, பங்களாதேஷ் ஆகிய இரு நாடுகளிலும் இத் தொடரை நடத்துவதற்கான அதிக வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 2014 ஆம் ஆண்டு இந்தியாவின் மக்களவைத் தேர்தல் இடம்பெறவுள்ளதால், ஐ.பி.எல் போட்டிகளும் சம காலத்தில் இடம்பெறுமெனக் கருதப்படுவதாலேயே போட்டிகளை வேறு நாடுகளில் நடத்துவதற்கு பி.சி.சி.ஐ. ஆராய்ந்து வருகிறது.

பி.சி.சி.ஐ. அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி இந்தியாவின் 'தி பினான்ஸ் எக்ஸ்பிரஸ்' இணையம் வெளியிட்டுள்ள செய்தியின் படி, அடுத்த வருடத்திற்கான சில ஐ.பி.எல். போட்டிகள் இந்தியாவில் இடம்பெற்ற பின்னர் இந்தியன் பிறீமியர் லீக் தொடர் இலங்கை அல்லது பங்களாதேஷிற்கோ அல்லது இரு நாடு களுக்குமோ மாற்றப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இடம் பெறவில்லையாயின், ஆரம்பப் போட்டிகள் இலங்கை அல்லது பங்களாதேஷில் அல்லது இரு நாடுகளிலும் இடம்பெற்ற பின்னர் இத் தொடர் இந்தியாவிற்கு மீண்டும் கொண்டுவரப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் அடுத்த வருடத்திற்கான ஐ.பி.எல். தொடர் இரண்டு பாகங்களாக இடம்பெறுவது ஓரளவுக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. 2009ஆம் ஆண்டு இதே காரணத்திற்காக இந்தியன் பிறீமியர் லீக் தொடர் இறுதிநேரத்தில் தென்னாபிரிக்காவிற்கு மாற்றப்பட்டது. போட்டிகள் வெற்றிகரமாக நடததி முடிக்கப்பட்டிருந்தாலும், இந்திய உள்ளூர் ரசிகாகள் அந்தக் கொண்டாட்டங்களில் நேரடியாகப் பங்குபற்ற முடியாமல் போனது. ஆனால், இவ்விடயம் தொடர்பாக தமக்கு இதுவரை எந்தத் தகவல்களும் பி.சி.சி.ஐ.யிடமிருந்து கிடைக்கவில்லை என ஶ்ரீலங்கா கிரிக்கெட் குறிப்பிட் டுள்ளது. அவ்வாறு கோரிக்கைகள் வரும் பட்சத்தில் அதுபற்றி மேற்கொண்டு சிந்திக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளது. இவ்வருடம் இடம்பெற்ற ஐ.பி.எல். போட்டிகளில் இலங்கை வீரர்கள் எவரையும் சென்னை மைதானத்தில் விளை யாட தமிழக அரசும், ஈழ ஆதரவுக்கட்சிகளும் அனுமதிக்கவில்லை. இந்நிலை யில் ஐ.பி.எல். விவகாரத்தை ஶ்ரீலங்கா கிரிக்கெட் எவ்வாறு கைக்கொள்ளப் போகின்றது என்ற பெரியதொரு கேள்வியும் நிலவுகின்றது.

## 13வது கிராண்ட் ஸ்லாம் வென்றார் நடால்

யு.எஸ்., பகிரங்க ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் நடால் சம்பியன் பட்டம் வென்றார். விறுவிறுப்பான இறுதிப்போட்டியில் செர்பியாவின் ஜோகோவிச்சை நடால் வீழ்த்தினார். உலகின் நம்பர்-1 வீரர் செர்பியாவின் ஜோகோவிச், தரவரிசையில் இரண்டாவது இடத்திலுள்ள நடாலை எதிர் கொண்டார். சுமார் மூன்றரை மணி நேரம் நீடித்த ஆட்டத்தின் முடிவில், நடால் 6-2, 3-6, 6-4, 6-1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

இதன் மூலம், நடால் யு.எஸ்., பகிரங்க தொடரில் இரண்டாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார. இதற்கு முன் 2010ம் ஆண்டு இத்தொடரை கைப்பற்றியிருந்தார். தவிர, மொத்தமாக நடால் பெறும் 13வது கிராண்ட்ஸ்லாம் பட்டம் இதுவாகும்.

இதேவேளை, பெண்கள் ஒற்றையர் பிரிவில் உலகின் நம்பர்-1 வீராங்கனை அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் பெலாரசின் அசரன்காவை தோற்கடித்துப் பட்டம் வென்றார். 2 மணி நேரம், 45 நிமிடங்கள் நடந்த போராட்டத்தின் முடிவில், செரினா வில்லியம்ஸ் 7-5, 6-7, 6-1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, கிண்ணத்தை வென்றார். இதற்கு முன் 1999, 2002, 2008, 2012 இல் சாதித்த செரினா, ஐந்தாவது முறையாக யு.எஸ்., பகிரங்க பட்டம் கைப்பற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. மொத்தம், 17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும் செரினா வென்றுள்ளார்.





## ஓய்வை அறிவிப்பாரா?

கிரிக்கெட் வீரர்கள், அவர்களின் பெறுபேறுகள் உச்சத்தில் இருக்கும் போதே ஓய்வு பெறுவது சாலச்சிறந்தது. பல முன்னணி வீரர்கள் சரியான தருணங்களில் ஓய்வை அறிவிக்கத் தவறியதால், அணியிலிருந்து ஓய்வு வழங்கப்பட்டு அவர்களாகவே கிரிக்கெட்டிலிருந்து ஓய்வை அறிவித்த சம்பவங்கள் நிறையவே நிகழ்ந்துள்ளன. தக்க சமயத்தில் ஓய்வை அறிவித்து புதியவர்களுக்கு இடம் வழங்குவதில் அவுஸ்திரேலிய வீரர்கள் என்றுமே முன்மாதிரியாகத் திகழ்ந்திருக்கின்றார்கள். சராசரியாக 35 வயதை ஓய்வு பெறும் வயதாக கிரிக்கெட் வீரர்கள் தேர்வுசெய்து கொள்வார்கள். வீரர்களின் பெறுபேறுகளைப் பொறுத்து ஒரு சில வருடங்கள் அதில் நீடிப்பு இருக்கும். ஆனால், 40 வயதைத் தாண்டியும் விளையாடிய கிரிக்கெட் வீரர்களை கடந்த 15 வருடங்களில் விரல் விட்டு எண்ணி விடலாம்.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்டவீரர் சச்சினுக்கு 40 வயதாகியும் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வை அறிவிக்கவில்லை. 20/ 20 போட்டிகளில், ஆரம்பத்திலிருந்தே ஓரம்கட்டப்பட்டும், ஒருநாள் போட்டிகளில் மோசமான பெறுபேறுகள் காரணமாகவும் அவ்விரு போட்டிகளிலிருந்தான ஓய்வை அறிவித்தவர் இதுவரை 198 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். இதனால், தனது 200ஆவது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வை அறிவிப்பார் என பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டியில் அதிக ஓட்டங்கள், அதிக சதங்கள், சர்வதேச போட்டிகளில், மொத்தமாக 100 சதங்கள் உட்பட பல்வேறு சாதனைகள் சச்சின் இதுவரை படைத்துள்ளார்.

பி.சி.சி.ஐ. இன் போட்டி அட்டவணைப்படி எதிர்வரும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் சச்சின் விளையாடுவது அவரது 200வது போட்டியைப் பூர்த்தி செய்யும். இதன் மூலம், 200 டெஸ்டில் விளையாடிய முதல் கிரிக்கெட் வீரர் என்ற புதிய சாதனை படைக்க அவர் காத்திருக்கிறார். ஆனால், இந்தத் தொடருக்கு முன்பதாக மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக இரண்டு டெஸ்ட், ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரை நடத்த முடிவு செய்யப்பட்டது. இந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளை கல்கத்தா மற்றும் மும்பையில் நடத்த ஏற்பாடு செய்யப்படுகிறது. இதனையடுத்து, சச்சின் தனது 200வது டெஸ்ட் போட்டியை சொந்த ஊரான மும்பையில், உள்ளூர் ரசிகர்களின் முன்னிலையில் விளையாடலாம். தவிர இவர், டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற விரும்பினாலும், சொந்த மண்ணில் விடை பெறலாம். விடை பெறுவரா சச்சின்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அழகான ராட்சசிகன்

நகைச்சுவைப் படங்களை இயக்கியதால் சுந்தர்.சிக்குப் போரடித்து விட்டதாம். காதல், நகைச்சுவை தவிர இன்னொரு புது விடயத்தைக் கையாண்டு படம் எடுக்கலாம் என்று யோசித்திருக்கிறார்.பேய்ப் படங்களுக்கு இப்போது தனி மதிப்பு இருப்பதால் அடுத்து ஒரு பேய்ப் படம் இயக்கலாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டார் சுந்தர்.சி

ரஜினி நடித்த 'சந்திரமுகி' மாதிரி பேய்ப் படம் இயக்கும் ஆசை அப்படியே சுந்தர்.சிக்கு ஒட்டிக்கொண்டது. இதனால் தான் இயக்கும் புதிய படத்தில் பேய் வசிக்கும் அரண்மனையில் பல திகில் சம்பவங்கள் நடப்பதுபோல் கதையை நகர்த்துக்கிறாராம்.படத்துக்கு 'அரண்மனை' என்ற தலைப்பு வைத்திருக்கும் சுந்தர்.சி இப்படத்தின் மூலம் மீண்டும் நாயகனாக அரிதாரம் பூசுகிறார். இன்னொரு நாயகனாக வினய்யும் நடிக்கிறார்.ஹன்சிகா மோத்வானி, ஆண்ட்ரியா, லட்சுமிராய் என்று மூன்று அழகான ராட்சசிகளும் இதில் நடிக்கின்றனர்




## முன்னாள் அழகி தமிழில்



தமிழில் அறிமுகமாகிறார் முன்னாள் மிஸ் இந்தியா வானியா மிஷ்ரா.

ரஜினி, கமல், சிரஞ்சீவி நாகர்ஜீன் போன்ற முன்னணி நடிகர்களை வைத்து 50க்கும் மேற்பட்ட படங்களை இயக்கியவர் சுரேஷ் கிருஷ்ணா.இவர் தற்போது சுரேஷ் கிருஷ்ணா புரொடக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரில் புதிய பட நிறுவனத்தைத் தொடங்கியுள்ளார்.இந்தநிறுவனம் மூலம் புதிய படம் ஒன்றைத் தயாரித்து, இயக்கவிருக்கிறார்.

படத்தின் பெயர் இன்னும் அறிவிக்கப்படாத நிலையில், இந்தப்படத்தில் நாயகனாக பரின்ஸ் நடிக்கவுள்ளார்.நாயகியாக 2012 மிஸ் இந்தியா வானியா மிஷ்ரா அறிமுகமாகின்றார்.

காதல், நகைச்சுவை, கலந்த படமாக உருவாகும் இதன் படப்படிப்பு ஒக்ரோபர் மாதம் தொடங்க உள்ளது.



## பருத்திவீரனாகும் கார்த்தி

மீண்டும் பருத்திவீரன் அவதாரம் எடுக்கவுள்ளார் நடிகர் கார்த்தி.என்ன முழிக்கிறீர்களா? கார்த்தி நீண்ட இடைவெளிக்கு பின்னர் ஒரு கிராமத்துக் கதையில் நடிக்கபோகிறார்.

ஆல் இன் ஆல் அழகுராஜா, பிரியாணி ஆகிய படங்களைத் தொடர்ந்து அட்டகத்தி ரஞ்சித்துடன் கூட்டணி சேரவுள்ளார் நடிகர் கார்த்தி.பெயரிப்படாத இந்தப்படத்தில் கார்த்திக்கு ஜோடியாக லட்சுமி மேனன் நடிக்கவுள்ளாராம்.

இந்தப்படம் குறித்து ரஞ்சித் கூறுகையில், இப்படமானது ஒரு கிராமத்துக் கதை. மேலும் திறமையான இளைஞர்களை வைத்து எடுக்கப்படவுள்ளது என்று கூறியுள்ளார்.

ஏற்கனவே கார்த்தியின் இரு படங்கள் தீபாவளி மற்றும் பொங்கலை முன்னிட்டு ரசிகர்களுக்கு விருந்து படைக்க உள்ளன என்பது குறிப்படத்தக்கது.பருத்திவீரன் பாணியில் அமையவுள்ள கிராமத்துக்கதை என்பதால் மீண்டும் ரசிகர்களின் வரவேற்பை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பார்வதி

தமிழில் அஜித் நடித்த பில்லா-2 படத்தில்
ஓமனக்குட்டன்.முதல் படமே பெரிய நாயக
தலைக்கனத்தோடு நடந்து கொண்ட... ஆ
கொள்ளும் அளவுக்கு இல்லை.அடுத்தடுத்
எதிர்பார்த்து காத்திருந்தவருக்கு ஏமாற்றம்
சென்னைக்கும், கேரளாவுக்கும் அலைந்து
தங்கி விட்டார்.இந்தநிலையில் தான், நதி
மீண்டும் கோடம்பாக்கத்துக்கு அழைத்து வ
முற்பணம் வாங்கும் முன்பே ஏகப்பட்ட வி
மேலும் படத்தின் கதை சொல்லப்பட்டு ச
காசோலையில் 20 லட்சம் தர வேண்டும் எ
ஆடிப்போன படாதிபதிகள், சத்தமே இல்ல
நடிகையை ஒப்பந்தம் செய்து விட்டார்களா

## ஜப்பானில் ஸ்ரீ தே

ஜப்பான் நாட்டை கலக்கியுள்ளார் முன்னா
கன்னி ஸ்ரீதேவி.ஜப்பானின் ஆய்சி திரைப்ப
திரையிடப்பட்ட ஸ்ரீதேவியின் இங்கிலீஷ் வி
படத்திற்கு ஜப்பான் பெண்கள் மத்தியில் பெ
ஆதரவு கிடைத்துள்ளதாம்.

ஸ்ரீதேவியின் படம் எதுவும் இதுவரை ஜப்ப
திரையிடப்பட்டதில்லை.இந்தநிலையில் அ
கிலீஷ் விங்கிலீஷ் விரைவில் திரைக்கு வரவ
ஆனால் படம் வருவதற்கு முன்பே பட விழா
படம் கலக்கி விட்டதாம்.

செப்ரெம்பர் 1ஆம் திகதி நடந்த ஆய்சி திரை
விழாவில் இங்கிலீஷ் விங்கிலீஷ் திரையிடப்
அதற்கு பெண்கள் மத்தியில் பரமாதமான வ
கிடைத்ததாம்.பட விழாவில் ஸ்ரீதேவி படத்
அவரது ரசிகைகளாகி விட்ட ஜப்பான் பெண்
தற்போது ஸ்ரீதேவியை நேரில் பார்க்கத்
துடிக்கிறார்களாம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## கஜாலின் உற்சாகம்

குடும்பத்தோடு
வெளிநாட்டுக்கு சுற்றுலா
போய் வந்த பிறகு, காஜல்
அகர்வால் மிகவும்
உற்சாகமாக இருக்கிறார்.
'ஆல் இன் ஆல் அழகு
ராஜா', 'ஜில்லா' எனத்
தொடர்ச்சியாக நகைச்சுவை
வேடங்கள். உதயநிதியுடன்
இணையும் படத்திலும்
விக்ரமுடன் இணையும்
'ராஸ்கல்' படத்திலும்
அவருக்கு கலகலப்பான
வேடங்கள்தானாம்.இதனால்
மிகவும் உற்சாகத்துடன்
வளைய வருகிறாராம் காஜல்.



## வைகைப் புயல் மீண்டும்

தமிழில் உருவாகும் புதிய படத்தில் மீண்டும் பரத்-வடிவேலு இணைந்து கலக்க உள்ளனர். சின்னத்திரை இயக்குனர் திருமுருகன் இயக்கத்தில் வெளிவந்து பெற்றி பெற்ற படம் எம்டன் மகன். இப்படத்தில் பரத், கோபகா, நாசர், சரண்யா, வடிவேலு உட்பட பலரும் நடித்திருந்தனர்.இந்நிலையில் திருமுருகன் இயக்கப் போகும் புதிய படத்தில் மீண்டும் பரத்- வடிவேலு இணைய உள்ளனர்.தற்போது நாதஸ்வரம் என்ற நெடுந்தொடரை சின்னத்திரையில் இயக்கி வரும் திருமுருகன், விரைவில் புது படத்தை எடுக்க உள்ளார்.குடும்ப கதை மற்றும் நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்தப்படத்தை உருவாக்க இருப்பதாக கூறுகிறார்கள்.மெட்டி ஒலி, நாதஸ்வரம் தொடர்களிலும், எம்டன்மகன் படத்திலும் கிடைத்த புகழைவிட இந்தப்புதிய படத்துக்கு கிடைக்கும், ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைக்கும் என நம்பிக்கையுடன் கூறிவருகிறார் இயக்குனர் திருமுருகன்.



## ...தி பாவம்

...டத்தில் நாயகியாக நடித்தவர் பார்வதி
...ய நாயகருடன் நடித்து விட்டதால், கொஞ்சம்
... ஆனா... படத்தில் அவரது நடிப்பு சொல்லிக்
...த்தடுத்துப் படவாய்ப்புகள் குவியும் என்று
...மாற்றம் தான் மிஞ்சியது.இதனையடுத்து
...லைந்து கொண்டிருந்தவர், பின் கேரளாவிலேயே
...ன், நதிகள் நனைவதில்லை என்றொரு படத்துக்காக
...ழத்து வரப்பட்டார் பார்வதி.அந்த படத்தில் நடிக்க
...ட்ட விளம்பரங்கள் செய்து கொண்டார்.
...பட்டு சம்பள பேச்சுவார்த்தை நடந்தபோது, ஒரே
...ாடும் என்று தடாலடியாக கூறிவிட்டாராம்.இதனால்
... இல்லாமல் பார்வதியை கழட்டிவிட்டு வேறொரு
...ார்களாம்.

## ... தேவி

...ன்னாள் கனவுக்
...ரைப்பட விழாவில்
...லீஷ் விங்கிலீஷ்
...வில் பெருவாரியான

...ர ஜப்பானில்
...ில் அவரது இங்
... வரவுள்ளது.
... விழாவில் அவரது

... திரைப்பட
...யிடப்பட்டபோது
...ான வரவேற்பு
...டத்தைப் பார்த்து
... பெண்கள்



## ஜில்லா கதை என்ன?



விஜய் நடித்துவரும் 'ஜில்லா' படத்தில் மோகன்லால் ஒரு குறிப்பட்ட பகுதியில் அரசியல் செல்வாக்கு படைத்த பிரபல ரவுடி. பொலிஸிலும் தனது செல்வாக்கு கொடிகட்டிப் பறக்க வேண்டுமானால் தன்னிடம் இருக்கும் ஒருவனை பொலிஸ் அதிகாரியாக்க வேண்டும் என்று நினைக்கிறார், லால்.

சிறுவயதில் தன்னிடம் அடைக்கலம் தேடிவரும் சிறுவன் விஜய்யை பொலிஸ் அதிகாரியாக்குகிறார். ஒரு கட்டத்தில் விஜய் காக்கிச் சட்டையோடு வலம்வர லால் முகத்தில் மகிழ்ச்சி வெள்ளம்.முதலில் மோகன்லால் பேச்சைக் கேட்டுத் தப்புக்குத் துணைபோகும் விஜய், அப்புறம் நிஜமாகவே நியாயத்துக்காகப் போராடுகிறார். திடீரென்று லாலின் மகன் ஒரு கொலைக் குற்றத்தில் சிக்கிவிட, அவனை ஜெயிலுக்கு அனுப்பிவிடுகிறார் விஜய்.அன்றுமுதல் விஜய் லாலின் பரம எதிரியாகிறார்.

இதுதான் விஜய் நடித்து வரும் ஜில்லா படத்தின் கதை. மதுரையில் நடந்த அரசியல் சம்பவங்களை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ளதால் படத்தில் ஆங்காங்கே கருணாநிதியின் மகன் அழகிரி பற்றிய சம்பவங்களும் மறைமுகமாக உள்ளனவாம். படக்கதைப்படி அழகிரி பாத்திரத்தில் மோகன்லாலும், தயாநிதி ரோலில் மஹத்தும் நடிக்கிறார்கள். அதுசரி இந்த மஹத் யார் தெரியுமா? உண்மையிலேயே தயாநிதி அழகிரியின் நெருங்கிய நண்பர்தான். மங்காத்தாவில் அஜித்துடன் நடித்தவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்யா கையில்தான் என் கல்யாணம்

## – உள்ளம் திறக்கிறார் விஷால்

ஒரு காலத்தில் தொடர்ந்து வெற்றிப்படங்களையே கொடுத்து வந்த விஷாலுக்கு இப்போது கெட்டகாலம் போலும். அவர் எவ்வளவுதான் கஷ்டப்பட்டு நடித்தாலும் அண்மைக்காலமாக சொல்லிக் கொள்ளும்படியான வெற்றிகளைப் பெற முடியாமல் தவித்து வருகிறார். இந்த நிலையில் வெகுவிரவில் வெளிவரவுள்ள மதகஜராஜா திரைப்படத்தையே அவர் பெரிதும் நம்பியிருக்கிறார்.

இந்த நிலையில் அவருடன் ஒரு சந்திப்பு.



'மதகஜராஜா' படத்தின் கதைதான் என்ன?

நான், சந்தானம், நிதின் சத்யா, சடகோபன் ரமேஷ் நான்கு நண்பர்கள். என்னைத் தவிர மற்ற மூன்று பேருக்கும் தற்கொலை முடிவுக்கே போற அளவுக்கு ஏதோ ஒரு பிரச்சினை. அந்தச் சமயம் பார்த்து, என் பெண்ணின் கல்யாணத்துக்கு அவசியம் வந்து விடுங்கள் என்று சின்ன வயதில் நாங்கள் பாடம் படித்த பள்ளிக்கூட வாத்தியார் அன்பாகக் கூப்பிடுகிறார். கல்யாணத்துக்குப் போய்விட்டு வந்து அந்தப் பிரச்சினையைப் பற்றி முடிவெடுக்கலாம் என்று கிளம்புகிறோம். அங்கே அந்த மூன்று பேர் பிரச்சினைக்கும் காரணமான ஒருத்தரைச் சந்திக்கிறோம். அது யார், என்ன பிரச்சினை, அதில் இருந்து எப்படி மீள்கிறோம்... இதுதான் 'மதகஜராஜா'கதை!

கதை சரி... அது என்ன சுந்தர்.சி படம் என்றாலே இரண்டு நாயகிகள்?

உங்கள் கனிவான கவனத்துக்கு... இந்தப் படத்தில் இரண்டு இல்லை... அஞ்சலி, வரலட்சுமி, சதா என்று மூன்று நாயகிகள். மற்றும்படி 'ஒரு படத்தில் ஏன் இத்தனை நாயகிகள்' என்று இயக்குநரிடம் தான் கேட்கவேண்டும்.

நீங்கள் சமீபத்தில் நடித்த படங்களால் 'வெடி, சமர், பட்டத்துயானை' என்று எல்லா முயற்சியும் பண்ணிப் பார்த்தாலும் வெற்றி சிக்கவில்லையே..! அது ஏன்?

நான் எப்போதும் நடித்து முடித்த படங்களைப் பற்றி போஸ்ட்மார்ட்டம் பண்ண மாட்டேன். அது பிடிக்கவும் பிடிக்காது. 'நல்ல படம்' என்று அந்தச் சமயம் மனசில் தோன்றினால் நடித்துவிடுவேன். 'ஐயோ... அவ்வளவு உயிரைக் கொடுத்து நடிச்சும் தோல்விதானே' என்று உட்கார்ந்து யோசித்து கவலைப்பட்டுக்கொண்டு இருக்க மாட்டேன். அடுத்த தடவை எல்லாம் கூடிவரும் என்று நினைத்து உழைக்க ஆரம்பித்து விடுவேன்!

சிம்புவே நயன்தாராவுக்கு அடுத்து ஹன்சிகாவைக் காதலிக்க ஆரம்பித்து விட்டார். ஆனா ஒரு நடிகையைக் காதலிக் கிறேன் என்று நீண்ட காலத்துக்கு முன்னரே சொன்னவர் நீங்கள். எப்போது உங்களுக்கு கல்யாணம்?

ஆர்யாவுக்கு எப்போது கல்யாணம் நடக்கிறதோ, அதற்கு மறுநாள்! இதை ஆர்யா வீட்டிலும் சொல்லி விட்டேன் ஆகவே என் கல்யாணம் இப்போ ஆர்யா கையில் தான் !

விஸ்வரூபம் பட வெளியீட்டில் சிக்கல் வந்தபோது நீங்கள் உட்பட தமிழ் சினிமாக்காரர்கள் அனைவரும் கமலுக்கு ஆதரவாக நின்றீர்கள். ஆனால் 'தலைவா' படத்துக்கு பிரச்சினை வந்தபோது விஜய்க்கு யாரும் கை கொடுக்கவில்லையே...?

'விஸ்வரூபம்' பிரச்சினைக்கு இதுதான் காரணம் என்று ஏதோ ஒரு விஷயம் தெளிவாகத் தெரிந்தது. எல்லாரும் அதைப் பற்றிப் பேசினோம். ஒற்றுமையாக நின்றோம். ஆனால் 'தலைவா' வுக்கு என்ன பிரச்சினை, யார் மூலமாகப் பிரச்சினை என்று எதுவுமே தெரியவில்லையே. ஆனால் இனிமேல் இப்படி யாருக்கும் நடக்கக் கூடாது. அதுதான் என் ஆசை! - என்றார்.


**உங்கள் நாணயத் தாளினை தெரிந்துக் கொள்ளுங்கள்.**


முன்பு வழங்கப்பட்டவை



ஞாபகார்த்த தாள்



தற்போது வழங்கப்படுகின்றவை



**1 நீர்வரி அடையாளத்தை பாருங்கள்**

தாளினை வெளிச்சத்தில் உயர்த்திப் பிடிப்பதனால் நீர்வரி அடையாளமாக தெளிவான வாளேந்திய சிங்கம் ஒன்றினைப் பார்க்கலாம். தாளின் இரு புறங்களிலும் இதனைப் பார்க்கக்கூடியதாயிருக்கும்.

தாளினை வெளிச்சத்தில் உயர்த்திப் பிடிப்பதனால் நீர்வரி அடையாளமாக தெளிவான வாளேந்திய சிங்கம் ஒன்றினை பார்க்கலாம். தாளின் இரு புறங்களிலும் இதனைப் பார்க்கக்கூடியதாயிருக்கும்.

தாளினை வெளிச்சத்தில் உயர்த்திப் பிடிப்பதனால் நீர்வரி அடையாளமாக நாணயத் தாளின் வலப் புறத்திலுள்ள பறவையே காணப்படுவதைப் பார்க்கலாம். நாணயத் தாளின் பெறுமதி இலக்கங்களில் நிலைக்குத்தாக தெளிவான நீர்வரி அடையாளமாகக் காணப்படுகிறது.

**2 பாதுகாப்பு நூலினைப் பாருங்கள்**

சாய்த்துப் பிடிக்கும்போது சிவப்பிலிருந்து பச்சைக்கு நிறமாற்றமடையக்கூடிய நூல் அல்லது உருவமைப்புடன்கூடிய அடர்த்தியான வெள்ளி நூல் அல்லது உடைந்தக் கோடு போல் தென்படும் மெல்லிய வெள்ளி நூல். தாளினை வெளிச்சத்தில் பிடித்துப் பார்க்கும்போது உடைந்த கோடுகள் ஒரே கோடு போல காட்சியளிக்கும்.

உடைந்தக் கோடு போல் தென்படும் வெள்ளி நூல். தாளினை வெளிச்சத்தில் பிடித்துப் பார்க்கும்போது "CBSL 1000" என்ற சிறிய எழுத்துக்களுடன் கூடிய உடைந்த கோடுகள் ஒரே கோடு போல காட்சியளிக்கும்.

தாளினை சாய்த்துப் பார்க்கும்போது சிவப்பிலிருந்து பச்சைக்கு நிறமாற்றமடையக்கூடிய அடர்த்தியான யன்னல் வடிவிலான நூல். வெளிச்சத்தில் பிடித்துப் பார்க்கும்போது "RS 1000" மற்றும் "CBSL" என்ற சிறிய எழுத்துக்களுடன் கூடிய தொடர்ந்துச் செல்லும் நூலினைக் காணக்கூடியதாயிருக்கும்.

**3 மேற்கிளம்பிய அச்சிடலை உணருங்கள்**

தாளின் மீது உங்கள் விரல் நுனியினை ஓடவிடுவதன் மூலம் தடிப்பான மை படர்ந்த இடங்கள் அல்லது மேற்கிளம்பிய அச்சிடல் தாக்கத்தினை உணருங்கள். (உதாரணம். மத்திய வங்கி என்ற தலைப்பு, புதிய தொடரில் இரு ஓரங்களிலும் காணப்படும் தொட்டறியக்கூடிய நாடா, மத்தியிலுள்ள படங்கள் முதலியன)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

100% பருத்திக் கம்பளியினால் தயாரிக்கப்பட்ட நாணயத் தாள் சாதாரண கடதாசியிலுள்ள எழுத்துக்களிலிருந்து வேறுபடுவதனை உணருங்கள்.

இல 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1 ☎ 0112477355 , 011477587 0112477726 , 0112477701 @currency@cbsl.lk www.cbsl.gov.lk

குற்றக் கோவையின் கீழ் போலி நாணயத் தாள் தயாரித்தல் தண்டனைக்குரிய குற்றமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவுக்கரம் நீட்டும் ஈவ் ஏன்ஸ்லர்



தன்னுடைய விருது பெற்ற உலகப்புகழ் பெற்ற The vagina monologues மூலம் இலக்கிய உலகில் அறியப்பட்ட ஈவ் ஏன்சர் பெண்களிற்கெதிரான வன்முறைகளிற்கெதிராகப் பரவலாகப் போராடி வருகின்ற ஒருவராவார். நாடகத்துறையில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த இவர், நடிப்பில் மட்டுமன்றி, திரைக்கதை மற்றும் எழுத்துத் துறைகளில் அறியப்பட்ட ஒருவராவார்.

பாதிக்கப்பட்ட பெண்களிற்காக இலாப நோக்கமற்ற கழகமான வி-டே *(V-DAY)* யினை உருவாக்கி கொங்கோ நாட்டின் போர் மற்றும் அது தொடர்பான சம்பவங்களால் பாதிக்கப்பட்ட பாலியல் ரீதியான துன்புறுத்தல்களிற்கு உள்ளான பெண்களிற்கு ஆதரவளித்து வருகிறார். அதுமட்டுமன்றி பெண்களிற்கெதிரான வன்முறையை ஒழிக்கும் சர்வதேச இயக்கம் ஒன்றின் தலைமைப் பொறுப்பில் இருந்து செயற்பட்டுவருகிறார்.

இதுவரை இவர் பெற்றுக்கொண்ட விருதுகள் பல. அவற்றுள்..

**Tony Award - In 2011**
**Guggenheim Fellowship Award in Playwriting, 1999**
**Berrilla-Kerr Award for Playwriting, 2000**
**The Sandra Day O'Connor Award from The Arizona Foundation for Women in Phoenix, 2005**
**Honorary Doctor of Human Letters from Manhattanville College, 2005**
**Honorary Doctor of Communications from Simmons College, 2006**
**City of New York Proclamation in honor of founding and her work for V-Day, 2006**

என்பன முக்கியமானவை.

# புதுயுகத்தைத் தேடி......

மகளிர் பக்கம்

தொகுப்பு: ஸ்ருதி

# உதட்டுச் சாயம் அவசியமா....?



பெண்கள் அன்றாடம் பயன்படுத்தும் அழகு சாதனங்களில் 500க்கும் மேற்பட்ட இரசாயனங்கள் கலந்துள்ளதாக இங்கிலாந்தில் உள்ள வாசனை திரவிய நிறுவனம் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது. சில வகை நச்சுத் தன்மையுள்ள இரசாயனங்களை பயன்படுத்துவோருக்கு நரம்பு சார்ந்த கோளாறுகள் மற்றும் புற்றுநோய் பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக நீண்ட காலமாக ஆராய்ச்சியாளர்கள் அறிவுறுத்தி வருகின்றனர். குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு இரு முறையாகிலும் பெண்கள் பயன்படுத்தும் உதட்டுச் சாயத்தில் (லிப்ஸ்டிக்) 9 வகை இரசாயனங்கள் கலந்துள்ளன.

சராசரியாக மனித உடல் கிரகித்துக் கொள்ளும் அளவிற்கும் 20 சதவீதம் அதிகமாக அலுமினியம், காட்மியம், மேங்கனீஸ், குடல் புற்று நோய்க்கு காரணமான குரோமியம் போன்ற உலோகக் கலவைகளும் லிப் ஸ்டிக் தயாரிப்பில் பயன்படுத்தப்படுவதாகத் தெரியவந்துள்ளது. தற்கால இளம் பெண்கள் விரும்பும் அற்புத வளர்ச்சி, முகமாற்று அறுவை சிகிச்சை போன்ற முறைகளிலும் அதிக ஆபத்து உள்ளது.

இவ்வகை சிகிச்சைகளினால் விரைவில் முதுமை எய்துதல், முகச் சுருக்கம், நீரிழிவு நோய், மருந்து மாத்திரைகளின் சக்தியை கிரகித்துக் கொள்ள முடியாத இயல்பு போன்ற பக்க விளைவுகளும் ஏற்படலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

# காலைநேரக் காய்ச்சல்

காலை நேர நோய் (*morning sickness*) எனப்படுவது கர்ப்பமான பெண்களுக்கு ஏற்படுகின்ற ஒரு நிலையாகும். அதாவது இது நோய் என்று சொல்லப்பட்டாலும் தாய்க்கோ அல்லது குழந்தைக்கோ எந்த விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை.

இது கர்ப்பமான பெண்களில் ஏற்படுகின்ற வாந்தி மற்றும் வாந்தி எடுக்க வேண்டிய உணர்வு (*nausea*) என்பவற்றையே காலை நேர நோய் என்கின்றோம்.

இந்தக் காலை நேர நோயானது கர்ப்பமாகி முதல் மூன்று தொடக்கம் நான்கு மாதங்களுக்கே காணப்படும்.

அதாவது ஒரு கர்ப்பமான பெண் வாந்தியினால் அவதிப்படுவது முதல் மூன்று மாதங்களுக்கே. இந்த நோயினால் குழந்தைக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது.

### காலை நேர நோயின் ஆதிக்கத்தை குறைக்க சில வழிகள்

எண்ணைத்தன்மையான மற்றும் கொழுப்புத் தன்மையான உணவுகளைத் தவிர்க்க வேண்டும். (பொரித்த காரம் கூடிய உணவுகள்)

ஒரேயடியாக் நிறையச் சாப்பிடுவதைத் தவிர்த்து, கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிட வேண்டும்.

காபோகைதறேட்டு (*carbohydrate*) நிறையக் கொண்ட உணவுகளை சாப்பிட வேண்டும் (வெள்ளை அரிசி, அவித்த உருளைக் கிழங்கு, இனிப்புக் குறைவான மாவினால் செய்த பிஸ்கெட் போன்றவை)

நித்திரையால் எழுந்தவுடன் படுக்கையில் சற்று நேரம் அமர்ந்து இருந்து ஆறுதலாகச் சுவாசியுங்கள்

பழங்கள், மரக்கறி வகைகளை அதிகம் உட்கொள்ளுங்கள்.

வயிறு முற்றாக வெறுமையாவதைத் தவிருங்கள்.

படுக்கையில் இருந்து எழுந்தவுடனேயே உங்கள் அன்றாட செய்கைகளில் ஈடுபடும் முன் சீனித்தன்மை குறைந்த பிஸ்கட் ஏதாவது சாப்பிடுங்கள் .

இது தவிர அளவுக்கதிகமான வாந்தி உங்களை வாட்டுமானால் வைத்தியரை நாடி வாந்தியைத் தடுக்கும் மருந்துகளை உட்கொள்ளலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைச்சம்பவம்

# புதைமணல் பயங்கரம்

■ ஜெகன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஆஷ்லியின் உடம்பு இடுப்பு வரை மணலில் புதைந்துவிட்டது. மரக்கிளையைப் பற்றியிருந்த கைகளும் வலிக்கத் தொடங்கியிருந்தன. எந்நேரத்திலும் கைப்பிடியும் தளர்ந்துவிடும் என்று தோன்றியது. ஆஷ்லியும் தான் பலவீன மடைவதாக எண்ணினார்.

அவர் மீண்டும் உதவி கோரிக் கத்தினார். அவ்விதம் அவர் கூப்பாடு போடுவதும், அவரிருந்த நிலைமையில் உடல் வலிமையைப் பாதித்தது. பனிபெய்யத் தொடங்கிற்று. குளிரில் அவர் உடல் நடுங்குவதுடன், கைகளும் பிடியை இழந்துவிடுமோ என்ற அச்சமும் அவர் மனதில் எழுந்தது.

மணல் நிலம் மேலும் ஓரிரு அங்குலம் வரையில் அவர் உடலை உள்ளிழுத்துக் கொண்டது. மரக்கிளைதான் அவரை விரைவில் மணல் விழுங்கிவிடாது காப்பாற்றிக் கொண்டிருந்தது. கைகள் மரத்தன. கிளையின் பிடி சிறிது தளர்ந்து கீழே இறங்கியது. உதவி ஏதாவது வரும் வரையில் எப்படியாவது மரக் கிளையைப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். தளர விடக்கூடாது. அதனால் அவர் தன்னாலியன்ற மட்டும் பலத்தைப் பிரயோகித்து கிளையிலிருந்து நழுவிக் கீழிறங்கும் கைகளின் பிடியை இறுக்கிக் கொண்டார். அதைத் தவிர வேறு வழியொன்றும் அவருக்கு இருக்கவில்லை.

ஒரு மணி நேரமாகிவிட்டது. ஆஷ்லியின் மார்பும் மணலில் மறையத் தொடங்கியது. காட்டில் மிருகங்கள் பறவைகளின் ஒலிகளைத் தவிர வேறேதுவும் கேட்பதாயில்லை. இனியும் சும்மா இருக்கக் கூடாது, இறுதிமுயற்சியாக பலம் கொண்ட மட்டும் உரக்கக்கத்தி உதவிக்கு அழைக்க வேண்டும் என்று எண்ணினார். உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இதைவிட வேறு வழியே கிடையாது என நம்பினார்.

* * *

காட்டிலாகாவில், அக்காட்டுப் பகுதிக்குப் பொறுப்பாகப் பணிபுரியும் ஜக்சன் அப்போது தான் வீடு திரும்பியிருந்தார். வேலை முடிந்த பின் அவர் தம் நண்பர்களுடன் சேர்ந்த சிறிது மது அருந்திவிட்டு உணவை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தார். அச்சமயத்தால் ஆஷ்லியின் தீனமான குரல் அவர் காதில் கேட்டது.

அவர் எழுந்து வீட்டின் உள்பகுதிக்குச் சென்றார். அப்போதும் அதே தீனக்குரல் கேட்டுக் கொண் டிருந்தது. ஏதோ காட்டுப்பிராணி கத்துகிறது போலும் என்று எண்ணினார். எனினும் என்னவென்று கையில் ரோர்ச் லைட்டுடன் வெளியே புறப்பட்டார்.

சுமார் அரைமணிநேரம் அவர் பல இடங்களைச் சுற்றிப் பார்த்தார். அப்போது ஆஷ்லி களைப்பின் நிமித்தம் உதவிகோரிக் கூப்பாடு போடுவதை நிறுத்தியிருந்தார். இரண்டு மணி நேரமாயிற்று. மீண்டும் தீனக்குரல் கேட்டது. சந்தேகத்திற்கு இடமின்றி அது மனிதக்குரல் தான், யாரோ ஒருவர் ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கின்றார் என்பதை உணர்ந்தார்.

ஜக்சன் சற்றும் தாமதியாது, உடனே வீட்டை விட்டுப் புறப்பட்டார். காடு முழுவதும் தேடினார். எங்கும் யாரும் கண்ணில் அகப்படவில்லை. அவருக்கு ஒரு யோசனை மூளையில் தட்டியது. கிராமத்திற்கு சென்று உதவிக்குப் பலரை அழைத்துக் கொண்டார். அவர்களும் கைகளில் தடி, கயிறு, விளக்கு என்பவற்றினை எடுத்துக் கொண்டு ஜக்சனைப் பின்தொடர்ந்து சென்றனர்.

காட்டுப் பகுதிகளில் அவர்கள் அனைவரும் குழுக்களாகப் பிரிந்து சென்று தேடுதல் நடத்தினர். நேரம் நள்ளிரவைத் தாண்டியது. அப்போது தான் ஆஷ்லியின் சைக்கிள் அவர்கள் பார்வையில் பட்டது. நிலைமையைப் புரிந்து கொண்ட அவர்கள் ஒரு கணமேனும் தாமதியாது கொண்டுவந்த கயிற்றின் உதவியுடன் ஆஷ்லியை மேலே இழுத்தெடுத்தனர். அச்சயமத்தில் அவரால் எதுவும் பேச முடியவில்லை. குளிரால் விறைத்த நிலையில் மிகவும் பலவீனமடைந்திருந்தார். தாமதியாது அவரைத் தூக்கி வண்டியொன்றில் போட்டுக்கொண்டு லின்டஸ்போர்க் மருத்து வமனைக்குச் கொண்டு சென்றார்.

மருத்துவ மனையில் அவரைப் பரிசோதித்த டாக்டர்கள் அவரது கைகள் இரண்டும் விறைத்து செயலற்ற நிலையில் இருப்பதைக் கண்டறிந்தனர்.

அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்ட ஆஷ்லிக்கு மறுநாட் காலை 10 மணியளவில் நினைவு திரும்பியது. ஆனாலும் இரு வார சிகிச்சையின் பின்னரே ஆஷ்லி உடல் விறைப்புக் குணமடைந்து வீடு திரும்ப முடிந்தது.

***


## தரம் 4, 3 மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஒரு நற்செய்தி!

2014, 2015 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் உங்கள் பிள்ளைகளுக்கான புலமைச்சுடர் கையேடானது செப்ரெம்பர் 30 ஆம் திகதியிலிருந்து வெளிவரவுள்ளது.

திங்கட்கிழமை தோறும் வெளிவரும் முதற்தரக் கையேடு



## புலமைச்சுடர்



தரம் 5, 4, 3 மாணவர்களுக்கான ஒரு வாரகால ஆக்கங்களைத் தாங்கி வரும் சிறப்பு வழிகாட்டி

01 தொடக்கம் 45 வரையான முற்றிலும் பாடத்திட்டத்தை தழுவியதாக பிரபல வளவாளர்களின் தயாரிப்பில் சிறந்த பயிற்சிகளுடன் மற்றும்,

- தரம் 04 மாணவர்களுக்கான வினாத்தாள்
- தரம் 03 மாணவர்களுக்கான வினாத்தாள்
- தரம் 4, 3 கற்றல் குறிப்புகள் தமிழ்மொழி, கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்
- பகுதி I வினாக்களுக்கு விடை காணும் விளக்கங்கள்
- கடந்தகால வினாக்கள் / பயிற்சிகள்
- கட்டுரைக்களம்
- ஆங்கிலம் / சிங்களம்
- சங்கமம்
- படக்குறிப்புக்கள்

» 01 தொடக்கம் 45 வரையும் தொடர்ச்சியாக பயிற்சிகள் செய்வதன் மூலம் பூரண பலனை அடையலாம்.
» முகவர்கள் அருகில் இல்லாத பாடசாலைகள் நேரடியாக தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளமுடியும்.

பரீட்சை அண்மித்த காலப்பகுதியில் புலமைச்சுடர் பெறும் புலமைசாலி அங்கத்தவர்களை ஒன்றிணைத்து உங்கள் பிரதேசத்திலேயே இலவசக் கருத்தரங்கினை நடாத்தி மாணவர்களை வழிப்படுத்த உள்ளோம். இச்செயற்றிட்டமானது வருடாவருடம் நடைபெறும் ஒன்றாகும்.

பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

ஆசிரியர் - கல்விச்சுடர்
இல.85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14.
தொலைபேசி: 011 5738855, 071 6850005.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(18)

ஔண்யன்

# இருளின் கதவுகளைத் திறந்தவன்

கேலிகலந்த தியோடாரின் இந்தப்பதில் வந்தவர்களின் மூக்குநுனிவரை கோபத்தைக் கொண்டுவரச் செய்தாலும் கஷ்டப்பட்டு அதனை அடக்கிக்கொண்டு அடுத்த கேள்வியை தியோடர் எதிர்பார்க்காத திசையில் இருந்து வீசினர்.

சரி, அவுஸ்திரேலியா சென்றமை உங்களின் சொந்தவிடயமாக இருந்துவிட்டுப் போகட்டும். விக்கிலீக்ஸ் நிறுவுநர் மிஸ்டர் யூலியன் அசாஞ்சே இறுதியாக உங்களை எப்போது தொடர்பு கொண்டார்?


இந்தக்கேள்வி நிலைமை கைமீறிப்போய் விட்டதென்பதை தியோடருக்கு துல்லியமாக உணர்த்தியது. ஜேர்மனியப்புலனாய்வுத்துறை சகல ஆதாரங்களையும் திரட்டிய பின்னரே தன்னைச்சுற்றி வளைத்திருப்பது அவருக்குப் புரிந்தது. இனியும் வார்த்தை ஜாலங்களால் அவர்களைத் திசைதிருப்ப முடியாதென முடிவு செய்து கொண்ட தியோடர் நிதானமான குரலில்- இப்போது நான் என்ன செய்யவேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள்? என்று கேட்ட கேள்வியில் தன் தோல்வியை தியோடர் ஒத்துக்கொண்டதை உளவாளிகள் விளங்கிக் கொண்டார்கள்.

இப்போதாவது எங்கள் வழிக்கு வந்தீர்களே! மைதானத்தின் வாசலில் நிற்கும் கறுப்புநிறக் காரில் நீங்களாகவே சென்று அமர்வது போல ஏறிக்கொள்ளுங்கள்.

அதன் பின் உங்களுக்கு எந்தத் தொந்தரவும் இல்லாமல் நீங்கள் போக வேண்டிய இடத்துக்கு நாங்கள் அழைத்துச் செல்கிறோம் புலனாய்வாளர்களின் கட்டளைக்கு கீழ்ப்படிவதைத் தவிர தியோடருக்கு வேறு தெரிவுகள் எதுவும் இருக்கவில்லை. காருக்கு நடந்து செல்லும் அந்தச் சில நிமிடங்களைப் பயன்படுத்தி தனது கைத்தொலைபேசியின் இணையத்தொடர்பை உயிர்ப்பித்து அதனூடாக யூலியனுக்கு தான் கைதான தகவலைத் தெரியப்படுத்தினார். அதன் பின் தியோடரின் கைத்தொலைபேசியில் இருந்த சகல ஆவணங்களும் ஒரே நொடியில் அழிக்கப்பட்டது. இனம்தெரியாத இடமொன்றில் சிறை வைக்கப்பட்டு தீவிரமான விசாரணைக்கு தியோடர் உட்படுத்தப்பட்டார். தனது சகா கைதான தகவல் கிடைத்ததும் யூலியன் கொதித்துப் போனான். கணப்பொழுதும் தாமதிக்காது காரியத்தில் இறங்கினான்.

ஜேர்மனி அரசு தியோடரை விடுவிக்க நிபந்தனைகள் பல விதித்தது. அவை எல்லாமே விக்கிலீக்ஸின் இருப்புக்கு உலை வைக்கும் நிபந்தனைகளாக இருந்தமையால் அவற்றை யூலியன் ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக ஜேர்மனி அரசின் மானத்தைக் கப்பலேற்றும் வகையிலான ஆவணங்களை விக்கிலீக்ஸில் யூலியன் தொடர்ச்சியாக வெளியிடத்தொடங்கினான்.

அவுஸ்திரேலியாவுக்கு உதவி செய்யப்போய் விக்கிலீக்ஸின் கோபப்பார்வையால் தான் இக்கட்டில் சிக்கிக் கொண்டு விட்டதை ஜேர்மனி காலங் கடந்தே உணர்ந்தது. எங்சியிருக்கும் தனது மானத்தையும் தக்க வைத்துக் கொள்வதற்காக - யூலியனைச் சமாதானப் படுத்துவதற்காக - சில வாரங்களின் பின்னர் தியோடர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அதன் பின் தன் தகவலாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகளில் யூலியன் இறங்கினான். அதில் ஒன்றுதான் ரீ.ஓ.ஆர் எனப்படும் மென்பொருளை யூலியன் தன் தகவல் வழங்குநர்களுக்காகப் பரிந்துரை செய்தான். அது என்ன ரீ.ஓ.ஆர்?



யூலியன் தன்னை விடவும் தனது நண்பர்கள் மீதும் தன் தகவலாளிகள் மீதும் மிகுந்த நேசிப்புடையவன். ஏனெனில் விக்கிலீக்ஸின் தொடர்ச்சியான இருப்பு தகவலாளிகளின் கைகளிலேயே தங்கியுள்ளது என்பதால், அவர்கள் மீது ஒரு தூசி விழுந்தாலும் பொறுத் துக்கொள்ளமாட்டான்.

அத்தோடு எதிர்காலத்தில் அத்தகைய சிக்கல்கள் தோன்றிவிடக்கூடாது என்பதிலும் அவன் அக்கறையாக இருந்தான். தியோடர் கைதான பின்னர் யூலியன் தன் தகவல்வழங்கும் கட்டமைப்பை மறுசீரமைத்தான். இதற்கென விசேடமான மென்பொருள்களை தன் தகவல் மூலகங்களுக்குப் பரிந்துரைத்தான்.

விக்கிலீக்ஸுக்கு தகவலை வழங்கும் பாதுகாப்பான பொறிமுறைகளில் முக்கியமானது தான் 'ரி.ஓ.ஆர்' எனப்படும் தகவல் ஊடாட்ட மென்பொருள். ரீ. ஓ. ஆர் ( Tor d The Onion Routing project) என்பது எந்தவொரு வலையமைப்புக்கும் ரகசியத் தகவல்களை அனுப்ப விரும்புபவர்கள் இணையத்தொடர்பில் தங்கள் அடை யாளங்களை மறைத்து, தகவல்களைப் பாதுகாப்பாக அனுப்பி வைப்பதற்கென்றே சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மென்பொருள்.

இணையத் தொடர்பைப் பயன்படுத்தி நாம் மேற்கொள்கின்ற மின்னஞ்சல், மின்னரட்டை, கோப்புப் பகிர்தல் இப்படி நிறைய விடயங்கள் இருக்கின்றன.

இவற்றில் எந்தத் தொழிற்பாட்டை செய்தாலும் நமக்கு இணையசேவையை வழங்குகின்ற சேர்வரில் (பிரதான வழங்கியில்) நாம் யாருக்கு என்ன தகவலை அனுப்புகிறோம், அவற்றைப் பெற்றுக் கொண்டவர்கள் அனுப்புகின்ற பதில்கள் என்ன சாராம்சத்தைக்கொண்டிருக்கின்றன, என்னென்ன இணையங்களை நாம் பார்வையிடுகிறோம் என்பன போன்ற இணைய வழியூடான தொடர்பின் முழுச்சரித்திரமுமே சேகரிக்கப்படும். அதன் மூலம் தான் சைபர் கிரைம் எனப்படுகின்ற இணையக்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளும், அதன் மூலம் குற்றவாளிகளை கையும் மெய்யுமாகப் பிடிப்பதும் சாத்தியமாகின்றது. மிக அண்மையில்கூட தனது வழங்கியின் தகவல்களைப் பகிர மறுத்த 'ப்ளாக்பெர்ரி' என்ற நிறுவனத்துக்கும், இந் திய அரசாங்கத்துக்கும் இது தொடர்பாகப் பெரும் பிரச்சினை ஏற்பட்டது.

ஆனால் இணைய வழங்கிகளை வைத்திருக்கும் எல்லா நிறுவனங்களுமே ப்ளாக்பெர்ரி நிறுவனத்தைப் போன்று, தனது வாடிக்கையாளர்களைக் காப்பாற்றுவதில்லை. மாறாக அரசாங்கங்கள் கேட்டவுடனேயே இந்தா பிடி! என்கிற கணக்காக வாடிக்கையாளர்களின் இணைய அந்தரங்கங்கள் எல்லாவற்றையும் சந்தைக்கு கொண்டுவந்துவிடும்.

**(திரைகள் இன்னமும் திறக்கும்)**

**சுடர் ஒளி வாசகர்களே !**

குடத்தில் இட்ட விளக்காக உங்களுக்குள் மறைந்து கிடக்கும் படைப்புத் திறன்களைக் குன்றின் மேல் தீபமாக்கிட சுடர் ஒளி காத்திருக்கிறது.

சிறுகதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள், எதுவானாலும் அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும்.

படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி,
இல.361
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவுப் பயணம் நிஜமா?

02

## இன்னமும் விலகாத மர்மங்கள்



ராஜ்சிவா

'சூழ்ச்சிக் கோட்பாடு' (Conspiracy Theory) என்று ஒன்று உண்டு. உலகின் ஒவ்வொரு பகுதியிலும் ஆளுமையுடையவர்களாலும், ஆளும் வர்க்கத்தினராலும் நடத்தப்பட்ட மர்மமான நிகழ்வுகளுக்கு எப்போதும் அவர்கள் சார்பில் ஒரு காரணம் சொல்லப்பட்டிருக்கும் சில சமயங்களில் உண்மையாகவும் பல சமயங்களில் கேள்விக்குரியவை யாவுமே அந்தக் காரணங்கள் இருக்கும். இந்த மர்ம நிகழ்வுகளைப் படிப்படியாக ஆராய்ந்து, அவை வேறு விதமாக நடந்திருக்கலாம் எனப் பல கோணங்களில் ஆய்வு செய்து, அந்த நிகழ்வுகளில் இருக்கும் சதிச்செயல்களைப் பகிரங்கமாக உலகிற்குக் கொண்டு வருவது தான் சூழ்ச்சிக் கோட்பாட்டாளர்களின் நோக்கம். நடைபெற்ற நிகழ்வுக்கெனச் சொல்லப்பட்ட காரணத்தையும் சூழ்ச் சிக் கோட்பாட்டின் மூலம் சொல்லப்பட்ட காரணத்தையும் எடுத்துக் கொள்ளும் போது, உண்மை என்பது அவை இரண்டுக்கும் இடையில் நின்றே ஊசலாடும். சூழ்ச்சிக் கோட்பாடுகளில் சொல்லப்படுபவற்றையும் கூட நாம் அப்படியே உண்மை என்றும் எடுத்துக் கொள்ள முடியாது. அதனால் தான் அவை இதுவரை கோட்பாடு என்று அழைக்கப்பட்டு வருகிறது. கோட்பாடுகள் எப்போதும் முழுமையான உண்மைகள் அல்ல.

உண்மையை ஒட்டி அவை இருந்தாலும், அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாதவை. இதனாலேயே பலர், 'அட ! இது சூழ்ச்சிக் கோட்பாடுதானே!' என்று அலட்சியமாக சொல்லிவிடுவார்கள். ஆனால், நடந்த சம்பவங்களின் உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்கு, அவர்கள் தங்கள் உயிர்களையே பணயம் வைத்து உழைத்திருப்பார்கள். எப்போதும் சூழ்ச்சிக் கோட்பாடுகள் ஆதிக்க வர்க்கத்துக்கு எதிரானதாகவே இருக்கும். இதனாலேயே இந்த சூழ்ச்சிக் கோட்பாடுகளைப் பொய்யாக்க தங்கள் பணத்தையும், அதிகாரத்தையும் ஆதிக்க வர்க்கம் பயன்படுத்தும். இந்த வகையில், உலகிலேயே இதுவரை சொல்லப்பட்ட அனைத்துச் சூழ்ச்சிக் கோட்பாடுகளிலும் முதன்மை வகிக்கும் சூழ்ச்சிக் கோட்பாடாகவும், வலிமையான கோட்பாடாகவும் இருப்பது, 'சந்திரனில் மனிதன் காலடியெடுத்து வைக்கவே இல்லை' என்னும் சூழ்ச்சிக் கோட்பாடுதான். கடந்த நாற்பத்தி நான்கு வருடங்களாக "சந்திரனுக்கு மனிதன் சென்றது உண்மைதானா ?" என்ற கேள்வியைக் கேட்க வைத்துக் கொண்டே இருக்கும் முதன்மைக் கோட்பாடு இது. இன்று வரை உலகில் எங்காவது ஒரு மூலையில் ஏதோ ஒரு தொலைக்காட்சியில் இது பற்றி விவாதித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

சந்திரனில் மனிதன், காலடி எடுத்து வைக்கவில்லை என்னும் சூழ்ச்சிக் கோட்பாட்டுக்கு அடித்தளம் அமைத்தவர் பில் கேசிங் (Bill kaysing) என்பவர்தான். இவர் சாதாரணமான ஒரு ஆள் கிடையாது. ரொக்கெட் தயாரிக்கும் தொழில்நுட்பத்தில் தலைமைப் பதவி வகித்தவர் இவர். அமெரிக்காவின் வெற்றியடைந்த தோல்வியடைந்த விண்கலங்கள் அனைத்தின் சரித்திரங்களையும் நன்றாகத் தெரிந்து கொண்டவர் ' அப்போலோ 11 ' சந்திரனில் இறங்கியது என்று சொன்ன மறு வினாடியே, ' அது ஒரு ஏமாற்று வேலை' எனப் பகிரங்கமாகப் பேட்டி கொடுத்தவர். இவரின் கருத்துகளிலிருந்தே சந்திரனில் மனிதன் காலடி எடுத்து வைக்கவில்லை என்னும் சூழ்ச்சிக் கோட்பாடு கருப்பெற்று, படிப்படியாக வளர்ந்து வந்தது. சந்திரனில் மனிதன் இறங்கிய ஆரம்ப காலங்களில் மிகவும் பலமான எதிர்ப்பாகத் தொடங்கிய இந்த கோட்பாடுகள் படிப்படியாக அமைதியாக அடங்கிப் போயிருந்தாலும் இப்போது மிகச் சமீப காலமாக மீண்டும் வலிமையான எதிர்ப்புக் குரலாக எழ ஆரம்பித்திருக்கிறது. அன்று பில்கேஸிங் எதிர்ப்பதற்குச் சொன்ன காரணங்களோடு, இன்றுள்ள அறிவியல் காரணங்களும் சேர்வதால், சந்திரனுக்கு மனிதன் நிஜமாகவே செல்லவில்லை என்ற முடிவுக்கே பலர் வருகின்றார்கள்.

உலகிலேயே வலிமை மிக்க ஒரு நாடு அமெரிக்கா, சந்திரனில் மனிதன் இறங்குவதை, உலகமே தொலைக்காட்சியின் மூலம் பார்த்துக் கொண்டும். வானொலியில் கேட்டுக் கொண்டும் இருக்கும் போது இவர்கள் அதை இல்லையென்று வன்மையாக மறுக்கச் சொல்லும் காரணங்கள் தான் என்ன? அமெரிக்காவின் வெளிப்படையான சாட்சியங்களை விட அப்படி என்ன தான் பெரிய காரணங்களாக அவை இருக்கப்போகின்றன? இன்றைய நவீன உலகம் மீண்டும் இதைக் கையிலெடுத்து மறுப்பதற்கு காரணங்கள் தான் இந்தக் கேள்விகளுக்கான பதில்களை நாம் இப்போதேதேட வேண்டும். விவரமான ஒரு ஆராய்ச்சி மூலம் அந்த உண்மைகளைக் கண்டு பிடிக்க வேண்டும்.ஒரு சூழ்ச்சிக் கோட்பாடாக மட்டும் இதைப்பார்க்காமல், அறிவியல் சம்பவங்களைத் தெரிந்துகொள்ளும் அடிப்படையில் அவற்றை நாம் விரிவாகப் பார்க்க வேண்டும்.

*(மர்மங்கள் தொடரும்)*

# கூர்மையான யோசனைகள்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

உங்களுடைய யோசனைகளை நீங்கள் அடக்கமுடன் அறிமுகப்படுத்துங்கள். அதற்காக நீங்கள் அச்சப்பட வேண்டாம். ஒதுங்க வேண்டாம். அதை எதிர்க்க வேண்டாம். நீங்கள் உயர்ந்தவர் என்பதற்கு அவை ஒரு அங்கீகாரம் என்று புரிந்து கொள்ளுங்கள்.

" உங்களைக் கண்டு பெறாமைப்படுகிறவர்களே உங்களுக்குப் புகழ் மாலை சூட்டுகிறார்கள். பலர் உங்களைப் பார்த்து பெறாமைப்படுவதே நீங்கள் வெற்றி யாளர் என்பதற்கு இலக்கணம்" என்பது ஒரு பழைய பழமொழி.

யாருமே செத்துப் போன நாயை உதைக்க மாட்டார்கள். வயிற்றெறிச்சல் காரணமாக உங்கள் மீது யாரேனும் பொறாமைப் பட்டால் அதற்காக நீங்கள் ஆத்திரப்பட வேண்டாம். நடைமுறை எனும் சல்லடை வழியாக இந்த விமர்சனங்கள் எல்லாம் விழட்டும். பிறகு பார்த்தால் உங்களுக்கு அதன் மூலம் தங்கக் கட்டிகள் கிடைப்பதை கண்டு நீங்களே ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்.

இதற்கு நானே என் அனுபவத்தை ஒரு சான்றாக கூறமுடியும். ஒரு விசா ரணைக் கமிஷன் முன் நான் நிறுத்தப்பட்டேன். அது எனக்கு கடுமையான அனுபவமாக இருந்தது. அதைப் பார்த்த ஒரு பிரபலமான வழக்கறிஞர் அவராகவே எனக்குப் போன் செய்தார். இலவசமாக சில யோசனைகளைச் கூறுகிறேன் என்று சொல்லி அவற்றைத் தெரிவித்தார். அந்த இலவச ஆலோசனைகள் விமர்சனத்துக்கு இலக்காகக் கூடியவை. ஆனாலும் அந்த ஆலோசனைகள் எனக்குப் பெரிய புதையலாக அமைந்தது.

இதேபோல ஒரு சிறிய புத்தக வியாபாரி நெடுந்தொலைவில் இருந்து எனக்குப் போன் செய்தார். புத்தக வியாபாரத்தில் செய்யக் கூடாத ஒரு தவறைப்பற்றி - மிக நாட்டம் உண்டாக்கும் தவறைப்பற்றி -நாலே வார்த்தை சொல்லப்போகிறேன் என்றார். அந்த ஆலோசனை - அந்த விமர்சனம் என்னை மிகப்பெரிய நட்டத்திலிருந்து காப்பாற்றியது. முன்பின் தெரியாத ஒருவருடைய விமர்சனத்தை தான் அலட்சியம் செய்திருந்தால், எவ்வளவு பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கும் என்று இப்போது நினைத்தாலும் அச்சம் ஏற்படுகிறது.

இதனால் பெறப்படும் பாடம் என்ன? தெளிவானது! பகிரங்கமானது. எல்லா விமர்சனங்களையும் வரவேற்று விடுங்கள். அந்த விமர்சனங்களை ஜாக்கிரதையாக சலித்துப் பார்த்தால் தங்க உருண்டைகள் கிடைக்கும். ஆக நீங்கள் சீக்கிரம் செல்வந்தராகி விடுவீங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் உலகம்




## மாயத் தீவில் மந்திரக் கிழவி

குருநாதரின் உருவம் மறைந்ததும். இளைஞர்கள் இருவரும் தம்மிடம் இருந்த மாயக் கண்ணாடியை முன்னர் இருந்த இடத்திலேயே வைத்தனர். பின்னர் இருவரும் அடுத்து என்ன செய்வது என்று கலந்தாலோசிக்கத் தொடங்கினர். "முதலில் இந்தக் குகையை விட்டு வெளியேற வேண்டும் அப்போது தான் மந்திரக் கிழவி பற்றிய மர்மங்களை அறிந்து கொள்ள முடியும்" என்றான் சந்திரவர்மன்.

"ஆனால், நாம் இங்கிருந்து வெளியேறுவதை தன்னுடைய மாயக் கண்ணாடி மூலம் கிழவி கண்டுபிடித்து விடுவாளோ?" என்றான் இந்திரவர்மன்.

"இந்திரா! நமது குருநாதர் சொன்னதை அவதானிக்கவில்லையா? இந்தக் குகையில் நாம் குருநாதருடன் உரையாடியதை மந்திரக் கிழவியால் கண்டுபிடிக்க முடியவில்லை அப்படியானால் மந்திரக் கிழவியின் மாயத்துக்குக் கட்டுப்படாத ஒரு பொருள் இருக்க வேண்டும். முதலில் அதைக் கண்டுபிடிக்க வேண்டும்" என்றான் சந்திரவர்மன்.

அவன் சொன்னதைக் கேட்டதும் இந்திரவர்மனின் முகம் மலர்ந்தது. சந்திரவர்மனுக்கு தன்னை பின் தொடரும்படி சைகை காட்டிவிட்டு, இதுவரையும் குகையில் ஒளி வீசிக் கொண்டிருந்த இரத்தினக் கல்லைக் கையில் எடுத்து நான்கு முறை அழுத்தினான். அடுத்த கணம் இரத்தினக் கல்லில் இருந்து வெவ்வேறு வர்ணங்களில் பலவித ஒளிக்கீற்றுக்கள் புறப்பட்டன. குகையின் சில பகுதிகள் மஞ்சளாகவும், சில பகுதிகள் சிவப்பாகவும், சில பகுதிகள் நீலமாகவும், பச்சையாகவும் வெவ்வேறான நிறங்களில் காட்சியளித்தன. "சந்திரா! குருநாதர் நமக்கு இந்த அதிசயக் கல்லைப் பெறும்போது என்ன சொன்னார் என்று உனக்கு நினைவு இருக்கின்றதா?" என்று இந்திரவர்மன் கேட்டான்.

"நன்றாக நினைவிருக்கின்றதே வெவ்வேறான சக்தி நிலைகளைத் தரம் பிரித்து, அவற்றை வித்தியாசமான வர்ணங்களில் காட்டக் கூடிய சக்தி இந்த அதிசயக் கல்லுக்கு உண்டு என்று குருநாதர் கூறியிருக்கிறார்" என்றான் சந்திரவர்மன்.

"ஆமாம். இப்போது இந்தக் குகையில் உள்ள சக்தி நிலைகளை பிரித்துக் காட்டி இருக்கிறது இந்தக் கல். இந்த சக்தி நிலைகள் கொண்ட மண்ணைப் பயன்படுத்தி மந்திரக்கிழவியை மடக்க வேண்டும்" என்றான் இந்திரவர்மன்.

"அப்படியானால் கிழவியின் கண்ணில் மண்ணைத் தூவப் போகின்றோம்!" என்று கூறி சிரித்தான் சந்திரவர்மன். அதன் பின்னர் இருவரும் ஒவ்வொரு வர்ண மண்ணையும் தனித் தனியாக எடுத்து பரிசோதித்துப் பார்த்தார்கள். அவற்றில் சிவப்பு நிற வர்ணமாய் காட்சி தந்த மண் சற்று வித்தியாசமான தன்மை கொண்டதாக இருந்தது. தம்மிடம் உள்ள மாயக் கண்ணாடியை மீண்டும் வெளியே இளவரசர்கள் எடுத்தார்கள். திரும்பவும் மாயக் கண்ணாடியை குருநாதரின் உருவம் தோன்றியது. இளவரசர்கள் இருவரும் குரு நாதரை வணங்கி நின்றனர். "பிள்ளைகளே! என்னை மீண்டும் அழைத்தமைக்கான காரணத்தை அறியலாமா?" என்றார் குருநாதர்.

*(மந்திரக் கிழவி வருவாள்...)*



## கண்டுபிடியுங்கள்

இங்கு தரப்பட்டுள்ள இரண்டு படங்களிலும் ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைத் தேடிக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

# பயமோ, கோபமோ தோன்றும்போது மனிதனுக்கு அதிக வியர்வை தோன்றுவது ஏன்?

*அறிந்துகொள்வோம்*

பொதுவாக உடலில் உஷ்ணம் தோன்றும் போது மூளையின் ஹைபோதலமஸ் பகுதி, நமது தோலைக் குளிர்விக்க வியர்வைச் சுரப்பிகளைத் தூண்டிவிடுகின்றன. எனவே, வியர்வை சுரக்கிறது. உடல் ரீதியான காரணங்களைத் தவிர்த்து, நமது உணர்வுகளை மூளையின் ஹைபோ தலமஸ் பகுதி, உணர்ச்சி நரம்புகள் மூலமாக வெளிப்படுத்துகின்றன.

இந்நரம்பு மண்டலத்தை சிம்பதடிக் நெர்வெஸ் சிஸ்டம் என்று அழைப்பர். நமக்கு கோபமோ, பயமோ, வெறுப்போ தோன்றும்போது இந்த உணர்ச்சி நரம்புகள் தூண்டப்படுகின்றன.



பொதுவாக, பயம் அல்லது கோபம் உண்டாகும் போது, அந்தச் சூழ்நிலையை எதிர்கொள்ள நமது மூளை தயாராகுகிறது. அதன் வெளிப்பாடே நமக்கு படபடப்பு உண்டாகிறது. கூடவே உடலின் உஷ்ணம் அதிகரிக்கிறது. அதைத் தொடர்ந்து வியர்வை சுர கிறது. ஒரு இக்கட்டான சூழ்நிலையை நாம் நேரடியா க எதிர் கொள்வதா அல்லது அவ்விடத்தை விட்டு ஓ வதா? என்று நம்மைத் தயார் செய்ய மூளையிடும் கட்டளையின் விளைவே இந்த வியர்வை ஆகும்.

# கேள்வி ஒன்று: பரிசு ஆயிரம்

*மாணவ, மாணவியரே! கூப்பனுக்குள் உள்ள கேள்விக்கு என்ன விடை என்று தெரியுமா? தெரிந்தால் உடனே எழுதி கூப்பனைக் கத்தரித்து 23.09.2013 இற்கு முன்னர் அனுப்பிவையுங்கள். சரியான விடை எழுதியோரில் ஒருவருக்கு 1000 ரூபா பணப்பரிசு காத்திருக்கிறது.*

*(வெற்றி பெற்றவர்களின் புகைப்படங்களும் பிரசுரிக்கப்படும். ஆகவே விரும்பியோர் புகைப்படங்களையும் இணைத்து அனுப்பலாம்).*

**கேள்வி:-**

*சர்வதேச சுற்றுச் சூழல் தினம் அனுஷ்டிக்கப்படும் நாள் எது?*

பதில்:- ..................................................

பெயர் :- ..................................................

தரம் :- ..................................................

பாடசாலை :- ..................................................

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**கேள்வி ஒன்று: பரிசு ஆயிரம்.**
**சுடர் ஒளி**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**04**

**கேள்வி ஒன்று; பரிசு ஆயிரம் - 02**

*சரியான விடை* - **நவநீதம்பிள்ளை**

*இந்தப் போட்டியில் ஏராளமான மாணவர்கள் ஆர்வத்தோடு பங்கு பற்றியிருந்தார்கள். அவர்களில் 'நொ தேர்ண் கொம்பியூட்டர்ஸ்' வழங்கும் 1000 ரூபா பரிசினைப் பெறுவதற்காக குலுக்கல் மூலம் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலி -*

**ந.பதிவேந்தன்**

*தரம் - 8 சி. யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி.*

**பாராட்டுப் பெறுவோர்:-**

*01. ச.வைஷ்ணவி. தரம் - 7 கிளிநொச்சி மகா வித்தியாலயம் .*
*02. க.ஜீவனா. தரம் - 8B . மு/ வித்தியானந்தாக் கல்லூரி. (முள்ளியவளை)*
*03. கு.அபிநாஷ். தரம் - 4A. யா/தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி.*
*04. இ.திஷான். தரம் - 11. யா/இந்துக் கல்லூரி.*
*05. ஆர்.டிலோஸ்குமார் . தரம் - 05. நு/வ.ரில்லாமுல்ல தமிழ் வித்தி. கந்தப்பளை.*


**பரிசுக்கான அனுசரணை:-**

NORTHERN COMPUTERS
Innovative Solutions!
#303,Kasthuriyar Road,Jaffna
e-mail : ncjaffna@gmail.com
Cont : Shukoor - 077 555 97 55

FREE:Norton Internet Security With All Laptops

HP Pavilion 15 - e016TU
i3 3rd Generation
4GB Ram
500GB HDD
15.6"LED Screen
WiFi
DVD RW
Laptop Bag
Price :Rs.64,000
01 Year Parts Warranty
02 Years Service Warranty

HP Pavilion G6-2311TU
i5 3rd Generation
4GB Ram
750GB HDD
15.6"LED Screen
WiFi
DVD RW
Laptop Bag
Price :Rs.79,500
01 Year Parts Warranty
02 Years Service Warranty

HP 1000 - 1311TU
Intel Dual Core 3rd Gen
2GB Ram
500GB HDD
14"LED Screen
WiFi
DVD RW
Laptop Bag
Price :Rs.52,500
01 Year Parts Warranty
02 Years Service Warranty

DELL Inspiron - 3521
i3 3rd Generation
4GB Ram
500GB HDD
15.6"LED Screen
WiFi
DVD RW
1GB Dedicated VGA
Laptop Bag
Price :Rs.67,500
01 Year Parts Warranty
02 Years Service Warranty

Toshiba Satellite C850
i3 3rd Generation,2GB Ram
500GB HDD,15.6"LED Screen
WiFi,DVD RW,Laptop Bag
Price :Rs.59,000
01 Year Parts Warranty
02 Years Service Warranty

எம்மிடம் சகல விதமான கணினிகள் , அனைத்து விதமான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் அதன் உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையிலும் நம்பகரமான உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ளலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்சத்திரப்போர்

## பிளவுற்ற நடிகர்கள்



இந்திய சினிமாவுக்கு இது நூற்றாண்டு. குடியரசு தலைவர் முன்னிலையில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரள, ஆந்திர முதல்வர்கள் பங்கேற்க தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை சார்பில் இந்திய சினிமாவின் நூற்றாண்டு விழா வரும் இந்த மாதம் 18 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை சென்னையில் கொண்டாடப்படவுள்ளது. ஆயினும் இந்தக் கலைநிகழ்வு, களேபர நிகழ்வாகிவிடுமோ என்பதுதான் இப்போதைய அதிரடி.

நூற்றாண்டு விழாவுக்காக ஒரு வாரத்துக்குப் படப்பிடிப்புகள் ரத்துசெய்யப்பட்டு நடிகர், நடிகைகள் பங்கேற்கும் கலை நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார், செயலாளர் ராதாரவி ஆகியோருக்கு எதிராக மற்ற நடிகர்கள் அனைவரும் திரள்வதால் இந்த விழாவில் நடிகர் சங்கத் தலைவரும் செயலாளரும் கலந்துகொள்வார்களா என்பதே இப்போதைய சூடான விவகாரம்.

சரத்குமார், ராதாரவி மீது பல்வேறு புகார்களைச் சொல்லி கையெழுத்து வேட்டை நடத்தி வருகின்றனர் முன்னணி நடிகர்கள். அதில் முக்கியமான சில நடிகர்கள் இது குறித்து தெரிவித்த விடயங்கள் வருமாறு-

ஒரு சமயம், நடிகர் சங்கத்தை 'சுடுகாடு' என எம்.ஆர்.ராதா கோபத்தில் விமர்சித்தார். இதை நினைவில் வைத்திருந்த ராதாரவி சங்கத்தில் பதவியேற்கும்போது, 'இது சுடு காடுதான். நான் வெட்டியான் வேலை பார்க்க வந்துள்ளேன்' என்று வர்ணித்தார். ஆனால், அவர் சங்கத்தையே புதைக்கும் வேலையைப் பார்ப்பார் என நாங்கள் யாரும் எதிர்பார்க்கவில்லை.

சென்னை தி.நகரில் நடிகர் சங்கத்தின் அலுவலகம், அரங்கம் அமைந்திருந்தது. அந்தப் பழைய கட்டடங்களை இடித்துவிட்டுப் புதிதாக பலமாடி வணிகக் கட்டடங்கள், புதிய அலுவலகம், அரங்கம் ஆகியவை கட்ட திட்டமிட்டார்கள். எதிர்காலத்தில் சங்கத்துக்கு நிரந்தர வருமானம் வருவதற்கான முயற்சி என்பதால் நாங்களும் வரவேற்றோம். ஆனால் இதை தங்கள் சுய லாபத்துக்காகப் பயன்படுத்திக்கொண்டனர் சரத்குமாரும் ராதாரவியும். இதற்காக சத்யம் சினிமாஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் போட்டனர். சுமார் ஒன்றரை கோடி ரூபாய் முன்பணமாகப் பெறப்பட்டது. ஒப்பந்தம் கையெழுத்தானது 2010 ஆம் ஆண்டு நவம்பர் 25 இல். ஆனால் செயற்குழுவைக் கூட்டி இந்த ஒப்பந்தத்துக்கு அனுமதி பெறப்பட்டது 2011 ஆம் ஆண்டு ஜனவரி 19 இல். அனுமதி பெறுவதற்கு 50 நாள்களுக்கு முன்னரே ஏன் ஒப்பந்தம் போட வேண்டும்? அங்குதான் உதைக்கிறது.

நடிகர் சங்க சொத்துகளை நிர்வகிக்கவும் வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்கவும் ஒரு அறக் கட்டளை நிதியம் உருவாக்கப்பட்டது. அந்த அறக் கட்டளையில் தலைவர், செயலாளர், பொருளாளர் என ஒன்பது பேர் இருக்க வேண்டும். ஆனால் பல ஆண்டுகளாக சரத்குமார், ராதாரவி தவிர வேறு எந்த உறுப்பினர்களும் இதில் இல்லை. கட்டட விவகாரம் பெரிதாகப் பேசப்பட ஆரம்பித்த பிறகே, வாகை சந்திரசேகர் பொருளாளராக நிய மிக்கப்பட்டார்.

இந்தக் கட்டட விவகாரத்தை நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றிருக்கிறார் பூச்சி முருகன். இவரது மனுகுறித்து விசாரித்த நீதிபதி சந்துரு, 'சங்கத்தில் நிர்வாகக் குளறுபடிகள் நடந்திருப்பதும் விதி முறைகளை சரியாகப் பின்பற்றாததும் அப்பட்டமாகத் தெரிகிறது' என்று தீர்ப்பு வழங்கினார். சத்யம் சினிமாஸுக்கு இடத்தை தாரை வார்த்த பின்னர் பழைய கட்டடங்கள் இடிக்கப்பட்டுள்ளன. அவற்றை இடிப்பதற்காக மாநகராட்சி அனுமதி வழங்காத நிலையிலும் அவசரமாக இடித்திருக்கிறார்கள். இது சம்பந்தபட்ட வழக்கு விசாரணையில் இருப்பதால் எம்.ஜி.ஆர்., சிவாஜி ஆகியோரின் கனவு கட்டடமான அந்த இடம் இப்போது எதற்குமே பயனில்லாமல் மக்களின் திறந்தவெளி கழிப்பிடமாக விளங்குகிறது.

சங்கத்தில் இருந்து விஜயகாந்த் வெளியேறியபோது சங்கக் கடனை எல்லாம் அடைத்து விட்டு சுமார் 8 கோடி ரூபாயை சங்க நிதியாக வைத்துச்சென்றார். மாதா மாதம் உறுப்பினர் எண்ணிக்கையும் கூடியிருப்பதால் லட்சக்கணக்கில் பணம் சேர்ந்திருக்க வாய்ப்புள்ளது. ஆனால் இன்று வரை எவ்வளவு நிதி இருக்கிறது என்பதற்கு போதிய வரவு செலவு கணக்குகளே இல்லை. நடிகர் சங்கத் துக்கான வங்கிக் கணக் குகளின் விவரங்களும் சங்கக் கூட்டங்களில் வாசிக்கப் படுவதோ, காட்சிக்கு வைக்கப்படு வதோ இல்லை.

நடிகர் சங்கத்தில் செயற்குழு உறுப்பினர்களாக இருப்பவர்களில் சார்லி, சின்னி ஜெயந்த், சோனா, நளினி தவிர வேறு யாரும் பிரபல நடிகர்களோ, முக்கிய நடிகர்களோ கிடையாது. மற்றவர்கள் அனைவரும் ராதாரவிக்கு வேண்டிய நாடக நடிகர்களும் ராதாரவி வீட்டு வேலைக்காரர்களும்தான். இது 15 வருடங்களாக நடக்கிறது''- இவ்வாறு தங்கள் வேதனையை வெளிப்படுத்தினர்.

சரத்குமார், ராதாரவி ஆகியோருக்கு எதிராக கையெழுத்து வேட்டை நடத்தும் இந்த நடிகர்களுக்கு மற்ற மூத்த நடிகர்களின் ஆதரவும் குவிந்துகொண்டு இருக்கிறது. நாசர், சிவகுமார், சூர்யா, விஷால், கார்த்தி என முக்கிய நடிகர்கள் முன்னின்று இந்தக் கையெழுத்து வேட்டையை நடத்தி வருகின்றனர். இந்த விஷயத்தில் நூற்றாண்டு விழா முடியும் வரை சரத்குமாரும் ராதாரவியும் கெடு கேட்க, எதிர்தரப்பு நடிகர்கள் அனைவரும் காத்திருந்தனர். ஆனால், எதிர்பாராத விதமாக பேரவைக் கூட்டத்தை வரும் 18 ஆம் திகதி கூட்டி அதில் தங்களுக்கு எதிராகக் களம் இறங்கியுள்ள நடிகர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் சரத்குமார் தரப்பு இறங்கியிருப்பதுதான் சமீபத்திய பரபரப்புக்கு காரணம்.

'இப்போது கூட்டத்தைக் கூட்டி விவாதிக்க என்ன அவசரம்? கணக்கு வழக்குகளைக் காண்பிக்கத் தயாரா?' எனப் பதிலுக்குக் காட்டமான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர் எதிர்தரப்பனர். அவர்களுக்கு ஆதரவாக கமல்ஹாசனும் கையெழுத்திட்டிருக்கிறார். நடவடிக்கை எடுத்தால் கமல் உட்பட 32 முக்கிய நடிகர்கள் மீது எடுக்க வேண்டும். கூட்டத்துக்கு செல்போன் கொண்டு வரக்கூடாது என்று சொல்வது வேறு அனைவருக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. 'சிறப்பு அழைப்பாளர்கள் என்னும் பெயரில் ஆஜானுபாவ மனிதர்கள் சிலர் உள்ளே அழைத்து வரப்படலாம்' என்று எதிர்தரப்பு சந்தேகப்படுகிறது. 'சங்கக் கூட்டத்தில் ரகளை என்று செய்தி பரப்பி அதன் மூலம் தங்களின் பக்கம் அரசின் அனுதாபத்தைத் திருப்பத் திட்டமிட்டுள்ளார்கள்' என்றும் சொல்கிறார்கள். அதை அறிந்துகொண்ட எதிர்த் தரப்பு நடிகர்கள் பொதுக்குழுவுக்குப் பொலிஸ் பாதுகாப்புடன் செல்ல திட்டமிட்டுள்ளனர். மேலும் அந்தக் கூட்டத்தை முழுவதுமாக வீடியோ எடுக்கவும் முயற்சி செய்கின்றனர் நடிகர்கள். செப்ரெம்பர் 18 இல் காமராஜர் அரங்கத்தில் ஒரு நட்சத்திர போர் வெடிப்பது நிச்சயம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பித்தன் பதில்கள்

# மூன்றாவது உலகப் போர் தண்ணீராலா?

சி.சிவரோகினி,
கிளிநொச்சி.

கே: மூன்றாவது உலகப்போர் தண்ணீருக்காகத்தான் மூளும் என்று ஒரு புத்தகத்தில் படித்த நினைவு. இது உண்மையா பித்தரே?

ப: இப்பவே 'தண்ணியாலதானே' ஊரெல்லாம் கொல்பாடாக்கிடக்குது. ஆனாலும் நீங்கள் புத்தகத்தில வாசிச்ச தண்ணி வேற. இந்தத் தண்ணி வேற. பெற்றோல்யம் மாதிரி தண்ணிய காசு குடுத்து வாங்கவேண்டிய நிலை ஒரு பத்துப் பதினைந்து வருசத்துக்கு முதல் இங்க இருக்கேல்ல. ஆனால் அண்டைக்கொரு விசிற்றர் எங்கட வீட்டுக்கு வந்தார். வந்தவற்ர கையில ஒரு மினரல் வோட்டர் போத்தல். அவரைப்பாத்து "நாங்களென்ன பச்சத்தண்ணியும் தரமாட்டம் எண்டு நினைச்சோ உந்தத் தண்ணிப் போத்திலக் கொண்டு வந்தனீங்கள்?" எண்டு கேட்டன். அதுக்கு அவர் சொன்னார் "எனக்கு கிணத்துத் தண்ணி ஒத்துக்கொள்ளாது. வீட்டில கூட இதுதான் பாவிக்கிறது" எண்டார். எனக்கு ஷொக்காப் போட்டுது. ஏனெண்டால் எங்கட ஊரிலேயே அவையின்ர வீட்டிலதான் நல்ல தண்ணி. அதை வாயில வைச்சால் அமிர்தத்தை வைச்ச மாதிரி இருக்கும். அவரே இப்பிடிச் சொன்னால் மற்றச் சனங்கள் என்ன செய்யும்.



இப்பிடி எங்களிட்ட இருக்கிற நீர்வளத்தை நாங்கள் கவனிக்காமல் எல்லாரும் 'ரெடிமேற்' தண்ணிக்கு மாறிக் கொண்டிருக்கிறோம். அதை என்ன சந்திரனில் இருந்தா கொண்டுவருகினம். இப்பிடி போத்தல் தண்ணி அடைக்கிறதால நதிகள், ஆறுகள் எண்ட நீர் நிலையெல்லாம் வத்தத் தொடங்குது. இதால ஒருகட்டத்தில வறட்சி வந்து எல்லா நீர்நிலையும் ஒரு சொட்டுத் தண்ணி கூட இல்லாமல் காய்சு போயிடும். அப்ப ஒரு போத்தல் தண்ணிக்காக லட்சக்கணக்கிலையும் செலவழிக்க றெடியா இருப்பம். ஆனால் தண்ணி மட்டும் காணக்கிடைக்காத அருமையான பொருளா மாறியிருக்கும். எது பெறுமதியானதோ அதுக்காகத்தானே நாங்கள் சண்டைபிடிக்கிறது வழமை. எப்பிடியும் எல்லாரும் எதிர்வுசொல்லுற மாதிரி அடுத்த உலக யுத்தம் தண்ணிக் காண்டிதான் நடக்கும். அதில மாற்றமில்ல.

ந.சசிக்குமார்,
சுன்னாகம்.

கே: இப்போதெல்லாம் திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டாலும் வீடுகளில் நடப்பதில்லை. எல்லோரும் மண்டபங்களிலேயே திருமணங்களை நடத்த விரும்புகிறார்களே. இது ஏன் பித்தா?

ப: கோடிக் கணக்கில காசைக் கொட்டி, ஊர் முழுக்க கட்டி வைச்சிருக்கிற கலியாண மண்டபக் காரருக்கு உழைப்புக் காட்டத்தான் இப்பிடிச் செய்யினம் போல. இப்பவெல்லாம் முந்தினமாதிரி கூட்டுக் குடும்ப வாழ்க்கையில்ல. இன சனமெல்லாம் எட்ட எட்டத்தான் நிண்டு பழகுகினம். அதிலையும் அரைவாசி வெளிநாடுகளுக்குப் போட்டுதுகள். ஒரு நல்லது கெட்டது செய்யவேணும் எண்டால் ஆக்களப் பிடிக்க அலையவேண்டியிருக்கு. முந்தியெண்டா சொந்த பந்தமே வந்து தங்கட வீட்டு வேலை மாதிரி கலியாண வீட்ட ஒப்பேத்திப் போட்டுத் தான் போவினம். இப்ப எல்லாரும் எப்ப தாலிகட்டுற நேரமோ அப்ப ஒருக்கா எட்டிப் பாத்திட்டு போட்டோவுக்கும் போஸ் குடுத்திட்டு, என்வலப்பில காசை மடிச்சுக் குடுத்திட்டு, வரிசையில நிண்டு சில்வர் தட்டில புரியாணியைப் போட்டு வெட்டிப் போட்டு பறந்திடுவினம். இந்த லட்சணத்தில என்னெண்டு வீடுகளில கலியாணம் செய்ய முடியும். அதோட எங்கட ஆக்களுக்கு வேலை செய்யவும் இப்ப சரியான பஞ்சி வந்திட்டுது. இருந்த இடத்திலேயே எல்லாத்தையும் செய்யவேணும் எண்டு ஆசை. ஆனால் வீடுகளில விசேசங்கள வைச்சால் ஓடித் திரிஞ்சு வேலை செய்ய வேண்டியிருக்கும். இது அவைக்கு ஆகாது கண்டியளோ. அதாலதான் காசு போனாலும் பரவாயில்லை எண்டு மண்டபங்களில வைக்கினம். முந்தி "கலியாணவீட்டுக்குப் போட்டுவாறம்" எண்டுதான் சொல்லுறவ. இப்ப அதை மாத்தி "கலியாண மண்டபத்துக்குப் போட்டுவாறம்" எண்டு சொல்லுற அளவுக்கு நிலைமை வந்திட்டுது.



## சொற்சிலம்பம் போட்டி இல: 587

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 5 | 6 | 7 |
| 8 | | | | | ■ | 9 | |
| 10 | | ■ | | ■ | 11 | | ■ |
| | ■ | 12 | ■ | 13 | | ■ | 14 |
| 15 | | | | ■ | 16 | 17 | |
| | ■ | | ■ | 18 | ■ | 19 | |
| ■ | 20 | ■ | 21 | | 22 | | ■ |
| 23 | | | | ■ | | ■ | ■ |

அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### மேலிருந்து கீழ்

1. வேண்டுதலை முன்னிட்டு கோயிலுக்கு நடந்தே மேற்கொள்ளும் பயணம்.
2. ஆயத்தம்
3. பெண்கள் அதிகமாக அணிவது
4. மிதிப்பதன் மூலம் செல்லக் கூடிய ஆளை ஏற்றிச் செல்லத்தக்க மூன்று சக்கர வாகனம்
6. சிறு குழந்தை
7. திக்கு (பெயர்ச் சொல்)
11. சுத்தம்
12. வசைபாடு
14. பெண்கள் சுற்றிவந்து கைகொட்டி ஆடும் நடனம்
17. உயிரைக் கவர்பவன்
18. பனை மட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்படும் இழை
20. விரல்களை அகல விரித்த நிலையில் சுண்டுவிரல் நுனியிலிருந்து கட்டைவிரல் நுனிவரை உள்ள தூரம்
21. கற்பிப்பவர்
23. ஒரு தமிழ் மாதம்

### இடமிருந்து வலம்

1. நடந்துசெல்பவன்
5. திருமதி
8. ஆக்க
9. சவுக்கு
10. எவர்
11. விதையைப் பரவலாக விழச்செய்தல்
13. பழுக்காதது
15. ஓர் அளவுக்கு மேல் உண்ண முடியாது வெறுப்பு ஏற்படுதல்
16. மத்தி
19. எகிப்தில் பிரமிட்களுக்குள் பதப்படுத்தி வைக்கப்பட்டுள்ள மனித உடல் (நடு எழுத்து 'ம்' நீங்கலாக)
21. முஸ்லிம்களின் வேதநூல்
23. உடன் வைத்திரு

### சொற்சிலம்பம் போட்டி இல. 587

சொற்சிலம்பம் போட்டி 587 க்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 2 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 02 ஆம் மற்றும் ஒக்ரோபர் 09 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 585 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.பதிகம், 2.குருவி, 3. புதன், 4. அறுசுவை, 5. திகதி, 8.ஞமலி, 10. தும்மல், 11. மேலதிக, 12.ஆயாசம், 13. விதை, 14. சாமி, 17. ஆறு.

**இடமிருந்து வலம்**

1.பகுப்பு, 4.அவதி, 6.தவறு, 7. கவிஞன், 9.சுருதி, 10.துவை, 11.மேலிடம், 12.ஆவி, 14. சால, 15.மரியாதை, 16.மிதி, 17.ஆல், 18.கயிறு, 19.அம்மி

### போட்டி இல. 584 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** — செ.சின்னத்துரை, இல.131 - டி - 10, உருத்திரபுரம்.

**2ஆம் பரிசு** — ஜெ.கிதுர்ஷிகன், இல. 36/35, கண்டிவீதி, சுமேதகம, திருகோணமலை.

**3ஆம் பரிசு** — ச.பரமேஸ்வரி, இல.43/31, திசவீரசிங்கம், சதுக்கம் மேற்கு, மட்டக்களப்பு.

### பாராட்டுப் பெறுவோர்

(1) வஸந்தா பாலேந்திரா,
இல.21, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை,
கொழும்பு - 06.

(2) திருக்குமரன் நாகேந்திரன்,
இல.11 3/1, நெல்சன் இடம், வெள்ளவத்தை,
கொழும்பு - 06.

(3) ம.குருச்சந்திரன்,
இல.39/24, சிவன்வீதி, திருகோணமலை.

(4) அ.இ.பாக்கியராஜா,
இல.88/1, பசல்ஸ் ஒழுங்கை, கொழும்பு - 06.

(5) பொ.பாலசுப்பிரமணியம்,
பிரதான வீதி, தம்பிலுவில்.

(6) வை.எல்.இமாம்,
பாலச்சோலை, அட்டாளைச்சேனை - 10

(7) திருமதி முகுந்தன் ஜெயசோதி,
இல.93 2/5, பீட்டர்சன் வீதி, கொழும்பு - 06

(8) எம்.எம்.மலர்விழி ஜேசுதாசன்,
இயேசு இல்லம்,
இல - 155/07, ஜெம்பட்டாவீதி, கொழும்பு - 13.

(9) திருமதி எஸ்.பாக்கியநாதன்,
பிரதம நூலகர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்,
இல.7. 57 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06

(10) செ.நவனீதன்
மே/பா.வே.இராசநாயகம்,
சோறன்பற்று, பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடேல் பாலசிங்கம்

# சுதந்திரவேட்கை

**நாம் உயிர்வாழ வேண்டும் என்பதற்காக தமது உயிரையும் கொடுக்க தயாராக வந்தவர்கள். எமது பயணத்திற்கு அச்சுறுத்தலாக சிறீலங்கா கடற்படைப் படகுகள் வருமேயானால் அவற்றோடு மோதி அவற்றை அழித்தொழிக்கும் முடிவோடு வந்து கொண்டிருந்த ஆண்களும் பெண்களும் இவர்கள்.**

**நா**ம் பிரிய வேண்டிய வேளை வந்து விட்டதை உணர்ந்தேன். படகின் வெளியிணை இயந்திரத்தின் விசிறிகள் சுழன்று,சுழன்று கடலைக் கடைய கடல் நீர் வெண்நுரையாக வழிந்து கொண்டிருந்தது. பதினேழு ஆண்டுகளாக நாம் வாழ்ந்த மண்ணை,நாம் நேசித்த மண்ணை, நாம் கூடி வாழ்ந்த மக்களை விட்டுப்பிரிந்து செல்லும் நேரம் நெருங்கிவிட்டது. கரையிலே எம்மோடு கூடிப்பழகிய விடுதலைப்புலிப் போராளிகள்,இளம் பெண்களும், ஆண்களும், பழைய நண்பர்களுமாக எல்லோருமே "போய்வாருங்கள்" என்று கையசைத்த படியே கரை நீளம் நின்றார்கள். நீலம் பாரித்த கரையோ நீர்ப்பரப்பிலிருந்து இந்து மாகடலின் மங்கலான ஆழப்பகுதிக்குள் படகு மெதுவாக எம்மை உந்திச் சென்றபோது, கரையிற் தென்பட்ட மனித உருவங்களும் நீள் கரையோர குளமாகிவிட்ட எனது கண்களில், கடலோர நிலப்பரப்பு ஒரு மெல்லிய கறுப்புக் கீறாக மறைந்து கொண்டிருந்தது. என்னில் ஒரு பகுதியைச் பின்னால் விட்டுவிட்டு நான் போய்க்கொண்டிருந்தேன்.

எம்மை எதிர்கொண்டு ஓடி வந்தது இந்து மாகடல். நாம் பிசகான வேளையில் வந்திருக்கின்றோம் என்பதையும்,அடுத்துவரும் பல மணிநேரம் வாழ்க்கையே வெறுக்கும் அளவிற்கு நிலைமை மோசமானதாக இருக்கப் போகின்றது என்பதையும் அது தயங்காமல் எமக்கு உணர்த்தியது. வேண்டாத விருந்தாளிகளாக நாம் அந்தப் பரந்த நீர்ப்பரப்பில் நின்றோம். மேலெழுந்து சுழற்றியடித்த அலைகள் வெளிப்படையாகவே தமது சீற்றத்தை காட்டின. விடுதலைப் புலிகளின் கடற்படைத்தளபதி சூசை, படகின் அணியத்தில் கட்டளை நிலையெடுத்து நின்று, படகைப் பொறுப்போடு நேர்த்தியாகச் செலுத்திக் கொண்டிருந்தார். கொந்தளிக்கும் கடலிலே, சீறியெழும் அலைகளினூடாக அசையும் அவரது அணியினரும் இலகுவாகப் படகோட்டும் இலாவகம் கண்டு நான் மரியாதை கலந்த வியப்போடு நின்றேன். வெறியாடும் கடல் மீது தடுமாறிச் செல்லும் படகில் உறுதி தளராது அவர்கள் கால்பதித்து நின்றார்கள். குளிர்நீர் படகு மீது சவுக்கடியாக விழுந்து அவர்களைத் தெப்பமாக நனைத்த போதும் கடமையில் கண்ணாக நின்று செல்லும் திசையின்இலக்கைக் குறித்தை படகினை நுட்பமாக இயக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள்இளம்போராளிகள் தான். ஆயினும் வயதிற்கு மிஞ்சிய சாமர்த்தியமும் தன் நம்பிக்கையும் அவர்களிடம் இருந்தது. சினந்து, எழும் அலைகளின் மிரட்டல்களுக்குத் கிறங்காது, கடலும் படகும் ஆட, தாமும் லாவகமாக அந்த ஆட்டத்திற்கு ஒத்திசைவாக அசைந்தவாறு அவர்கள் படகோட்டினார்கள். தளபதி சூசை காட்டிய திசையிற் பார்த்தோம். எமக்குப் பின்னால், தூரத்திலே, மங்கலாக இரண்டு கரும்புள்ளிகள் தெரிந்தன. இரண்டும் படகுகள். எமது வேகத்திற்கு அனுசரணையாக வந்து வந்துகொண்டிருந்தன. நாம் சென்று கொண்டிருந்தது போன்றே அதே மாதிரியான படகுகள். ஆனால் தூரத்தில் சிறிய உருவத்தில் தெரிந்தன. துள்ளிப் பாய்ந்து, முல்லைத்தீவுக் கடற்பரப்பை உழுதபடி வந்துகொண்டிருந்தன. எமது கவசங்கள் இவை. துணிச்சல், தியாகம், அர்ப்பணிப்பு - அவற்றோடு வெடி மருந்துகளும் நிரப்பிய படகுகள். அவர்கள் கடற் கரும்புலிகள். எமதுபாதுகாப்புக்காக அனுப்பப்பட்டவர்கள்.

நாம் உயிர்வாழ வேண்டும் என்பதற்காக தமது உயிரையும் கொடுக்கத் தயாராக வந்தவர்கள். எமது பயணத்திற்கு அச்சுறுத்தலாக சிறீலங்கா கடற்படைப் படகுகள் வருமேயானால் அவற்றோடு மோதி அவற்றை அழித்தொழிக்கும் முடிவோடு வந்து கொண்டிருந்த ஆண்களும் பெண்களும் இவர்கள். எமது உயிர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக எத்தகைய தியாகத்தையும் புரிய மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது, இந்த அன்பிற்கும், மதிப்புக்கும் தகுதியுடையவள் அல்ல என நான் உணர்ந்து கொண்டது இது தான் முதற்தடவையல்ல. தளபதி சூசையை எனக்கு நீண்ட காலமாகத் தெரியும். சிங்களக் கடற்படையால் எழக்கூடிய ஆபத்துக்கள் பற்றி அவர் நன்கறிவார் என்பதும், அப்படியான ஆபத்தான சூழ் நிலை எழுந்தால் அதனை சாமாளித்து வெற்றி கொள்ளும் திறனாற்றல் அவரிடமுண்டு என்பதிலும் எமக்கு அசையாத நம்பிக்கை இருக்கிறது. ஆனால் எனது கணவர் பாலாவைப் பொறுத்தவரை அவருக்கு மேலதிகமாக ஒரு ஆபத்து இருந்தது. அது அவருக்கு உள்ளே, அவருடைய உடலில் இருந்தது.

பாலவுக்கு சிறுநீரக நோய். சிறுநீரகச் செயற்பாடு பாதிக்கப்பட்ட நாட்பட்டிருந்த வியாதி திடீரென சமீபத்தில் தான் கடுமையாக்கி அவர் தப்பிப் பிழைத்திருந்தார். அவர்பிழைத்தது அதிசயம்தான். அவரைப் பராமரித்துவந்த மருத்துவர்களின் கருத்து அது தான். இருபத்தைந்து ஆண்டுகளாக நீடித்த நீரிழிவு நோய் அவரை நன்றாகப் பதம் பார்த்து விட்டது. அவரது நோயின் நிலைமையச் சோதித்து பார்க்கக் கூடிய மருத்துவக் கருவிகள் எதுவும் முல்லைத்தீவில் இருக்கவில்லை. இதனால் அவரைச் சோதிக்கவோ, அவரது நோய் எத்தகைய கடுமை நிலை கண்டிருக்கின்றது என்ற விளக்கம் பெறவோ முடியவில்லை.

**விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 1**

(பதிவு தொடரும்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பம்பல் பரமசிவம்

மனிசன் நான், நாய் படாப் பாடு படுகிறன்.

அதுக்கை நாய் வேறை கடிச்சுப் போட்டுது. ஆசுபத்திரிக்குப் போனால், 'பதினைஞ்சு நாளைக்கு நாயைப் பார்த்திட்டு வந்து ஊசி போடுங்கோ எண்டு' சொல்லிப் போட்டினம். நாய் வளர்க்கிற வீட்டுப் பக்கம் போக அவை 'என்னடா அது? இவர் பம்பல் அண்ணை எங்கடை வீட்டை அடிக்கடி நோட்டம் விடுகிறார்?' எண்டு அவையளுக்கு ஒரு சந்தேகம். பிறகு அவையளிட்டை ஒரு மாதிரிச் சொல்லி இதுதான் விசயம் 'உங்கடை நாய் என்னைக் கடிச்சுப் போட்டுது. அதுதான் அந்த நாய் ஒரு பத்துப் பதினைஞ்சு நாளை யுக்கை செத்தால் ஒருக்கால் வந்து ஆசுபத்திரியிலை சொல்லச் சொன்னவை அதுதான் செத்துப் போச்சுதோ? இருக்குதோ எண்டு அடிக்கடி பார்க்கிறனான்'

விசயத்தைச் சொன்னப் பிறகு வீட்டுக் காறர் கேட்டிச்சினம் 'வெள்ளை நாயோ. கறுத்த நாயோ கடிச்சது' எண்டு. 'வெள்ளை நாயெண்டு' சொன்னன். அவையின்ரை வீட்டில ரெண்டு வெள்ளை நாய் நிக்கிதாம். கடிச்சது 'கடுவனோ? பெட்டையோ?' எண்டு கேட்டிச்சினம். 'நான் நாய் துரத்த சயிக் கிளாலை விழுந்து கிடக்க கடிச்சுப் போட்டுது. அதுக்கை உதை எப்பிடிப் பார்க்கிறது? எதுக்கும் ரெண்டு நாயையும் ஒருக்காற் பாருங்கோ' எண்டு சொல்லி வைச்சன்.

தற்செயலாக அந்த நாய் செத்தால் உற வினருக்குப் போய்ச் சொல்லுறது போலை, ஒருக்காற் போய் ஆசுபத்திரியிலை சொல்ல வேணும். வெளிநாட்டிலை ஒருத்தருக்கு நாய் கடிச்சால் அதை இணையத்தளங்களிலை போட்டு பெரிசாகக் காட்டி, கடிபட்ட வருக்கு நட்ட ஈடு அது, இது எண்டு எல்லாம் எடுத்துக் கொடுப்பீனம். இஞ்சை நாய்க் காற ருக்கு எதிராகக் கொம்பிளயின்ட் கொடுக்கப் போனால் நாங்கள்தான் நட்டப்பட வேண்டி வரும்.

இப்ப அறுபது வயதாய்ப் போச்சுது. சீவியத்திலை இப்பதான் ஒரு நாய் கடிச்சுக் கிடக்குது. என்ன கெட்ட காலத்துக்கு வாய் வைச்சுதோ, தெரியேல்லை. பேப்பரிலை இந்த நாயளைப் பற்றி ஒரு கட்டுரை எழுதின னான் அதுக்குப் பிறகு தான் கடிச்சிருக்குது. அதுவும் ஒண்டும் கூடாததாக எழுதவில்லை.

இது தான் நான் எழுதின விடயம். 'நீங்களும் ஒருக்கா வாசிச்சுப் பாருங்கோ!' ஏதும் வித்தியாசமாக இருக்குதா எண்டு:-

படத்தில் நாயும் அதனை வளர்த்தவரும் காணப்படுகின்றனர். வலது பக்கம் நிற்பது நாய். இடதுபுறம் நிற்பது அதனை வளர்த்தவர்.

# நாய் படாப் பாடு

நாய்கள் மீண்டும் ஒரு முறை தலைப்புச் செய்தியில் இடம்பெறத் தொடங்கிவிட்டன.

சில வீடுகளுக்கு நாம் செல்லும்போது எம்மை வரவேற்கும் வரவேற்பு வார்த்தைகள் 'கடி நாய் கவனம்'.

ஒரு வீடு.. உயர்ந்த மதில், உயரமான கேற் கேற் நடுவில் தொங்கிக் கொண்டிருந்த வாசகம், 'கடிநாய் கவனம்'.

காற்சட்டையோடு நின்ற அந்தப் பக்கத்து வீட்டு குடிசைப் பையனைக் கேட்டேன். "உண்மையில் அந்த வீட்டில் நாய் நிற்கிறதா? அது கடிக்குமா?"

''அந்த வீட்டில் நாய் நிற்கிறது அது கடிக்குமா தெரியாது. ஆனால் அந்த வீட்டு ஐயா ஒரு கடி நாய். எந்த நேரமும் தமது மனைவி, பிள்ளை களுடன் 'வள்ளென்று' நிற்பார். வெளியார் ஆரும் வந்தால் சொல்லவே தேவையில்லை. வள், வள்தான்" என்றான் பையன்.

சின்னப் பையன் தானே.. பலதையும் பத்தையும் சொல்வான்.

கூட நின்ற மற்றைய பையன் சொன்னான், "அந்தப் போட் பலகை அந்த நாய்க்காகத்தான் போடப்பட்டுள்ளதாக" அந்த நாயைக் கவன மாக இருக்கச்சொல்லித்தான், 'கடி நாய்! கவனம்!!'. எனத் தங்களது நாயை எச்சரிக்க வீட்டுக்காரன் போட்ட போட் பலகை என்றான். (கேற் 'நடுச் சென்ரறில' அந்த அறி வித்தல் பலகை தொங்குவதால் அது போட் பலகைதான்.)

முதலாமவன், 'நாய்களுக்கு வாசிக்கத் தெரி யாது. ஆகவே சனத்தை எச்சரிக்கப் போட்ட அறிவித்தல் தான் அது' என்று வாதிட்டான்.

நாய்களுக்கு வாசிக்கத் தெரிந்தால்.இப்போ நிறையச் சந்தோசப்படுங்கள். வீதி விபத்துச் செய்திபோல, அன்றாட தினசரிகளில், நாய்ச் செய்திகளும் அதிகளவு இடம் பெறுகின்றன. செய்தியுடன் படங்களும் போட்டால் மகிழ்ச்சி இன்னும் இரண்டு மடங்காகும்.

நட்ட நடு வீதியில் நாயினால் கடியுண்ட பாதசாரி, என்று செய்தி போட்டு - படத் தையும் போட்டால், நாய் எவ்வளவு மகிழ்ச்சி அடையும். நாயினால் கடியுண்ட மனிதனும், நாயும் என்று படத்தைப் போட்டுவிட்டு, -படத்தில் இடது பக்கம் நிற்பவர் கடியுண்ட மனிதர். வலது பக்கம் கடித்த நாய் என்று குறிப்புப் போடாவிட்டால், இடது பக்கம் நிற்பது நாய். வலது பக்கம் நிற்பவர் மனிதன் என்று மாறி வாசகர்கள் விளங்கிக் கொள்ளவும் வாய்ப்பு உள்ளது. வாசகர் அப்படி மாறி விளங்கிக் கொள்ளமாட்டார்கள். அவைக்கு நாய் எது, மனிசன் எது எண்டு தெரியும். ஆனால் அந்தப் படத்தைப் பார்க்கிற நாய், அப்படி மாறி நினைத்துக் கொள்ளாமலிருக்க, வலது பக்கம் நிற்பவர் வெற்றி பெற்ற நாயின் வளர்ப்பாளர். இடது பக்கம் நிற்பது நாய் என்று ஒரு அடிக் குறிப்புப் போடுவது அவசியம்.

இவ்வளவு தான் நான் நாயைப் பற்றி பேப் பரிலை எழுதினது.. அதுக்குப் போய் இந்தக் கடி கடிச்சிருக்கே.....!

# கோச்சடையான் முன்னோட்டம்

ரஜினியின் கோச்சடையான் படத்தின் திரைமுன்னோட்டக் காட்சிகள் வெளி யாகியுள்ளன.

ரஜினியின் கோச்சடையான் படப்பிடிப்பு முடிவடைந்து, பின்னணிப் பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன.இந்த நிலையில் படத்தின் முன்னோட்டக்காட்சி விநாயகர் சதுர்த்தியன்று வெளியாகும் என்று கோச்சடையான் இயக்குனர் சௌந்தர்யா அறிவித்திருந்தார். இதன்படி கடந்த 9 ஆம் திகதி அந்த முன்னோட்டக்காட்சி வெளியிடப்பட்டது.

இந்த முன்னோட்டத்தில் முதலில் பிரமாண்ட அரண்மனை ஒன்று காண்பிக் கப்படுகிறது. அதன்பிறகு பெரிய மைதானம் ஒன்றை காட்டுகின்றனர்.தொடர்ந்து குதிரை படை வீரர்களுடன் ரஜினி வாளோடு பாய்ந்து வருகிறார். பறந்து சண்டையும் போடுகிறார். படை வீரர் களுடன் பிரமாண்ட பாடல் காட்சியிலும் கம்பீரமாக நடந்து வருகிறார். சித்தர் கோலத்தில் காலை உயர்த்தி கையில் படிக்கும் காட்சி பிரமிக்க வைக்கிறது. ஏ.ஆர்.ரகுமான் பின்னணி இசையில் மிரட்டியுள்ளார்.




அனிமேஷனில் ரஜினி இளமையாக தெரிகிறார். நடை, நடனங் களில் வசீகரம். இதனால் வெளியான அன்றே லட்சக்கணக் கானோர் இதனைப் பார்த்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Green City Apartments

# உங்கள் கனவுகள் நனவாகுமா???...

தற்போது கொழும்புக்கு நடந்து வரும் தூரத்தில்
தொடர்மாடி வீடமைப்புத் திட்டம்

ரூபா. 1,285,000/=
(ரூபா. பன்னிரண்டு இலச்சத்து எண்பத்தையாயிரம்)

- கொழும்பு 15 மட்டக்குளியவிற்கு நடந்துவரும் தூரத்தில்
- பெட்டாவுக்கு 30 நிமிடத்தல் செல்லலாம்
- நீர்கொழும்பு வீதிக்கு 10 நிமிடத்தில் செல்லலாம்
- லைசியம் சர்வதேச பாடசாலை, கார்கில்ஸ் பூட்சிட்டி, கீள்ஸ் சுபர் மற்றும் கோவில் என்பன தெரியும் தூரத்தில்
- மேல்மாடியிலிருந்து கொழும்பு நகர் மற்றும் கடற்கரையை பார்வையிடலாம்.

*Housing Unit consists of Living, Dinning with Pantry, Bedroom with attached toilet (Commode fitted), Balcony and servant's toilet.*


விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டதிற்கு இன்றே வருகைதந்து **Housing Unit** ஐ ரூபா. 5,000/-ம் செலுத்தி முன்பதிவு செய்துகொள்ளுங்கள் தாமதத்திற்கு வருந்தாதீர்கள்.

இடத்திற்கு செல்லும் மார்க்கம்: அலகந்தவிற்கு வந்து பள்ளியாவத்த வீதியில் இடதுபக்கம் திரும்பி காமில் மாவத்தையில் இடத்திற்கு செல்லலாம்.

மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள

தமிழில் : 0776 959197 ராஜாவுடன் தொடர்பு கொள்ளுங்கள்
ஆங்கிலத்தில் : 0776 147065 ஜெரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்
சிங்களத்தில் : 0776 216016 குமாரவுடன் தொடர்பு கொள்ளுங்கள்

Nimavin Developers (Pvt) Ltd
187, Ward Place, Colombo 07.
Tel : (011) 2695714 / (011) 2695728
Visit our Web Site : www.nimavingreenpark.com



# அடைமழை

பிரபு தேவா காட்டில் இப்போது அடைமழைதான். தற்சமயம் அவர் இயக்கிவரும் 'ராம்போ ராஜ்குமார்' படத்தை நவம்பர் 26 இல் வெளியிடவுள்ளார். அடுத்து 'கோ' படத்தின் ஹிந்தி மொழிப்பதிப்பை அஜய் தேவ்கனை வைத்து இயக்கும் பிரபுதேவா. 2014 ஏப்ரலில் சயிஃப் அலிகானை வைத்து இன்னொரு படம் இயக்கவுள்ளார். இந்தப் படத்தில் கரினா கபூர், தீபகா படுகோனா இருவரும் நடிக்கிறார்கள். இதுவும் தெலுங்குப்படமொன்றின் தழுவல்தான். இந்தப் படத்தை 2015 ஜனவரியில் வெளியிடத் திட்டமிட்டுள்ளார் பிரபுதேவா.

செப்டம்பர் 15ஆம் திகதி வரை மாத்திரமே

தலைசிறந்த ஹோம் தியட்டர் மலிவு விற்பனை

LG

ஹோம் தியட்டர் சிஸ்டம் DH6320
- 10,000W (PMPO)
- சுவரில் பொருத்தக்கூடிய ஸ்பீக்கர்
- USB
- HDMI ஊடாக Full HD உருபெருக்கம்

HDMI கேபல் இலவசம்
ரூ.45,990

ஹோம் தியட்டர் சிஸ்டம் - DH6520
- 10,000W
- சுவரில் பொருத்தக்கூடிய ஸ்பீக்கர்
- USB
- HDMI ஊடாக Full HD உருபெருக்கம்
- போர்டபல் இன், பீஸ்ட் ப்லாஸ்ட், செமி கரோக்கி

ரூ.49,990
தள்ளுபடி ரூ.15,000
HDMI கேபல் இலவசம்
கண்கவர் தள்ளுபடி விலை ரூ.34,990

விரையுங்கள்
மீண்டும் நீங்கள் பெறமுடியாத
மலிவு விலையில்

5.1 ஹோம் தியட்டர் சிஸ்டம் DH4530
- 3300W
- HDMI 1080P
- DVD/USB
- FM ரேடியோ
- Portable In

ரூ.32,990
தள்ளுபடி ரூ.5,000
கண்கவர் தள்ளுபடி விலை ரூ.27,990

ஹோம் தியட்டர் சிஸ்டம் - DH7620
- 15,000W (5.1Ch)
- 1080p Full HD உருபெருக்கம்
- USB
- HDMI Out
- Portable In
- Bass Blast
- செமி கரோக்கி

ரூ.59,990
தள்ளுபடி ரூ.15,000
கண்கவர் தள்ளுபடி விலை ரூ.44,990

வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

அழையுங்கள் 011 5999000
LIKE us on Facebook: www.facebook.com/AbansLK
இணையத்தளத்தினூடாக கொள்வனவு செய்வதற்கு Abans.com
நாடெங்கிலுமுள்ள அபான்ஸ் காட்சியறைகளில் பெறலாம்
Abans

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org